ஷேக்ஸ்பியரின்

# மெக்பெத்



ாசன்

Library
B13240565D
NOT FOR LOAN
SHA
ColorMarq RN11-21B5 01/03/2002
All rights reserved.

All rights reserved.

NATIONAL LIBRARY BOARD
B13240565D

þÿAll rights reserved. ª¿. •¿°

þÿAll rights reserved. ª¿. •¿°

þÿAll rights reserved. ª¿. •¿°

þÿAll rights reserved. ª¿. •¿°

ஷேக்ஸ்பியரின்

# மெக்பெத்

புதுமைதாசன்


தமிழ்ப் புத்தகாலயம்

11, சிவப்பிரகாசம் தெரு பாண்டிபஜார், தி.நகர்
சென்னை 600 017 த.பை: 5193 ✆ 434 59 04


þÿAll rights reserved. ª¿. •¿°

முதற் பதிப்பு : 1996
விலை : ரூ.34.00

Shakespeare's
Macbeth
tamil translation
by PUDUMAI DASAN
first edition : 1996
178 pages (144 + 34)
cover illustration : UMA
TAMIL PUTHAKALAYAM
11, Sivaprakasam street
P.B.No.5193 ✆ 434 59 04
Pondy bazaar, T.Nagar
CHENNAI 600 017
Price : Rs. 34.00

ஒளி அச்சுக்கோவை : ஸ்கில் கம்ப்யூட்டர்ஸ், சென்னை - 18
அச்சு: ரோகிணி ஆப்செட், சென்னை - 14

þÿAll rights reserved. ª¿. •¿°

# அணிந்துரை

## டாக்டர் கா. செல்லப்பனார்
### பேராசிரியர், தலைவர், ஆங்கிலவியற்றுறை,
### பாரதிதாசன் பல்கலைக் கழகம், திருச்சி.

'உலகமே ஒரு நாடகமேடை' என்று சொன்ன ஷேக்ஸ்பியர் உலகத்தையே தம் 37 நாடகங்களில் உள்ளடக்கி உலகுக்குத் திருப்பித் தந்தார் எனக் கூறின் மிகையாகாது. சூரியன் அஸ்தமனமாகாத பேரரசு என்று பெருமைப்பட்ட ஆங்கிலேயர்தம் ஆதிக்கப் பேரரசு அஸ்தமித்த பின்னும் ஆங்கில மொழி உலகத்தின் இலக்கியப் பேரரசர் ஷேக்ஸ்பியர், உலகத்தார் உள்ளங்களில் என்றும் நிலைத்துத் திகழ்கிறார். இவருடைய நாடகங்களை நான்கு கூறுகளாய்ப் பிரித்தோர், இவரது இளமைக்கால இன்பியல் நாடகங்களைப் 'பட்டறையில்' (in the Workshop) என்றும் இடைக்கால வரலாற்று நாடகங்களை (in the World) 'உலகத்தில்' என்றும் துன்பியல் நாடகங்களை (in the Depths) 'ஆழத்தில்' என்றும் இறுதிக்கட்ட விந்தை இன்பியல் நாடகங்களை (on the Heights) 'உச்சி மேல்' என்றும் பகுப்பர்.

ஷேக்ஸ்பியரின் மிகப் பெரிய சாதனைகளில் தலைமையானது அவரது நான்கு துன்பியல் நாடகங்களே. அவற்றில் மனிதன் துன்பத்தால் தூய்மையுறுகிறான். 'துன்பம் தான் உண்மையானது; இருண்மை வாய்ந்தது; நிரந்தரமானது; துன்பத்தில் இறைமையை எட்டிப் பிடிக்க முடிகிறது' (Sufering is real, [illegible] dark and permanent and shares the nature of infinity) என்பார் வேட்சுவொர்த். அவற்றில், ஓர் அடிப்படையில் நல்ல மனிதன் தன் விதியோடும் உள் மனத்தோடும் போராடுகிறான். ஷேக்ஸ்பியரின் நாடகங்களில் பண்பே விதியாகிறது என்கிறார்கள். (Character is Destiny).



þÿAll rights reserved. ª¿. •¿°

அவற்றில், அடிப்படையில் நல்ல மனிதன் ஒருவனின் அகத்தீமையும் (inner flaw) புறத்தீமையும் இணைந்து அவற்றோடு அவன் போராடி அழிந்தாலும் ஓர் அறம் சார்ந்த முறைமையினை (moral order) நிலை நாட்டுவதுதான் அவற்றின் நோக்கம். ஷேக்ஸ்பியரின் துன்பியல் நாடகங் களுள், **ஹேம்லெட்டில்** சிந்தனைப் பெருக்கே செயலுக்கு இடையூறாகி விடுகிறது. தன் தந்தையின் கொலைக்குப் பழி வாங்கும் கடமையினைக் காலத்தே நிறைவேற்ற ஹேம் லெட்டால் இயலவில்லை. ஆனாலும் ஹேம்லெட், பழி வாங்கும் பண்பினையே கேள்விக்குரியதாக்குகிறது. ஒதெல்லோவின் அன்பு, அறிவுசார்ந்ததாக அமையாததால் பொறாமையும் (jealousy) இயாகோவும் (Iago) உந்த, டெஸ்டிமோனாவைக் (Desdemona) கொன்று தன்னையே அவன் அழித்துக் கொள்ளும்போது,

> 'அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்
> மறத்திற்கும் அஃதே துணை'

என்னும் குறளுக்கு விளக்கமாக அமைகிறது ஒதெல்லோ. மன்னன் லியரும் (King Lear) சொல்லுக்கு அடங்காத அன்பைச் சொல் வழியாக உணர முற்பட்டுத் தன் சினத்தாலும் மற்றவர்தம் நன்றி மறந்த கொடுமையாலும் பெருந்துயருக் குள்ளானான். இறுதியில், கார்டீலியா வழியாகத் தெய்வீகக் கருணை, மனித வடிவில் அவனைத் தேடி வருகையில், அவனும் கார்டீலியாவும் இறந்தாலும் 'அன்புதான் மனிதனை இறவாமையோடு இணைக்கிறது' என்பதைக் காட்டுகிறது **மன்னன் லியர்**. ஷேக்ஸ்பியரின் நாடகத் தலைவருள் மெக்பெத், சற்று வித்தியாசமானவன். எடுத்த எடுப்பிலேயே துள்ளும் ஆசையாலும் (vaulting ambition) மனைவியாலும் உந்தப் பட்டுத், தன்னை நம்பி வந்த அரசனைத் தன் இல்லத்திலேயே கொன்ற கொலைகாரன். பிறகு மேலும் மேலும் தீய



þÿAll rights reserved. ª¿. •¿°

செயல்களைச் செய்து திறந்த கண்களோடு நரகத்துக்கான பாதையில் நடந்து சென்று, இறுதியில் வாழ்க்கையின் அர்த்தமற்ற தன்மையை உணர்ந்து பேசுவான். மற்றத் துன்பியல் நாடகங்களைவிட மெக்பெத், தீமையின் வன்மையைப் பெரிதும் பேசுகிறது; மற்ற நாடகங்களை விட புறத் தீமையை, இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்திகளோடு இணைத்துக் காட்டுகிறது. கிரேக்க நாடகங்கள் போல் **மெக்பெத்**திலும் தலைவன் ஒரு புற விதியின் கைப்பொம்மை போலக்காட்டப்படுகிறான். ஆனாலும் இங்கும், மெக்பெத்தின் அகத்தீமைதான் முதன்மைப்படுத்தப்படுகிறது. மாயக்காரிகளின் குரல், அண்டங்களூடு இயங்கும் தீமை (transcendental evil) எனினும் அது மெக்பெத்தின் அடிமனக் குரலோடு இணைந்துதான் இயங்குகிறது. எனவேதான் Fair is foul and foul is fair என்று மாயக்காரிகள் முதலில் பேசுவதைக் கேட்காத மெக்பெத் So foul and fair a day... என எடுத்த எடுப்பிலேயே கூறினான். மெக்பெத் தன் செயலால் புற விதியைத் தன்வயப்படுத்தி, இறுதியில் தப்ப முடியாத ஒரு வலைக்குள் அகப்பட்ட உணர்வோடு தன் முடிவைச் சந்திக்கிறான். ஆனாலும் மெக்பெத் சுயஉணர்வுடைய ஒரு குற்றவாளி (a criminal with a conciousness). இறுதியில் 'வாழ்க்கை ஒரு தரக்குறைவான நடிகன், சத்தம் மிகுந்த ஆனால் அர்த்தமில்லாத கதை' என மெக்பெத் வர்ணிக்கும் போது, ஷேக்ஸ்பியர் வாழ்க்கையை அர்த்தமற்றதாகக் கருது வதாய் நாம் கூற முடியாது. மெக்பெத் போன்ற கொலையாளி வாழ்க்கையின் வெறுமையை உணர்வதன் மூலம் ஷேக்ஸ் பியர், வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக ஆக்குகிறார் என்பதே உண்மை.

மெக்பெத்தின் வாழ்க்கை நோக்குக்கும் இந்தியப் பண்பாட்டின் நோக்குக்கும் வேறுபாடுகளிருப்பினும் சில



þÿAll rights reserved. ª¿. •¿°

ஒற்றுமைகள் உள என்பதையும் ஒத்துக் கொள்தல் வேண்டும். **மெக்பெத்**தில் புறவிதியும் அகப்பண்பும் இணைவது போலச் சிலப்பதிகாரத்திலும் ஊழ்வினையும் மதுராபதி தெய்வம் கூறுவதும் கண்ணகியின் செயலோடு இணைந்து வருகின்றன. இளங்கோ, 'வினைவிளை காலம்' எனக் கூறுதல் போல் ஷேக்ஸ்பியரிலும் 'ripeness of events' காட்டப்படுகிறது. மேலும் கண்ணகி தன் துயருக்குக் காரணமாக நெருக்க பாண்டிய அரசனைத் 'தென்னவன் தீதிலன்', 'நானவன் றன்மகள்' எனக் குறிப்பிடுகிறாள். மெக்பெத் பெருமாட்டியும் கொலை செய்யப்பட்ட டங்கனைப் பார்க்கும்போது தனக்குத் தன் தந்தையின் நினைவு வந்ததாகக் கூறுகிறாள். அதற்காகக் கண்ணகியும் மெக்பெத் பெருமாட்டியும் ஒரே பண்பு வாய்ந்தவர்கள் என்று கூறுவதாகக் கொள்ளக் கூடாது. ஆனால், கொடிய மெக்பெத் பெருமாட்டியிடமும் மனித உணர்வும் தந்தைப் பாசமும் இருக்கின்றன என்பது மட்டுமல்லாமல், மற்றவர்களை நோக்கும் போது அந்த மானுட உணர்வு அவளிடமும் தலை காட்டுகிறது என்பதை உணரலாம்.

இத்தகைய செறிவு வாய்ந்த கவிதை நாடகத்தைத் தமிழாக்கம் செய்வது தமிழுக்கும் தமிழனுக்கும் தேவையான - தலையான பணிகளுள் ஒன்று. ஆனால் அதைச் சிறப்பாகச் செய்வதில் பல சிக்கல்கள் உண்டு. ஷேக்ஸ்பியரின் நாடகத்தில் உள்ள சில கருத்துக்கூறுகளுக்குத் தமிழிலே சரியான இணைச் சொற்கள் (equivalents) காண்பது கடினம். இன்றைய தமிழ் நாகரிகத்திற்கும் அதன் குறியீடான தமிழுக்கும், ஷேக்ஸ்பியர் கால ஆங்கில நாட்டுப் பண் பாட்டுக்கும் அதன் குறியீடான ஆங்கிலத்திற்கும் இடையே பெரிய இடைவெளி (a great cultural gap) உளது.



þÿAll rights reserved. ª¿. •¿°

மேலும் ஷேக்ஸ்பியரின் மெக்பெத் மிகவும் சுருங்கிய - வேகமாக நகரும் கிரேக்கப் பண்புகள் கொண்ட (the shortest, swiftest, and most Greek) நல்ல நாடகம். இதில் செழுமையான கவிதை பல்வேறு படிமங்களின் மின்னல் களை ஏற்று மிளிர்கிறது. இதைத் தமிழாக்கம் செய்வதில் - முழுமையும் கவிதையாய் மொழியாக்கம் செய்யாவிட்டாலும் மொழிபெயர்ப்பாளர் பெரிதும் வெற்றி பெற்றிருக்கிறார் என்றே கூற வேண்டும்.

'மொழியாக்கத்தில் சிந்திப் போவதுதான் கவிதை' (Poetry is what is lost in translation) என்பார் ராபர்ட் ப்ராஸ்டு. வானவில் ஒரு வண்ணக் கவிதை என்றால், கவிதை ஒரு வார்த்தை வானவில். ஆனால் அது வெறும் சொற் சிலம்பமன்று; அது அழகின் சந்த நடனம். அதனினும் முக்கியமானது, அது ஆழ்ந்த அடிமன உணர்வுகளை மெல்லிய இசையுடன் எழுப்பும் ஆற்றல் படைத்தது. புதுமைதாசன் அவர்கள், ஷேக்ஸ்பியரின் நாடகம் முழுவதை யும் கவிதை நடையில் மொழியாக்கம் செய்யாவிட்டாலும் கவிதையின் உணர்வினை உயிர்ப்புள்ள உரை நடையில் வார்த்துத் தந்துள்ளார். குறிப்பாக மெக்பெத் கூறும் சொற்களைச் சொல்லல் வேண்டும்.

**Macbeth:** "Whence is that knocking?
How is't with me, when every noise appals me?
What hands are here? ha! they pluck out mine eyes!
Will all great Neptune's ocean wash this blood
Clean from my hand? No; this my hand will rather
The multitudinous seas incarnadine,
Making the green one red.

இதனை,

**மெக்பெத்:** 'கதவு எங்கே தட்டப்படுகின்றது?



þÿAll rights reserved. ª¿. •¿°

ஒவ்வோர் ஒலியும் அச்சுறுத்தும் அளவிற்கு எனக்கு என்ன ஆயிற்று? (கீழே நோக்கித் திடுக்கிடுகின்றான்) யார் ஃகைகள் இவை? ஆ! அவை என் விழிகளைப் பறிக்கின்றன. (புலம்புகின்றான்) நெப்டியூனின் மாக்கடலும் என்னிரு கைகளில் படிந்த இக்குருதியைக் கழுவித் தூய்மையாக்குதல் இயலுமா? இல்லை! என் கை தொட்ட வேளையில் பச்சைப் பெருங்கடலும் செந்நிறமாய் மாறிவிடும்!'

எனத் தமிழில் அழகாகப் புதுமைதாசன் மொழிபெயர்த்துள்ளார், குறிப்பாகக் கடைசி மூன்று வரிகளில் கவிதையாற்றல் செறிந்திருக்கின்றது. அதிலும் குறிப்பாக 'The multitudinous seas incarnadine' என்னும் வரியில் வரும் "multitudinous" என்னும் சொல்லுக்கும் 'incarnadine' என்னும் சொல்லுக்கும் தக்க தமிழ்ச் சொற்களைக் காண்பது யாருக்கும் அரிது. இரண்டு சொற்களும் பலசீர் கொண்ட சொற்கள். அந்தச் சொற்களின் அமைப்பிலும் சந்தத்திலும் கடலின் பரந்து விரிந்த தன்மை; ரத்தத்தின் செறிந்த சிவப்புத் தன்மை - ஒருவகைத் 'தொனி'யாக ஒலிக்கிறது. மேலும் இந்த இரு சொற்களிலும் ஒருவகை ஒலி இணைப்பும் இந்த வரியின் அர்த்த அழுத்தத்துக்குத் துணை செய்கிறது. அனைத்துக்கும் மேலாக "incarnadine" என்னும் சொல்லை ஷேக்ஸ்பியரே உருவாக்கியதாகவும் கூறுவர். இப்படிப்பட்ட உரிமையெல்லாம் மொழிபெயர்ப்பாளர்க் கில்லை. இருப்பினும், இந்த வரிகளின் அடிப்படை உணர்வு தமிழாக்கத்திலும் தரப்பட்டுள்ளது.

எடுத்த எடுப்பில், மாயக்காரிகள், உலகின் புறத் தோற்றத்திற்கும் உண்மை நிலைக்கும் உள்ள வேறுபாட்டை, அங்கே விழுமங்கள் தலைகீழாய் மாறிய முரண் நிலையை, Fair is foul and foul is fair என்று குறிப்பிடுகின்றனர். இதை



þÿAll rights reserved. ª¿. •¿°

‘நேர்மை தானே நேர்மை யின்மை
நேர்மை யின்மை நேர்மை தானே’

எனப் புதுமைதாசன் தமிழாக்கம் செய்துள்ளார். மொழியாக்கத்திலும் முரண்பட்டு இணையும் தன்மை சந்தத்திலும் வாக்கிய அமைப்பிலும் உள்ளது. ஆனால் Fair-Foul என்பதை நேர்மை-நேர்மையின்மை எனப் பெயர்த்து மூலத்தில் உள்ள கருத்தினைப் பெருமளவு தமிழில் தந்திருந்தாலும் மூலத்தின் முழுப் பரிமாணமும், இந்தத் தொடரின் மொழியாக்கத்தில் வந்ததாகக் கூற முடியாது. ஆனால், எந்த மொழி பெயர்ப்பிலும், மூலத்தை அப்படியே மற்றொரு மொழியில் தருவது என்பது இயலாது.

ஒரு வகையில் பார்த்தால் மூலம் என்பதே ஒரு வகையில் மொழியாக்கந்தான் என்பார்கள். ஏனென்றால், ஒவ்வொரு கவிதையும் மற்றக் கவிதைகளோடு மௌனமாக உரையாடிக் கொண்டிருக்கின்றன; அது மட்டுமன்றி ஒவ்வொரு கவிதையும் ஆழ்மனக் கவிதையின் புற வெளிப் பாடே; மொழிகள் அனைத்துமே ஒரு முதன்மையான மோனத்தின் வெளிப்பாடே. நல்ல மொழிபெயர்ப்பாளன், கலையுணர்வோடு மூலத்தில் தன்னையிழந்து அதன் மூலப் படிவத்தையும் (archetype) அகவடிவத்தையும் (inner form) ஆழ்நிலையில் உணர்ந்து படைக்கும்போது, மூலம் ஓரளவு மறு பிறவி எடுக்கிறது எனக் கொள்ளலாம். புதுமைதாசன் அவர்கள், பாட்டிடையிட்ட உயிர்ப்புள்ள உரைநடையில் **மெக்பெத்**தை இன்றைய தமிழனுக்குத் தமிழில் தருவதில் பெரும் வெற்றிடைந்துள்ளார் என்றே கூறவேண்டும். அதற்கு முதற்காரணம் அவர் மெக்பெத்தை ஆழமாகக் கற்று, அதன் உயிர்நாடியைத் தன் உணர்வில் சுவீகரித்துக் கொண்டதுதான். கூடிய மட்டும் அவர் எந்த வரியையும், ஏன் எந்த வார்த்தையையும் விடவில்லை. பாத்திரங்களின் பெயர்களை



þÿAll rights reserved. ª¿. •¿°

மொழிபெயர்ப்பதில்கூட அவர் மிகுந்த சுதந்தரத்தைப் பயன் படுத்தாமல், ஆங்கிலச் சொற்களையே தமிழில் தந்துள்ளார். மேலும் மெக்பெத்தின் அடிப்படைப் போராட்டத்தின் அற வுணர்வை நம்முடைய நாகரிகத்திற்கேற்ப மாற்ற முயல வில்லை. ஆனால் தமிழின் தன்மை சாரும்போது, தமிழ்ப் பண்பும் அதில் சேர்வது இயல்பே. அதை மாற்ற முடியாது; மாற்ற வேண்டியதுமில்லை. மேலும் மொழிபெயர்ப்பாளர் ஷேக்ஸ்பியர் குறித்த பயனுள்ள, விரிவான விளக்கத்தையும் தந்துள்ளார். ஷேக்ஸ்பியரின் எதுகையற்ற ஐஞ்சீரடி (blankverse) உரைநடைப் பண்புள்ள கவிதை நடையானால், புதுமைதாசனின் நடை கவிதைப் பண்புள்ள உரைநடையாக உள்ளது. இந்த மாற்றம் காலத்துக்கு ஏற்ற மாற்றமே. உரை யாடல்களில் உயிர்த்துடிப்புமிருக்கிறது; செறிவுமிருக்கிறது.

புதுமைதாசன் அவர்களின் மொழியாக்கத்தின் மூலம் மெக்பெத்தின் பெருமையை உணர்ந்து, அனுபவிக்க முடியும் என்றே தோன்றுகிறது. இதன் வழியாக மேலும் மேலும் மொழியாக்கங்கள் வந்தால் மெக்பெத்தை மேலும் மேலும் உணரமுடியும். எல்லா மொழிபெயர்ப்பும் ஒரு சிந்தாந்தச் சார்பினதே; இலக்கினை எட்டிப் பிடிக்க முயல்வதே (interpretation & approximation). இதை ஒத்துக் கொண்டால், மொழிபெயர்ப்புகள் மூலத்துக்கு இட்டுச் செல்லும் ஒளி விளக்குகளாக - வழிகாட்டிகளாக அமையும். உலக இலக் கியங்களில் உச்சியில் உள்ள மெக்பெத்தை மொழியாக்கம் என்ற அகவிளக்கால் அப்படியே கவரமுடியாவிட்டாலும், அதன் உயர்வை - ஒளிப்பிழம்பைப் பெருமளவு உணர முடியும். இந்த அரிய பணியைச் சிறப்பாகச் செய்து முடித் துள்ள புதுமைதாசன் அவர்களுக்குத் தமிழ்கூறும் நல்லுலகம் என்றும் கட்டுப்பாடுடையது. வெல்க, வளர்க அவர்தம் அரும்பணி!

**பேராசிரியர் கா.செல்லப்பன்.**

þÿAll rights reserved. ª¿. •¿°

# முன்னுரை

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்

- பாரதியார்

இளமையிலிருந்தே பெரும்பாவலர் ஷேக்ஸ்பியர்தம் நாடக இலக்கியங்களில் பெரிதும் ஈடுபாடுடையனாய் அவற்றைப் பயின்று வந்திருக்கின்றேன். நான் உயர்நிலைப் பள்ளியில், மேல் உயர்நிலை வகுப்புகளில் கல்வி பயிலுங்கால், உலகப் பெரும்புலவர் ஷேக்ஸ்பியர் நாடகங்களைக் கற்கும் பேற்றினைப் பெற்றேன். இலக்கிய வகுப்புத் தொடங்கும் வேளை வந்ததும் நாடகப் பகுதிகளை வாசித்தற்கு என் முறை எப்பொழுது வருமெனவும் நாடகக் காட்சியில் வரும் உறுப்பினருள் எவ்வுறுப்பினனாய்ப் பேசும் வாய்ப்பு எனக்குக் கிட்டுமெனவும் பேரார்வத்துடன் காத்திருந்திருக்கின்றேன்.

அந்நாளில் பெரும் புகழ்பெற்ற ஷேக்ஸ்பியர் நாடக நடிகர்கள் லாரன்ஸ் ஒலிவியர், ஆர்சன் வெல்ஸ் போன்றார் நடித்த ஹேம்லெட், மெக்பெத் முதலிய திரைப்படங்களைப் பன்முறை விரும்பிப் பார்த்திருக்கின்றேன். மனத்தினின்று நீங்காத அவர்கள் உணர்ச்சிமிகு நடிப்பை மனத்திலிறுத்திய வாறு, இலக்கிய வகுப்பில் ஷேக்ஸ்பியர் நாடகங்களின் பகுதிகளை நடிப்புடன் வாசித்திருக்கின்றேன். அப்பொழுது சீர்களைப் பொருந்திய இடங்களில் முறையாய் நிறுத்தியோ மெல்லழுத்த அசையினையோ வல்லழுத்த அசையினையோ செவ்விதின் ஒலித்துப் பேசுதற்கு அறியேனாயினும்



þÿAll rights reserved. ª¿. •¿°

உணர்ச்சிப் பெருக்குடன் வாசித்திருக்கின்றேன். ஷேக்ஸ்பியர் நாடகங்களில் இளமையில் அமையப்பெற்ற இப்பேரார்வம் இன்றும் எனக்குச் சற்றுங் குறைந்திலது.

அவர் நாடகங்களின்பால் கொண்ட பேரார்வம் பெரிதாய் என்னுள் வளர்ந்தது. எவ்வாறேனும் அவர் நாடகங்களுள் ஒருசிலவற்றையாவது தமிழில் கொணர்தல் வேண்டுமெனப் பலகாலும் எண்ணி வந்தேன். இவ்வாய்ப்பு எனக்கு முப்பத்தைந்து ஆண்டுகளுக்குமுன் கிட்டிற்று. இன்றைய சிங்கப்பூர் வானொலிக் கழகம், 1963 வரை சிங்கப்பூர் வானொலி என்னும் பெயரில் இயங்கிற்று. சிங்கப்பூர் வானொலியின் ஒரு பிரிவாய்ச் சிங்கப்பூர்க் குரல் (சுவாரா சிங்கப்பூரா) அமைந்து ஆங்கிலம், மலாய், சீனம், தமிழ் ஆகிய நான்கு மொழிகளில் 1961 முதல் 1963 வரை ஏறத்தாழ மூன்றாண்டுகள் ஒலிபரப்புச் செய்து வந்தது. தமிழ்ப் பிரிவுக்குத் தலைவராய்ப் பணியாற்றியவர் திரு.கே.ராமையா அவர்கள். இந்த ஒலிபரப்புப் பிரிவிற்கென 1961 ஆம் ஆண்டு ஒதெல்லோ, மெக்பெத் என்னும் இரு துன்பியல் நாடகங்களைத் தமிழில் வானொலி நாடகங்களாக எழுதினேன். நாடகத்தின் ஒலிபரப்புக் கால அளவு ஒரு மணிக்கூறாதலின், அந்நாடகங்களைப் பெரிதுஞ் சுருக்கியே எழுதினேன். இந்த இரு நாடகங்களையும் திரு.கே.ராமையா அவர்களே நிகழ்ச்சியாக்கம் செய்ததுடன், மெக்பெத் நாடகத்தில் மெக்பெத்தாகவும் ஒதெல்லோ நாடகத்தில் ஒதெல்லோவாகவும் நடித்திருந்தார். நான் இந்த இரு நாடகங்களிலும் முறையே மெக்டஃப்'பாகவும் கோமகனாகவும் நடித்திருந்தேன். இந்த நாடகங்கள் பெரிதும் பாராட்டப்பெற்றன.



þÿAll rights reserved. ª¿. •¿°

1962 ஆம் ஆண்டு நான் வானொலியில் அறிவிப்பாள னாய்ப் பணியாற்றத் தொடங்கிய சில ஆண்டுகளுக்குப் பின்னர், உயர்நிலை, பல்கலைக்கழகப் புகுமுக வகுப்பு மாணவர்க்கென ''மாணவர் இலக்கியம்'' என்னும் ஒரு நிகழ்ச்சித் தொடரை நிகழ்ச்சியாக்கம் செய்து வந்தேன். இத்தொடருக்கென முன்பு எழுதப் பெற்ற ஒதெல்லோ, மெக்பெத் நாடகங்களை மீண்டும் நிகழ்ச்சியாக்கம் செய்து ஒலிபரப்பினேன். இவற்றுடன், புதிதாய்ச் சூறாவளி (Tempest) நாடகத்தையும் வேறு பல ஆங்கில இலக்கியங்களையும் தமிழ் நாடக வடிவமுடன் ஒலிபரப்பினேன்.

இவற்றுள் எதனை முதலில் நூல் வடிவில் கொணர்வது என எண்ணியவேளை ஷேக்ஸ்பியர்தம் மெக்பெத் நாடகமே முன்னின்றது. வானொலிக்குக் கால அளவு கருதி மிகச் சுருக்கமாய் எழுத வேண்டிய நிலை ஏற்பட்டதன் விளைவால் பல பகுதிகள் விடுபட்டுப்போயின. இப்பொழுது இந் நாடகத்தை முழுமையாகவே எழுதியிருக்கின்றேன். ஹெக்கேட், மாயக்காரிகள் உரையாடும் காட்சிகள் இனிய பாக்களாய் அமையப்பெற்றனவாகலின், அவற்றை உரைநடையில் எழுதாமல் தமிழ் யாப்பமைதியுடன், இயன்றவரை பாக்களாகவே இயற்றியிருக்கின்றேன்.

பெரும்புலவர் ஷேக்ஸ்பியர் வரலாறு, அவர்தம் அரங்கம், நாடகங்கள், செய்யுள் நலன் போன்றவை இந்நூலைப் படிப்பார்க்குப் பயனுடையனவாய் அமையும் எனக் கருதி அவற்றைச் சுருங்கக் கூறியிருக்கின்றேன்.

சிங்கப்பூர் வானொலிக் கழகத்தின் ஒலிக் களஞ்சியத்தில் 1962 ஆம் ஆண்டிலிருந்து பணியாற்றத் தொடங்கியதற்கு



þÿAll rights reserved. ª¿. •¿°

ஓராண்டுக்கு முன்னர் எழுதி ஒலிபரப்பப்பெற்ற இந்நாடகம், நான் 1992 டிசம்பரில் மூத்த நிருவாக நிகழ்ச்சியாக்குவோன் - படைப்பாளன் (Senior Executive Producer - Presenter) என்னும் பொறுப்பினின்று பணி ஓய்வு பெற்று நான்காண்டு நிறைவுறவிருக்கும் வேளையில், முப்பத்தைந்து ஆண்டு களுக்குப் பின்னர் நூலாக்கம் பெற்று வருகின்றது.

ஒப்பிலக்கியப் படைப்புத் துறையில் ஆழ்ந்த ஈடு பாடுடையராய், இளங்கோவடிகள் - ஷேக்ஸ்பியர், பாரதியார் - ஷெல்லி, பாரதிதாசனார், பிற மேலைநாட்டுப் பாவாணர்கள் போன்றார்தம் பேரிலக்கியங்களை ஆழமுற ஆய்ந்து ஒப்பிட்டு ஒப்பிலக்கிய நூல்கள் பலவும் எண்ணிறந்த கட்டுரைகளும் இயற்றி, இத்துறையில் உயர்புலமை மிக்காராய் முன்னின்று திகழ்தலுடன், தமிழக முதல்வர் மாண்புமிகு கலைஞர் அவர்கள்தம் இலக்கிய நலம் சிறந்தோங்கும் குறளோவியத்தை ஆங்கிலத்தில் மொழி யாக்கமும் செய்து புகழ் நிறுவிய பாரதிதாசன் பல்கலைக் கழகத்தின் ஆங்கிலவியற்றுறைப் பேராசிரியர், தலைவர் டாக்டர் கா. செல்லப்பனார் அவர்கள், என் வேண்டு கோளுக்கிணங்கித் தம் கூர்த்த புலமைத் திறத்தால், திறனாய்வுத் திறனொடு ஓர் அரிய அணிந்துரை வழங்கி யிருக்கின்றார்கள். அவர்களுக்கு என் உளம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

என் முன்னை நூல்போன்றே இந்நூலும் அச்சேறி வருதற்குப் பெருந்தூண்டுகோலாயிருந்து உதவிய நண்பர் திரு. நா. கோவிந்தசாமி அவர்களுக்கும், இந்நூலைச் சிறப்புற அச்சிட்டு உதவிய தமிழ்ப்புத்தகாலய உரிமையாளர் திரு. அகிலன் கண்ணன் அவர்களுக்கும், ஓவியம் தீட்டி அணி



þÿAll rights reserved. ª¿. •¿°

செய்த ஓவியர்க்கும், அச்சுப் பார்வைப் படிகளைப் பார்த்து உதவியோர்க்கும் என் நெஞ்சார்ந்த நன்றி.

மாணவர்க்கும் பிறநாட்டு நல்லறிஞர்தம் இலக்கியங் களைக் கற்க விழைவார்க்கும் தமிழார்வலர்க்கும் இந்நூல் பயனுடையதாயமையின் பெரிதும் மகிழ்வேன்.

**புதுமைதாசன்**

(பி. கிருஷ்ணன்)
சிங்கப்பூர்

þÿAll rights reserved. ª¿. •¿°

## உரித்தாக்கல்:

இந்நிலத்தின் மாந்தர் இனிதுறவே வாழுதற்குச்
செந்நூல்கள் செவ்விதினிற் செய்திட்டார் - அந்நூல்கள்
அன்றுரைத்த சான்றோர் அனைவர்க்கும் இந்நூலை
நன்றுரித் தாக்குவேன் நான்.

- பு.தா.

þÿAll rights reserved. ª¿. •¿°

# வில்லியம் ஷேக்ஸ்பியர்

வரலாறு:

இறவா இலக்கியங்கள் பல படைத்து ஓங்கு புகழ் நிறுவி இலக்கிய விரிவானில் பேரொளி பரப்பி ஒளிர்கின்ற வையத்துப் பெரும்புலவர் பலருள் வில்லியம் ஷேக்ஸ்பியர் சிறப்பிடம் பெற்றுத் திகழ்கின்றார்.

பதினாறாம் பதினேழாம் நூற்றாண்டுகளில் சிற்றரங்குகளுக்கென அவர் இயற்றிய நாடகங்கள், இறவாப் புகழொடு பல்வேறு நாடுகளில் - பல்வேறு மொழிகளில் பயிலப் பெறுகின்றன; நடிக்கப்பெறுகின்றன. தம் பல்திறப் பேரறிவால் நலங்கொழிக்கும் கற்பனை வளத்தைப் பொழிந்து இன்பியலாயும் துன்பியலாயும் அவர் இனிதுற இயற்றிய நாடகங்களும் புதுமையுறப் புனைந்த பாக்களும் கற்பார் மனத்தினின்று எக்காலும் அகலாவண்ணம் உயிரோவியங்களாய்த் திகழ்வன. வையமெல்லாம் போற்றும் இப்பெரும் பாவலர்தம் தொடக்கநாள் வாழ்க்கை நிகழ்ச்சிகளைச் சிறிதே அறிய இயலுகின்றது. இவற்றையும் சில சமயஞ்சார்ந்த பதிவேடுகள் வாயிலாகவே அறிகின்றோம்.

ஷேக்ஸ்பியர், 1564 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 23 ஆம் நாள் வார்விக்ஷயரைச் சேர்ந்த (Warwickshire) ஸ்ட்ரேட்ஃபோர்ட் ஒன் ஏவன் (Stratford-on-Avon) என்னும் நகரில் பிறந்தார். இவர் தந்தை ஜான் ஷேக்ஸ்பியர் (John Shakespeare) பல்வேறு வகை வாணிகம் செய்தவர். அன்னை பெயர் மேரி ஆர்டன் (Mary Arden).

þÿAll rights reserved. ª¿. •¿°

இளமையில் ஸ்ட்ரேட்ஃபோர்ட் இலக்கணப் பள்ளியில் கல்வி பயின்ற இவர், இலத்தீன் மொழிக் கல்வியையே பெரிதுங் கற்றார். புகழ்பெற்ற வரலாற்று அறிஞர்கள், நன்னெறிக் கொள்கைச் சான்றோர், புலவர்கள் போன்றார்தம் படைப்புகளில் பேரார்வம் செலுத்தினார். தருக்கம், சொற்றிறக் கலை போன்ற பல்வேறு கலைகளிலும் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டமையால் பல்கலைக்கழகம் சென்று பயிலாது போனார்.

பொருந்திய அகவையில் பல்கலைக்கழகம் செல்லுதலை விடுத்து, *1582* ஆம் ஆண்டு தம் பதினெட்டாம் அகவையில் தம்மினும் எட்டாண்டு மூப்பினர் ஆன் ஹாத்தவே (Ann Hathaway) என்பாரை மணந்தார். இவர்களுக்கு மக்கள் மூவர் பிறந்தனர். மூத்த மகள் சூசன்னா (Susanna) *1583* ஆம் ஆண்டிலும் ஹேம்னெட் (Hamnet), ஜூடித் (Judith) எனப் பெயரிய இரட்டையர், *1585* ஆம் ஆண்டிலும் பிறந்தனர். இந்த இருவருள் இவர்தம் ஒரே மகன் ஹேம்னெட், *1596* ஆம் ஆண்டில் தம் பதினோராம் அகவையில் இறந்தார்.

இதன் பின்னர் இவர்தம் எட்டாண்டு வாழ்க்கைக் குறிப்புகள் எவையும் கிடைத்தில. ஒருகால் பல்வேறு இடங்களுக்குஞ் சென்று நாடகங்கள் நடத்திய குழுவில் இவரும் ஓர் உறுப்பினராய்ச் சென்றிருத்தல் கூடும் என்று அறிஞர் பலர் கருதுவர். இன்னும் வேறு செய்திகளும் கூறுவர்.

ஏறத்தாழ இருபதாண்டு இலக்கியப் பணியில் தம் பாவன்மையால் பதினாறாயிரம் சொற்களினும் மிகுதியாய் முப்பத்தேழு நாடகங்களிலும், சொன்னெட் (Sonnet)



þÿAll rights reserved. ª¿. •¿°

எனப்பெறும் பதினான்கு வரிப் பாக்களிலும் இன்னபிற பாக்களிலும் நற்றேறலென இனிதுறப் பெய்து வையத்தார் உள்ளத்தைப் பெரிதுங் கவர்ந்த அப்பெரும் பாவலர், 1616 ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்கள் 23 ஆம் நாள் தம் 52 ஆம் அகவையில் - தம் பிறந்த நாளன்று மறைந்தார். ஸ்ட்ரேட் ஃபோர்ட் திருக்கோவிலில் நல்லடக்கம் செய்யப்பெற்றார் இவர். இவர் கல்லறையில் பெயர் எதுவும் பொறிக்கப் பெறவில்லை. ஆயினும், அதன் மீது,

***"இனிய நண்பனே, இயேசுவின் பொருட்டாய்***
***அடைப்புசூழ் இவ்விடம் அகழேல் புழுதியை.***
***கல்லறை தீண்டார் கனிவருள் பெறுவார்;***
***என்னெலும் பசைப்பார் இரும்பழி யுறுவரே."***

என்னும் பொருளில்,

***"Good friend, for Jesus' sake forbear***
***To dig the dust enclosed here.***
***Blest be the man that spares these stones***
***And curst be he that moves my bones."***

என்னும் வரிகள் எழுதப் பெற்றிருந்தன. இவ்வரிகள், ஷேக்ஸ்பியர் இயற்றியனவாகவே இருத்தல் வேண்டும் எனக் கருதுகின்றனர்.

இந்த எளிய கல்லறையை விரும்பாத அவர் உறவினர் களோ நண்பர்களோ சில ஆண்டுகளுக்குப் பின்னர், அத்திருக்கோவிலிலேயே பிறிதொரு கல்லறை அமைத்தனர். இது அங்கு 1623 ஆம் ஆண்டுவரை இருந்ததெனத் தெரிகின்றது.





þÿAll rights reserved. ª¿. •¿°

## அரங்கம்:

ஷேக்ஸ்பியர் வாழ்ந்த நாளில் நாடக அரங்குகள் வளரும் நிலையிலேயே இருந்தன. இவர்தம் பன்னிரண்டாம் அகவையில், 1576 ஆம் ஆண்டு 'அரங்கம்' (The Theatre) என்னும் நாடக அரங்கு நிறுவப் பெற்றது. இதுவே ஓரளவு நாடக அரங்குக்குரிய தன்மைகளொடு தோன்றிய முதல் அரங்கு என்பர். இவ்வரங்கிலேயே ஷேக்ஸ்பியரும் அவர் குழுவினரும் நாடகங்களை மேடையேற்றி வந்தனர். ஷேக்ஸ்பியருக்கு இந்த 'அரங்கம்' என்னும் அரங்கின் நாடகக் குழுவினருடன் முதல் முறையாய்த் தொடர்பு ஏற்பட்ட பொழுது, இவர் நடிகராகவே அறிமுகமானார். ஹேம்லெட் போன்ற புகழ் பெற்ற நாடகங்களை எழுதிய பின்னரும் துணை நடிகராகவே இருந்து வந்தார். எடுத்துக்காட்டாய் ஹேம்லெட் (Hamlet) நாடகத்தில் ஆவியாகவும் 'நீ விரும்பியவண்ணம்' (As You Like It) நாடகத்தில் ஆதமாகவும் தோன்றினார். ஆயின், 1603 ஆம் ஆண்டுக்குப் பின்னர் அவர் நாடகங்களில் நடிப்பதினின்றும் விலகினார் என்று கூறுவர்.

இந்த 'அரங்கம்' என்னும் நாடக அரங்கு நிறுவப்பெற்ற பின்னர், நாடக ஆர்வலர் எண்ணிக்கையும் பெருகிற்று. முதலீட்டாளர் பலர் பல புதிய நாடக அரங்குகளை நிறுவினர். கர்ட்டன் (The Curtain) என்னும் அரங்கு 1577 லும், ரோஸ் (The Rose) என்னும் அரங்கு 1587 லும் தோன்றின. இதன் பின்னர் ஹோப் (The Hope), ஃபோர்ச்சூன் (The Fortune), ரெட் புல் (The Red Bull), சுவான் (The Swan) போன்ற பொதுத் திறந்தவெளி அரங்குகளும் பிளேக்ஃப்ரையர்ஸ் (The Blackfriars) போன்ற தனியார் மூடு அரங்குகளும் நிறுவப்பெற்றன.



þÿAll rights reserved. ª¿. •¿°

1594 ஆம் ஆண்டு 'அரண்மனை மேலாளர் பெருமகனார் ஆளினர்' (The Lord Chamberlain's Men) என்னும் ஒரு நாடக மன்றம் நிறுவப் பெற்றது. இதன் புரவலர் அரண்மனை மேலாளர் பெருமகனார். ஷேக்ஸ்பியர் இம்மன்றத்து உறுப்பினர்களுள் ஒருவர்; பங்குடைமை யாளருள் ஒருவர். தம் பணிக்காலம் முழுதும் அவர் இம்மன்றத்தின் உறுப்பினராயிருந்தார். 1603 ஆம் ஆண்டு முதலாம் எலிசபெத் அரசியார் மறைவுக்குப்பின், ஸ்காட் லந்தின் ஆறாம் ஜேம்ஸ் மன்னன், இங்கிலாந்துக்கும் மன்னனாய் முதலாம் ஜேம்ஸ் மன்னன் என முடி சூடிய பின்னர், இம்மன்றம், 'மன்னர் ஆளினர்' (The King's Men) எனப் பெயர் மாற்றம் பெற்றது.

இந்நாடக மன்றத்திற்கு ஜேம்ஸ் மன்னன் புரவலனாய்ப் பொறுப்பேற்ற பின்னர், ஷேக்ஸ்பியருக்கும் அவர் குழுவினருக்கும் புகழும் பெருமையுங் குவிந்தன; செல்வச் செழிப்பும் பெருகிற்று. 1598 வரை ஷேக்ஸ்பியர் நாடக மன்றம், 'அரங்கம்' என்னும் அரங்கிலேயே நாடகங்களை மேடையேற்றிற்று. ஆயின், அவ்வரங்கு அமைந்திருந்த நிலத்துக் குத்தகையின் பொருட்டு நடந்த வழக்கில் அவ்வரங்கமே இடிக்கப்பட்டது. அதற்கு மாற்றாய் ஷேக்ஸ்பியரும் அவர்தம் மன்ற உறுப்பினர்களும் நகருக்குப் புறத்தே குளோப் (The Globe) என்னும் புதிய திறந்தவெளி நாடக அரங்கை சௌத்வார்க் (Southwark) என்னுமிடத்தில் நிறுவினர். ஷேக்ஸ்பியரும் அவர் மன்ற உறுப்பினர்கள் பலரும் இதன் பங்குடைமையினர். குளோப் என்னும் இப்புதிய அரங்கம், மற்ற நீள்சதுர அரங்குகள் போலன்றி வட்ட அமைப்பைப் பெற்றிருந்தது. முப்பது மீட்டர் குறுக்களவுடைய இவ்வரங்கத்தில் ஈராயிரம் முதல்



þÿAll rights reserved. ª¿. •¿°

மூவாயிரவர் வரை நின்றோ குந்தியிருந்தோ காண்பதற்கு இடவாய்ப்பிருந்தது.

சிறந்த நடிகர் ரிச்சர்ட் பர்பேஜ் (Richard Burbage), சிறந்த நாடக எழுத்தாளர் ஷேக்ஸ்பியர், சிறந்த அரங்கம் குளோப், மன்னனே புரவலன் என அனைத்தும் ஒருசேரப் பெற்றதால் ஷேக்ஸ்பியர் நாடக மன்றத்தின் புகழ் விரிந்து பரவிற்று.

ஷேக்ஸ்பியர் காலத்தில் ஒரு புதிய நாடகம் எழுதப் பெற்றதெனில், அது ஏறத்தாழ ஆறு முதல் பதினாறு முறை அரங்கேறும். அதன்பின்னர் வேறு புதிய நாடகம் அரங்கேற்றங்காணும். பெரும்பான்மை நாடகங்கள் இரண்டு மணிக்கூறு நடைபெறும். காட்சிகளுக்கிடையில் திரை யிடுதலோ நிறுத்தமோ இடைவேளையோ இல்லை; காட்சி விளக்கங்களும் இல்லை. நாடகப் பின்னணி, எக்காலத்திற் குரியதோ அக்காலத்திற்குரிய ஆடைகளை நடிகர்கள் அணியவில்லை; தம் காலத்து ஆடைகளையே அணிந்தனர். நாடக நடிகர்கள் அனைவரும் ஆண்கள். பெண்களாக அகவை குறைந்த பையன்களே நடித்தனர். இதனால் ஷேக்ஸ்பியர், பெண்கள் நாடக மாந்தர்க்குப் பெரும்பாலும் காட்சிகளையும் உரையாடல்களையும் குறைவாகவே அமைத்தார்.

நாடகக் காட்சிகளுக்குப் பிற்புலமாய் அமைந்து அவற்றின் சூழலைச் சித்திரிப்புச் செய்தற்கு மேடையமைப்பு களோ இடிமுழக்கம், வானத்தில் பறத்தல், இரவினைப் புலப்படுத்துதல் போன்ற மற்றச் சிறப்பு மேடை நுணுக்கங் களோ இன்மையால் நாடக ஆர்வலர்கள், எழுத்தாளர்தம் திறன்மிகு உரையாடல் வழியே அனைத்தையும் உய்த்தறிந்து மகிழ்ந்தனர். இவற்றைச் செவ்விதின் செய்தலில் வல்லவ ராய்த் திகழ்ந்தவர் ஷேக்ஸ்பியர்.



þÿAll rights reserved. ª¿. •¿°

## நாடகங்கள்:

ஷேக்ஸ்பியர் நாடகங்கள் முழுமையும் அவர் வாழ்நாளில் பதிப்பிக்கப்பெறவில்லை. பதினான்கு நாடகங்கள் மட்டுமே பதிப்பிக்கப்பெற்றன. இவற்றைப் பதிப்பிக்குங்கால், இவர் முன்னின்று பதிப்புப் பணிகளைப் பார்வையிடவில்லை என்றும் தெரிகின்றது.

ஷேக்ஸ்பியர், தம் வாழ்நாளில் தம் படைப்புகளை நூல் வடிவில் வெளிக்கொணர ஏன் முன்னேற்பாடுகள் செய்ய வில்லை? மேடைக்கென எழுதப்பெற்றமையால் அவை மேடையில் பெறுகின்ற வெற்றியே போதுமென எண்ணினாரா; அன்றிப் பரவலாய் வெளியிடுதற்குரிய உரிமை இழந்தாரா; அன்றித் தம் படைப்புகள் எல்லா இடர்களையும் எதிர்த்து உயிர்த்து நிற்கும் ஆற்றலுடையன என்னும் மனத்திண்மை கொண்டாரா என எவரும் அறியார். அவர் வாழ்நாளில் பதினான்கு நாடகங்கள் நூல் வடிவில் வெளிவருதற்கு அவர் ஒப்புதல் அளித்திருக்கலாமெனக் கருதினும், அவற்றுள் ஒரு நாடகமேனும் அவர் கையால் திருத்தம் பார்த்து வெளியிடப்பெற்றதற்குரிய சான்றெதுவும் இல்லையென அறிஞர் பலர் கூறுகின்றனர். பெரும்புகழ் மிக்க நாடகங்களை இயற்றிய தனிச்சிறப்புக்குரிய அவர்தம் ஒரு நாடகமேனும் ஒரு கவிதையேனும், அன்றி இவ்விரண்டனுள் ஒன்றன் பகுதியேனும் அவர் கையெழுத் தில் கிடைக்கப் பெறாதது விந்தையே! சில ஆவணங்களில் இடம் பெற்றிருக்கும் அவர்தம் ஐந்தாறு கையெழுத்துகள் நீங்கலாய், அவர் கையெழுத்தால் எழுதப்பெற்ற ஒரு சொல்லேனும் கிடைக்கப் பெறாதது அதனினும் பெரும் விந்தையே என, ஷேக்ஸ்பியர் குறித்து ஆழமுற ஆய்வுகள் பலவற்றைச் செய்த அறிஞர் பலர் கருதுகின்றனர்.



þÿAll rights reserved. ª¿. •¿°

ஷேக்ஸ்பியர் வாழ்நாளில் வெளிவந்த பதினான்கு நூல்களும் பதினேழுக்கு இருபத்தொரு சென்டிமீட்டர் அளவினவாய் நான்காய் மடிக்கப்பெற்ற (Quartos) சிறு சிறு நூல்களாய் வந்தன. இவற்றுள் பெரும்பான்மை நூல்களில் ஷேக்ஸ்பியர் பெயர் குறிக்கப்பெறவில்லை. நடிகர் நினைவுறுத்தல் படிகளினின்று பதிப்பிக்கப் பெற்றவை 'நல்ல' நால்மடி நூல்கள் ('good' Quartos) என வழங்கின. நாடகங்களை மேடையில் பன்முறை பார்த்துச் சுருக்கெழுத் தால் எழுதியோ நடிகர்கள் சிலர் வாய்மொழியாய்க் கூறியோ பதிப்பிக்கப் பெற்றவை 'கெட்ட' நால்மடி நூல்கள் ('bad' Quartos) எனக் குறிப்பிடப்பெற்றன.

இந்தப் பதினான்கு நூல்களுக்குப் பின்னர் - ஷேக்ஸ்பியர் மறைந்து ஏழாண்டுகள் கடந்த பின்னர் 1623 ஆம் ஆண்டு, அவர்தம் நாடக மன்ற நண்பர்கள் ஜான் ஹெமின்ஜ் (John Heminge), ஹென்றி கொன்டெல் (Hendry Condel) இருவரும் முப்பத்தாறு நாடகங்களைத் திரட்டி, ''திரு. வில்லியம் ஷேக்ஸ்பியரின் இன்பியல், வரலாறு, துன்பியல் நாடகங்கள் (Mr. William Shakespeare's Comedies, Histories and Tragedies) என்னும் தலைப்பில் ஃபோலியோ (Folio) பதிப்பாய் வெளியிட்டனர். இத்தொகுதி யில் ஏற்கனவே பதிப்பிக்கப்பெற்ற பதினான்கு நாடகங் களுடன் இருபத்திரண்டு புதிய நாடகங்களும் இடம் பெற்றிருந்தன. இதன் இரண்டாம் பதிப்பு 1632-லும் மூன்றாம் பதிப்பு 1663-லும் வெளியிடப்பெற்றன. மூன்றாம் பதிப்பின் மறுபதிப்பு 1664 ஆம் ஆண்டில் வந்தபோது, அதில் பெரிக்ளீஸ் நாடகமும் இணைக்கப்பெற்று முப்பத்தேழு நாடகங்கள் அடங்கிய தொகுதியாய் அது விளங்கிற்று.

ஷேக்ஸ்பியர்தம் நாடகங்கள், அவர் பெயரால் தொகுதியாய் வெளிவரத் தொடங்கிய அற்றைநாள் முதல்



þÿAll rights reserved. ª¿. •¿°

இற்றைநாள்வரை அவர் படைப்புகள் குறித்து வழக்காடல் நிகழ்ந்திருக்கின்றது; நிகழ்ந்து வருகின்றது. பல்கலைக்கழகக் கல்வித்தேர்ச்சியின்மையும் எளிய குடிப்பிறப்புமுடைய ஒருவர், எவ்வாறு பெருமக்கள் பேச்சுவழக்கையும் அரசவை நடைமுறைகளையும் மிகுதிறனொடு அறிந்து தேர்தல் இயலும்? சட்டம், அரசியல், வரலாறு, நிலநூல், மருத்துவம் எனப் பல துறைகளிலும் கற்றுத் துறைபோகியவராய் எவ்வாறு விளங்கவியலும்? சிக்கல்மிக்க கருத்துகளை யெல்லாம் இலக்கியத்தில் இனிது குழைத்துக் கொடுத்தற்குச் சொல்வளத்தை எவ்வாறு பெற்றார்? திறன் இருப்பினும் ஒருவரே அந்நாடகங்கள் அனைத்தையும் பாக்களையும் இயற்றுதல் இயலுமோ? ஒருவரே எவ்வாறு பலதுறை களிலும் பெரும் புலமைமிக்காராய்த் திகழ்தல் கூடும் எனப் பலவாறு வினாவெழுப்பி ஐயுறத் தொடங்கினர்.

இந்த ஐயுறவுக்கெல்லாம் ஏதுவாயமைவது அவர்தம் பேரறிவே! பல்கலைக்கழகப் பயிற்சியின்றியே பன்னூல் களையும் மறுவறப் பயின்று பயின்று - பல்லாண்டு பெற்ற செயலறிவின் துணையொடு, பாரோரேத்திப் புகழும் இறவா இலக்கியங்களையும் நன்னெறி நவில்கின்ற நலமுடைத்த நூல்களையும் இயற்றிய பேரறிஞர்கள் இலரோ? உளர்! அவர்களுள் ஒருவரே ஷேக்ஸ்பியர்.

ஒருவரே முப்பத்தேழு நாடகங்களையும் இயற்றியிருத்தல் கூடுமோவென ஐயுறின், ஷேக்ஸ்பியரினும் மிகுதியாய் நாடகங்கள் இயற்றிய மேலைநாட்டு நல்லறிஞர் இன்னும் பலருளரே! கிரேக்கப் பெரும் புலவோர் பலர் மிகு எண்ணிக்கையினவாய் நாடகங்கள் இயற்றிப் படைத்த சிறப்பை மறத்தல் கூடுமோ? எடுத்துக்காட்டாய்த் துன்பியல் நாடகங்களின் தந்தையெனப் புகழப்பெறும் எஸ்கிலஸ்



þÿAll rights reserved. ª¿. •¿°

(Aeschylus கி.மு. 525 - 456) 80 நாடகங்களும், சோப்போக்ளீஸ் (Sophocles கி.மு. 496 - 405) 123 நாடகங்களும், யூரிப்பிடீஸ் (Euripides கி.மு. 482 - 407) 75 நாடகங்களும், அரிஸ்டோபனீஸ் (Aristophanes கி.மு. 450 - 388) 42 நாடகங்களும் இயற்றிக் கிரேக்க இலக்கியத்திற்கு வளமூட்டிய அருஞ்செயலை எவரே மறப்பர்? ★ அன்றியும், நூல்கள் எண்ணிக்கையளவைக் கருத்திற்கொள்ளின், தமிழறிஞர் பலர் இவ்வெண்ணிக்கைகளினும் மிகுதியாய் நூல்களியற்றித் தமிழன்னைக்கு அணி செய்திருக்கின்றனரே!

அன்றியும், ஒருவர் பலதுறையிலும் புலமைமிக்காராய்த் திகழ்தல் கூடுமோவென வினவிடில், அத்தகு பல்துறைப் பேரறிவுமிக்க சான்றோர் தோன்றியே இருக்கின்றனர் என்பதை மறுத்தல் கூடுமோ?

ஒரு துறையன்று; பத்துத் துறையன்று; நூறு துறையன்று; நூற்று முப்பத்து மூன்று துறைகளில் தேர்ந்த பேரறிஞராய் விளங்கி, 'எல்லாப் பொருளும் இதன்பாலுள' என்னும் புகழ்மொழிக்கேற்ப, குறுகத்தறித்த குறளை வழங்கவில்லையா நம் முதற்பாவலர்?

ஷேக்ஸ்பியர் நாடகங்களும் பாக்களும் ஏறத்தாழ நானூறு ஆண்டுகளாய்ப் பலதிறத்தினவாய் எத்துணையோ பதிப்புகளைப் பெற்று வந்திருக்கின்றன. நாடக அங்கங்கள், காட்சிகள், மேடை இயக்கம், நாடக மாந்தர் பெயர்கள், நாடகப் பாக்களின் அடிகள், தொடர்கள், சொற்கள் போன்ற பலவற்றுள்ளும் பல்லாயிரம் மாற்றங்கள் செய்யப் பெற்றிருக்கின்றன.

---

★ நூல்கள் எண்ணிக்கையளவை வெவ்வேறு நூல்கள் வெவ்வேறு வகையாய்க் கூறுகின்றன.



þÿAll rights reserved. ª¿. •¿°

இந்த மெக்பெத் நாடகத்தின் பதிப்புகளிலும் சில மாற்றங்கள் உள. சில பதிப்புகளின் ஐந்தாம் அங்கத்தில் எட்டுக் காட்சிகள் வருகின்றன; சில பதிப்புகளில் இந்த எட்டு காட்சிகளும் ஏழு காட்சிகளாய் இணைக்கப்பெற்றிருக் கின்றன. சில பதிப்புகளில் மெக்பெத்தின் துணையாளர் பெயர் செய்ட்டன் (Seyton) என வருகின்றது; சில பதிப்புகளில் செட்டன் (Seton) என்று குறிப்பிடப்பெற்றிருக் கின்றது.

இன்று கிடைக்கப்பெறும் ஷேக்ஸ்பியர் படைப்புகள், பதிப்புக்குப் பதிப்பு வெவ்வேறு மாறுதல்களுடன் விளங்கினும், இவை இலக்கியப் பெரும்புலவர்களாலும் ஆய்வாளர்களாலும் நானூறு ஆண்டுகளாய் இடையறாது நுணுகி ஆய்ந்தும் நிறுத்தக் குறிகள் உள்ளிட்ட பல்லாயிரம் திருத்தங்கள் செய்தும் பதிப்பிக்கப்பெற்றவை. இவை போன்ற மாற்றங்கள் நானூறு ஆண்டுகளாய்த் தொடர்ந்து ஏற்பட்டுவந்தமையால், ஷேக்ஸ்பியர் படைப்புகளுள் ஒன்றேனும் முழுமையாய் அவர் இயற்றியது' போன்று அமையவில்லை என்று கூறுவர்.

இன்னுஞ் சிலர், ஷேக்ஸ்பியர், நாடகத்துறையினின்று ஓய்வு பெற்றபின், அவர் படைப்புகளில் பிறர் கைவண்ணம் புகுதலாயிற்று என்பர். தம் கருத்தை அரண்செய்தற்கு இவர்கள், இம்மெக்பெத் நாடகத்தையும் ஓர் எடுத்துக் காட்டாய்க் கூறுகின்றனர். ஷேக்ஸ்பியர் காலத்தில் வாழ்ந்த - அவரினும் இளையர் தாமஸ் மிடில்ட்டன் (Thomas Middleton) என்பார் இயற்றிய ''மாயக்காரி'' (The Witch) என்னும் நாடகத்தில் மாயவுலகுத் தொடர்புடைய



þÿAll rights reserved. ª¿. •¿°

ஹெக்கேட், மாயக்காரிகள் போன்றார் வரும் காட்சிகள், உரையாடல்கள் போன்றவை மெக்பெத் நாடகத்திலும் இடம் பெற்றிருத்தலைச் சுட்டுகின்றனர்.

ஆயின், இக்கூற்றை வேறு பலர் மறுக்கின்றனர். ''ஷேக்ஸ்பியரைப் பெரிதும் பின்பற்றி அவர் போன்றே தம் நாடகங்களை இயற்றியதுடன், ஷேக்ஸ்பியர் நாடகப் பகுதிகளைத் தம் நாடகங்களிலும் புகுத்தியவர் மிடில்ட்டன். அவர், மெக்பெத்தைப் பின்பற்றியே 'மாயக்காரி' நாடகத்தை இயற்றினார்.

''இந்நாடகத்திற்கு அவர் 'விரைந்து வா' 'கரிய ஆவிகள்' என்னும் இரு பாடல்களை இயற்றினார். மெக்பெத் நாடகத்திற்கு மாயவுலகுணர்வினை மிகுதியாக்குதற் பொருட்டு, மெக்பெத் நாடக நடிகர்கள், அவ்விரு பாடல்களையும் மெக்பெத் நாடகத்தில் இணைத்துக் கொண்டனர். மன்னர் ஆளினர் நாடகக் குழுவுக்கு (ஷேக்ஸ்பியரின் நாடக மன்றம்) ஷேக்ஸ்பியர் போன்றே மிடில்ட்டனும் 1615 முதல் 1624 வரை நாடகங்கள் இயற்றி வந்தார். அதுவே நடிகர்கள், அவ்விரு பாடல்களையும் மெக்பெத் நாடகத்தில் இணைத்துக் கொள்தற்கு ஏதுவாய் அமைந்தது. மெக்பெத் நாடகத்திற்குப் பின்னரே 'மாயக்காரி' இயற்றப்பெற்றது. எனவே, 'மாயக்காரி' மெக்பெத்திற்கு முன்னது என்றோ ஷேக்ஸ்பியர் மிடில்ட்டனைப் பின்பற்றி மெக்பெத்தை இயற்றினாரென்றோ எவருங் கூறார்'' என அறிஞர் ஏ.டபள்யு. வெரிட்டி (A.W. Verity) போன்றார் அறுதியிட்டுக் கூறுகின்றனர்.



þÿAll rights reserved. ª¿. •¿°

## ஷேக்ஸ்பியர் படைப்புகள்:

நாடகங்கள்:

*1.* ஹென்றி VI-1 (Henry VI-1)

*2.* ஹென்றி VI-2 (Henry VI-2)

*3.* ஹென்றி VI-3 (Henry VI-3)

*4.* ரிச்சர்ட் III (Richard III)

*5.* காமெடி ஆஃப் எர்ரஸ் (The Comedy of Errors)

*6.* டைட்டஸ் அண்ட்ரோனிக்கஸ் (Titus Andronicus)

7. டேமிங் ஆஃப் ஷ்ரூ (The Taming of the Shrew)

*8.* ஜென்டில்மென் ஆஃப் வெரோனா (The Gentlemen of Verona)

9. லவ்'ஸ் லேபர்'ஸ் லோஸ்ட் (Love's Labour's Lost)

*10.* ரோமியோ ஜூலியட் (Romeo and Juliet)

*11.* ரிச்சர்ட் II (Richard II)

*12.* மிட்சம்மர் நைட்'ஸ் ட்ரீம் (A Midsummer Night's Dream)

*13.* கிங் ஜான் (King John)

*14.* மெர்ச்சன்ட் ஆஃப் வெனிஸ் (The Merchant of Venice)

*15.* ஹென்றி IV-1 (Henry IV-1)

*16.* ஹென்றி IV-2 (Henry IV-2)

*17.* மச் அடு அபௌட் நத்திங் (Much Ado About Nothing)

*18.* ஹென்றி V (Henry V)

*19.* ஜூலியஸ் சீசர் (Julius Caeser)

*20.* அஸ் யூ லைக் இட் (As You Like It)

*21.* ஹேம்லெட் (Hamlet)



þÿAll rights reserved. ª¿. •¿°

22. மெர்ரி வைவ்ஸ் ஆஃப் விண்சர் (The Merry Wives of Windsor)

23. டுவெல்வ்த் நைட் (Twelfth Night)

24. ட்ரோய்லஸ் கிரெஸ்ஸிடா (Troilus and Cressida)

25. ஆல்'ஸ் வெல் தேட் என்ட்ஸ் வெல் (All's Well That Ends Well)

26. மெஷர் ஃபோர் மெஷர் (Measure for Measure)

27. ஒதெல்லோ (Othello)

28. கிங் லியர் (King Lear)

29. மெக்பெத் (Macbeth)

30. அந்தோணி கிளியோபாட்ரா (Antony and Cleopatra)

31. கோரியோலேனஸ் (Coriolanus)

32. டீமன் ஆஃப் ஆத்தென்ஸ் (Timon of Athens)

33. பெரிக்ளீஸ் (Pericles)

34. சிம்பலின் (Cymbeline)

35. வின்ட்டர்'ஸ் டேல் (Winter's Tale)

36. டெம்பெஸ்ட் (The Tempest)

37. ஹென்றி VIII (Henry VIII)

பாக்கள்:

1. வீனஸ் அடோனிஸ் (Venus and Adonis)

2. ரேப் ஆஃப் லுக்ரே (The Rape of Lucrece)

3. ஃபீனிக்ஸ் - டர்ட்டல் (The Phoenix and The Turtle)

4. சொன்னெட்ஸ் வித் ''அ லவர்ஸ் கம்ப்ளெய்ன்ட்''
(Sonnets with "A Lovers Complaint")



þÿAll rights reserved. ª¿. •¿°

## செய்யுள்:

ஷேக்ஸ்பியர் தம் நாடகங்களைப் பெரிதும் எதுகைத் தொடை குன்றிய செய்யுளடிகளாலேயே இயற்றினார். ஆங்கில மொழிச் செய்யுளில் எதுகை என்பது ஒவ்வோர் ஈரடியின் ஈற்றிலும் ஒன்றி வரும். ஆங்கில யாப்பிலக்கணத்தில் அடி, மீட்டர் எனவும்; சீர், அடி (Foot) எனவும் வழங்கும். இவ்வாறு அடியீற்று எதுகையின்றி வரும் அடிகளுடைய செய்யுளை வெறுமைச் செய்யுள் (blank verse) என்பர்.

இவ்வெறுமைச் செய்யுள் அடிதோறும் ஐந்து சீரும், ஒரு சீருக்கு ஈரசையும் பெற்றிலங்கும். எனவே, ஓரடி பத்து அசைகள் பெற்று வரும். ஒவ்வொரு சீரின் முதலசை மெல்லழுத்தம் பெற்றும் இரண்டாம் அசை வல்லழுத்தம் பெற்றும் ஒரே அமைப்பாய் வரும். இவ்வாறு ஐந்து மெல்லழுத்தமும் ஐந்து வல்லழுத்தமும் பெற்று அளவொத்து வரும் வெறுமைச் செய்யுள், ஒழுங்கமைவு வெறுமைச் செய்யுள் என வழங்கும்.

எலிசபெத் காலத்துப் பெரும் புகழ்பெற்ற நாடகப் பெரும்புலவர் கிறிஸ்டஃபர் மார்லோவுக்கு முன் (Christopher Marlowe 1564-1593), வெறுமைச் செய்யுள் மிகக் கடுமையாய் இவ்வமைப்பிலேயே இயற்றப் பெற்றன. இவ்வகை அமைப்பு நாடகத்திற்குப் பெருஞ் சலிப்பூட்டிற்று. ஏற்றத் தாழ்வின்றி ஒரே அமைப்பில் இரண்டு மணிக்கூறு பேசுதலை நாடக ஆர்வலர் எவரும் பொறுப்பரோ? எனவே, மார்லோவ், அடிகள் அமைப்பில் அழுத்த ஏற்றத்தாழ்வுகள் விரவி வருமாறு முதல் முறையாய் மாற்றங்களைச் செய்தார்.



þÿAll rights reserved. ª¿. •¿°

மார்லோவ் படைப்புகளில் பெரிதும் ஈடுபாடுற்ற ஷேக்ஸ்பியர், அவரைப் பின்பற்றியதுடனன்றிச் செய்யுளடி களில் மேலும் மாற்றங்கள் செய்து தம் நாடகங்களில் விறுவிறுப்பையும் கவர்ச்சியையும் புகுத்தினார்.

ஷேக்ஸ்பியர், தம் தொடக்க நாடகங்களில் - குறிப்பாய் ரோமியோ ஜூலியட், லவ்'ஸ் லேபர்'ஸ் லோஸ்ட், காமெடி ஆஃப் எர்ரஸ் போன்ற நாடகங்களில் மிகுதியாய் எதுகைத் தொடைகளைப் பயன்படுத்தியிருந்தார். ஆயின், தம் பின்னாள் நாடகங்களில் இவற்றைப் பெரிதுங் குறைத்துக் கொண்டார். இதனை,

*"எதுகை மிகையெனின் நாடகம் முன்னது;*
*எதுகை குறைவெனின் நாடகம் பின்னது"*

என்னும் பொருளில் வரும்.

*"Is there much rhyme? the play is early;*
*Is there little rhyme? the play is late."*

என்னும் அடிகளால் உணரலாம்.

ஷேக்ஸ்பியர், தம் நாடகங்களில் வருகின்ற நாடக மாந்தர்-தம் பண்புநலன்களையும் உணர்ச்சிப் புலப்பாடுகளையும் தெள்ளிதின் சித்திரிக்கவும், நாடகங்கள் சுவை குன்றாமல் இருத்தற்கு இயற்கைத் தன்மையும் பல்திறக் கூறுகளும் இன்றியமையாதன என உணர்ந்தார். நாடகத்தின் கருத்-தோட்டத்திற்குத் தடை ஏற்படாதிருக்கும் பொருட்டே அவர், தம் பின்னாள் நாடகங்களில் எதுகை அமைப்பைக் குறைத்துக் கொண்டார். எனினும், ஒவ்வொரு காட்சியின் இறுதியிலும் இன்றியமையாக் கருத்துகளை நாடக மாந்தர் கூறுமிடங்



þÿAll rights reserved. ª¿. •¿°

களிலும் அடியீற்றெதுகையமைந்த ஈரடிச் செய்யுள்கள் அமையுமாறே தம் பின்னாள் நாடகங்களை இயற்றினார்.

அவர், தம் நாடகங்களுள் வரும் நாடக மாந்தர்தம் தன்மைகளுக்கேற்ப உரையிடையிட்டும் நாடகங்களை இயற்றியிருக்கின்றார். ஆயின், செய்யுளுடன் உரைநடையை ஒப்பு நோக்கின் உரைநடை அளவு மிகக் குறைவு. உரை நடையை, அவர் படைஞர், ஏவலர், செவிலி போன்றார்க்கே பயன்படுத்தினார். மெக்பெத் நாடகத்தில் மெக்டஃப் பெருமாட்டி தம் மகனுடன் உரையாடுதலையும், மருத்துவர் செவிலியுடன் உரையாடுதலையும் அவர் உரைநடையிலேயே அமைத்தார்.

## மெக்பெத் வரலாறு:

ஷேக்ஸ்பியர் எவ்வாண்டில் மெக்பெத் நாடகத்தை இயற்றினார் என்பதற்கு அறிஞரிடையே கருத்து வேறு பாடுகள் நிலவினும், அவர் அதனை *1606* ஆம் ஆண்டில் இயற்றியிருத்தல் வேண்டுமெனப் பலர் கருதுகின்றனர்.

அவர் இயற்றிய நாடகங்களுள், மெக்பெத் மட்டுமே பெருமளவில் அவர் காலத்து வரலாற்றுப் பின்னணியை மனத்துள் கொண்டு இயற்றப் பெற்ற நாடகமாகத் திகழ் கின்றது.

தன் மைத்துனன், இங்கிலாந்து மன்னன் முதலாம் ஜேம்ஸைக் காண்பதற்கு இங்கிலாந்து வரவிருந்த டென்மார்க் மன்னன் முன்னிலையில் அரங்கேற்றித் தம் மன்னனை மகிழ்விக்கும் பொருட்டே அவர் இந்நாடகத்தை இயற்றினார் என்பர்.



þÿAll rights reserved. ª¿. •¿°

உண்மையில் வாழ்ந்த மெக்பெத் மன்னன், ஸ்காட் லந்தை *1040* முதல் *1057* வரை ஆட்சி செய்தவன். இவனுக்கு முன் மால்கம் II *(1005-1034)* என்பவனும் டங்கன் I *(1034-1040)* என்பவனும் ஆட்சி செய்தனர். மெக்பெத், டங்கனைக் கொன்றதன் பொருட்டு, டங்கன் மகன் மால்கம், மெக்பெத்தைக் கொன்று பழிதீர்த்து மால்கம் III என ஸ்காட்லந்தின் மன்னனாகின்றான். இவன் *1093* இல் இறந்தான்.

## கருவின் பிறப்பிடம்:

வரலாற்று நாடகங்கள் இயற்றுதற்கு, ஷேக்ஸ்பியர் இரு நூல்களின் துணையைப் பெரிதும் நாடியிருக்கின்றார். ரஃபாயெல் ஹோலின்ஷெட் (Raphael Holinshed) என்பார் எழுதிய ''இங்கிலாந்து, ஸ்காட்லந்து, அயர்லாந்து கால வரிசை வரலாறு,'' எட்வர்ட் ஹால் எழுதிய ''லங்காஸ்டர், யோர்க் குடும்பத்தார் இணைப்பு'' என்னும் இரு நூல்களுமே அவை.

ஷேக்ஸ்பியர், மெக்பெத் நாடகத்திற்கு ஹோலின்ஷெட் நூலில் கருப்பொருள் கண்டார்.

''டங்கன் வலிமையற்ற மன்னன். மெக்பெத் நல்லவன். இருவரும் பகைவர்கள். மெக்பெத், மாயக்காரிகள் மூவரைக் காண்கின்றான். அவர்கள் அவனுக்கு வருவதுரைக்கின்றனர். அவன் தன் மனைவியின் தூண்டுதலால், தன் நண்பன் பேங்கோ, வேறு சிலர் துணையுடன் டங்கனைக் கொன்று நேரிய ஆட்சி செய்கின்றான். பின்னர்த் தன் உயிர் வாழ்வின் பொருட்டுப் பேங்கோவையும் வேறு சிலரையும் கொல் கின்றான். பேங்கோ மகன் வேல்சுக்குத் தப்பியோடி ஸ்டூவர்ட் மரபைத் தோற்றுவிக்கின்றான். இதன் வழி, அவன்



þÿAll rights reserved. ª¿. •¿°

இங்கிலாந்தின் முதலாம் ஜேம்ஸ் மன்னனாய் முடி சூடிய ஸ்காட்லந்தின் ஆறாம் ஜேம்ஸ் மன்னனின் முன்னோனா கின்றான்'' என்று ஹோலின்ஷெட் குறிப்பிடுகின்றார்.

அவர் டோன்வால்ட் என்னும் ஒருவன் வரலாறு பற்றியும் தனியே குறிப்பிடுகின்றார்:

''டஃப் மன்னன் எனப் பெயரிய ஒருவன் டோன்வால்ட் மாளிகையில் விருந்தினனாய் இருந்தபோது, டோன்வால்டும் அவன் மனைவியும் டஃப் மன்னனைக் கொன்றுவிடு கின்றனர்.'' என்பது அந்த வரலாறு.

இந்த இரு வரலாற்றுக் குறிப்புகளிலும் பல முரண் பாடுகள் இருக்கின்றன என்று அறிஞர்கள் கருதுகின்றனர். ஷேக்ஸ்பியர்; இவ்விரு குறிப்புகளையும் இணைத்துப் பலவற்றை ஒதுக்கி - இவ்வரலாற்றுக் குறிப்புகளில் வரும் மாந்தர் சிலர்தம் பண்புநலன்களை மாற்றிப் புது உருவகம் கொடுத்து - மனித உணர்வுகளைத் தம் பேராற்றல் மிக்க சொற்களால் வெளிக்கொணர்ந்து - நல்லதன் நலனையும் தீயதன் தீமையினையும் புலப்படுத்தி - அனைத்துச் சிறப்புகளும் பொருந்திய ஓர் உயரிய நாடகமாய் இம்மெக்பெத்தைப் படைத்திருக்கின்றார்.

ஷேக்ஸ்பியர் இயற்றிய துன்பியல் நாடகங்களுள் ஹேம்லெட், ஒதெல்லோ, மன்னன் லியர், மெக்பெத் என்னும் இந்நான்கும் மிகச் சிறந்தவையென அறிஞர்கள் கூறுவர். மெக்பெத் நாடகம் குறித்து ஜெர்வினஸ் என்பார் இவ்வாறு கூறுகின்றார்:

''மெய்விளக்க நுண்ணறிவால் மனிதனை இயக்குவிக்கும் ஆற்றல்களின் இயற்கைத்தன்மையையும் மதிப்பீடுகளையும் புலப்படுத்துதலில் ஹேம்லெட்போல் வேறெதுவும்

மெ-3

þÿAll rights reserved. ª¿. •¿°

இல்லையெனில், பரந்த விரைவியக்கத்திற்குப் புதுமைப் பொலிவும் மகிழ்வுந் தருதலில் நான்காம் ஹென்றியினும் வேறில்லையெனில், நாடக மாந்தர்தம் பண்பியல்புகளை ஆழ்ந்து சித்திரிப்பதில் ஒதெல்லோவுக்கு ஒப்பில்லையெனில், உணர்ச்சிப் போராட்டங்களைக் கிளர்ந்தெழச் செய்யும் பேராற்றலில் மன்னன் லியருக்கு ஈடில்லையெனில், அறநெறிக்கொள்கை சுட்டுதலில் சிம்பலினை எதுவும் அணுகவியலாதெனில், மெக்பெத் அவற்றைப் போன்றே கவிதைப் பேரொளியாய்ச் - சொல்லோவியக் கருவூலமாய் - மாந்தர், காலம், இடம் அனைத்திற்கும் வாழுஞ் சான்றாய் முதன்மை நிலையெய்தித் தனிச் சிறப்புற்றுத் திகழ்கின்றது.''

*1623* இல் ஷேக்ஸ்பியர்தம் முப்பத்தாறு நாடகங்கள் முதல் முறையாய்ப் பதிப்பிக்கப்பெற்றுத் தொகுப்பாய் வெளியிடப் பெற்றபோது, அவர் காலத்தில் வாழ்ந்த நாடகப் பேரறிஞர் பென் ஜான்சன் (Ben Jonson, 1572-1637),

*''வெற்றி முழங்கிடு மேதகு பிரிட்டனே;*
*உயர்வுடன் உணர்த்திட உனக்கொரு வருளார்.*
*அவர்தமைப் பணிதல் ஐரோப் பாகடன்*
*அவரோர் ஊழியின் அமைவினர் அல்லர்;*
*என்றும் நிலையுடன் இனிதுறை பவரே!''*

என்னும் பொருளில், ஷேக்ஸ்பியரைப் புகழ்ந்து தம் முன்னுரையில் கூறிய பொன்னுரையை இங்கு நினைவு கூர்தல் தக்கது:

***"Triumph, my Britain, thou hast one to show***
***To whom all scenes of Europe homage owe.***
***He was not of an age, but for all time!"***



þÿAll rights reserved. ª¿. •¿°

# மெக்பெத் நாடக மாந்தர்

டங்கன் (Duncan) ......................: ஸ்காட்லந்து மன்னன்

மால்கம் (Malcolm)

டோனல்பெய்ன் (Donalbain) } ........: மன்னன் மக்கள்

மெக்பெத் (Macbeth)

பேங்கோ (Banquo) } .......: மன்னன் படைத்தலைவர்கள்

மெக்டஃப் (Macduff)

லென்னக்ஸ் (Lennox)

ரோஸ் (Ross)

மென்டைய்த் (Mentieth) } : ஸ்காட்லாந்தின் பெருமகனார்கள்

ஆங்கஸ் (Angus)

கெய்த்னெஸ் (Caithness)

ஃப்ளீன்ஸ் (Fleance).......................: பேங்கோ மகன்

சீவர்ட் (Siward)..............: நார்தம்பர்லாந்துக் கோமகன்

இளையன் சீவர்ட் (Young Siward) : சீவர்ட் மகன்

செய்ட்டன் (Seyton)...........: மெக்பெத்தின் துணையாளர்

மெக்டஃப் மகன்

ஆங்கிலேய மருத்துவர்

ஸ்காட்லந்து மருத்துவர்

மறவன் (Sergeant)

வாயிற்காவலன் (Porter)

முதியவர்



þÿAll rights reserved. ª¿. •¿°

மெக்பெத் பெருமாட்டி

மெக்டஃப் பெருமாட்டி

செவிலி

ஹெக்கேட்

*மாயக்காரி 1*

*மாயக்காரி 2*

*மாயக்காரி 3*

*ஆவி 1*

*ஆவி 2*

*ஆவி 3*

*கொலைஞன் 1*

*கொலைஞன் 2*

*கொலைஞன் 3*

பெருமகனார்கள், படைஞர், துணையாளர், தூதர், ஏவலர்.

þÿAll rights reserved. ª¿. •¿°

# அங்கம் : 1

## காட்சி : 1

(மனித நடமாட்டமற்ற புதர் படர்ந்த சமவெளி. இடி, மின்னலுக்கிடையே மாயக்காரிகள் மூவர் தோன்றுகின்றனர்)

மாயக்காரி 1 : இடியிடைக் கூடினோம்; என்றினிக் கூடுவோம்?
இடியிலா மழையிலா எரியுமின் னொளியிலா?

மாயக்காரி 2 : கொடுசெயல் யாவுங் குன்றி யொழிந்திடின்;
தொடுபோர் வெற்றி தோல்வி யடைந்திடின்!

மாயக்காரி 3 : கதிரவன் மேற்கிடைக் கடுகியே மறையுமுன்!

மாயக்காரி 1 : எவ்விடம்?

மாயக்காரி 2 : அப்புதர் வெளியில்!

மாயக்காரி 3 : மெக்பெத் தன்னை மெய்யாய்க் காண்போம்!

மாயக்காரி1 : அருமைப் பூனை அழைக்கிற தென்னை;
வருவேன் பூனையே; மகிழ்வுடன் வருவேன்!

மாயக்காரி 2 : தவளை அழைக்கின்றது!

மாயக்காரி 3 : வருகின்றேன்!

மூவரும் : நேர்மை தானே நேர்மை யின்மை;
நேர்மை யின்மை நேர்மை தானே!
கார்பனி யிடையிலும் கறைவளி தனிலும்
பார்விரி விசும்பினிற் பறப்போம் நாமே!

(மூவரும் மறைகின்றனர்)

þÿAll rights reserved. ª¿. •¿°

## காட்சி : 2

(ஸ்காட்லந்தின் ஃபோர்ரெஸ் நகரருகில் அமைந்திருக்கும் பாசறை. சற்றுத் தொலைவில் போர் முழக்கம் வானைப் பிளந்து கொண்டிருக்கின்றது. கிளர்ச்சிக் கும்பல், மன்னர் படையை எதிர்த்துப் போரிடுகின்றது. கொம்பொலி முழங்கு கின்றது. ஸ்காட்லந்து மன்னன் **டங்கன்,** அவன் இரு ஆண் மக்கள் *மால்கம்,* **டோனல்பெய்ன்** ஆகியோருடன் பெரு **மகனார்கள்** பலரும் இருக்கின்றனர். அப்பொழுது, தன் படைச் சீருடையில் உடல் முழுதும் குருதி தோய்ந்த போர் மறவன் ஒருவன் பாசறைக்குள் நுழை கின்றான்)

டங்கன் : உடல் முழுதும் குருதிப்புனலோடும் இவன் யாவன்? இவன் விழுப்புண்கள் பலவற்றை நோக்கின், கிளர்ச்சி குறித்த புதுச்செய்தியினை இவன் நமக்குப் புகல்தல் கூடும்.

மால்கம் : தந்தையே, இவன் நம் படைஞருள் ஒருவன்; வீறும் திண்மையுமிக்க படை மறவன்; போரில் நான் சிறையிடப்படுவதினின்றும் முன்னின்று காத்தவன். அஞ்சா நெஞ்சமிகு நண்பனே, வாழ்க! நீ அடுகளம் அகன்று இங்கு வருங்கால் அவ்வெங்களச் சூழல் எவ்வாறிருந்ததெனத் தெள்ளிதின் விளக்கிக் கூறு மன்னர்க்கு!

þÿAll rights reserved. ª¿. •¿°

மறவன் : தொடக்கத்தில் ஐயுறும் வண்ணம் போர்நிலை நீடித்தது! நீந்திக் களைத்த நீச்சல் வல்லார் இருவர் போல், இரு பிரிவுப் படையினரும் இழுபறியில் இருந்தனர். அதன் பின்னர், இயற்கையிலேயே கொடுமதி பெருக்கெடுத்த - இரங்குதலற்ற அக் கிளர்ச்சியாளன் மெக்டோன்வால்டுக்குச் சிறு படைக் கலமும் பெரும் படைக்கலமும் தாங்கிய மேற்குத் தீவு அயர்லாந்துக் கூலிப்படையினர், அணி அணி யாய்த் திரண்டு வந்து வலுவூட்டினர். தொடக்கத்தில் நற்பேற்று நங்கை, அந்தக் கிளர்ச்சியாளனின் பொதுமகள்போல் அவன் பக்கலிலே நின்று வெற்றிப் புன்னகை சிந்தினாள். ஆயின், அவை யனைத்தும் குலைந்துபோயின. மானங்காக்கப் பிறந்த அந்தத் துணிவுடைப் பெருமறவர் - மெக்பெத் - ஆம்!... அவர் அந்தப் பெயருக்குப் பெருந்தகுதி யுடையவர்தாம்!... அவர் எல்லாத் தடைகளையும் தூள் தூளாக்கிக் குருதி தோய்ந்த தம் பெருவாளுடன் பகைவர் பலர் தலை கொய்து பிணக்குவியலினூடே ஊடுருவிச் சென்று அந்தப் பகையடிமை மெக்டோன் வால்டை நேருக்கு நேர் எதிர்த்தார். மரபுவழி அவர் அந்த வஞ்சகனுடன் கைகுலுக்கவில்லை; பிரியா விடை பெறவில்லை. அந்த அடுகளத்தில் அவன் குறுந்தலையைத் தம் நெடுவாளால் வெட்டி வீழ்த்தினார்.

டங்கன் : ஓ! என் உறவினனாய்ப் பிறப்பெடுத்த பேராண்மை மிக்க இளவலே! நீ பெருமதிப்பிற்குரிய பண்பினன்!

மறவன் : இளங்கதிர் எழுந்தபின்னர், கலங்கவிழ்க்கும் புயலும் இன்னல் தரும் மின்னலுந் தோன்றுதல்

þÿAll rights reserved. ª¿. •¿°

இயல்பு! அவ்வாறே இன்பத்திற்குப் பின் துன்பமும் பெருகுகின்றது. கேட்டருள்வீர் ஸ்காட்லந்தின் மன்னர் பெரும, கேட்டருள்வீர்! தம் நேரிய நோக்கத்திற்கென அருஞ்சமராற்றும் நம் பேராற்றல் மிக்க படைஞரணியினர், கடிதில் பகைஞரைக் குதிகால் பிடரியில் விழுமாறு பின்வாங்கி ஓடச்செய்தனர். ஆயின், வாய்ப்பையறிந்த நார்வே மன்னன், புதிய படைக்கலங்கள், புதிய படை யணிகள் ஆகியவற்றுடன் புதிய தாக்குதலைத் தொடுத்தான்.

டங்கன் : நம் படைத்தலைவர்கள் மெக்பெத்தும் பேங்கோவும் அஞ்சிச் சோர்ந்து போயினரா?

மறவன் : அச்சமா? குருவிகள் கழுகுகளை அச்சுறுத்துமோ? அரியேறுகள் சிறுமுயல்களுக்கஞ்சுமோ? உண்மை யைக் கூறுவதாயின், அவர்கள் இரட்டைக் குண்டுகள் நிரப்பிய பீரங்கிகளென விளங்கினர். அவர்கள் இரட்டிப்பு வலிமையில் பகைவனுடன் பொருதினர். பகைவர்தம் குருதி வெள்ளத்தில் குளித்தல் வேண்டு மென்னும் எண்ணத்தில் போரிட்டனரா அன்றித் திருநூலில் வருதல் போன்று இன்னொரு மண்டைக் குவியல் இடுகாடென அந்தப் போர்க்களத்தை உருமாற்ற எண்ணினராவென நானறியேன்..... (தடுமாறுகிறான்) எனக்கு... மயக்க உணர்வு தோன்று கின்றது... என்... புண்களுக்குப் பண்டுவம் தேவை...

டங்கன் : மறவனே, உன் விழுப்புண்களைப்போன்றே உன் சொற்களும் வீறுமிக்கவை. அவை உனக்கு மேன்மை யளிக்கின்றன. (ஏவலரை நோக்கி) இவனை மருத்துவர்பால் இட்டுச் செல்க!

**(மறவன் அவ்விடம் விட்டு அகல்கின்றான்)**

þÿAll rights reserved. ª¿. •¿°

இவர் யாவர்?

(ரோஸ் பெருமகனும் ஆங்கஸ் பெருமகனும் வரு கின்றனர்)

மால்கம் : இவர் மதிப்பிற்குரிய ரோஸ் பெருமகனார்.

லென்னக்ஸ் : அவர் விழிகளில் விரைவுத் துடிப்பு மின்னு கின்றது. ஏதோ திகைப்பூட்டுஞ் செய்தி கூற வந்தார் போன்றிருக்கின்றது அவர்தம் தோற்றம்.

ரோஸ் : இறைவன் அரசரைக் காப்பாராக!

டங்கன் : மதிப்பிற்குரிய பெருமகனாரே, எங்கிருந்து வரு கின்றீர்?

ரோஸ் : நம் மக்களை வருத்தி முடக்கும் நார்வேயின் கொடி பறக்கும் ஃபைஃபிலிருந்து வருகின்றேன் மா மன்னா! அந்த வஞ்சகன் கோடோரின் துணையுடன் நார்வே மன்னன் பெருந்தாக்குதல் தொடுத்தான். ஆயின், போர்மகளையே மணந்து நெடுவாள் கையேந்திய மெக்பெத், கையொடு கை; வாளொடு வாளெனப் பெரும் போரிட்டு அவனைத் தாள் பணிய வைத்தான். சுருங்கக் கூறின் நாமே வென்றோம்.

டங்கன் : பெருமகிழ்ச்சி!

ரோஸ் : இப்பொழுது நார்வே மன்னன் ஸ்வேனோ, அமைதி உடன்பாடு வேண்டிக் கெஞ்சுகின்றான். நம் பொதுப் பயனீட்டிற்கென அவன் பதினாயிரம் பவுன் இழப் பீடு தந்தாலன்றி மாண்ட அவன் குடிகளை மண்ணி லிடுதற்கும் அவனுக்கு உரிமை வழங்குதல் கூடாது!

þÿAll rights reserved. ª¿. •¿°

டங்கன் : அந்தக் கோடோர் எம்மை இருமுறை ஏமாற்றுதல் இயலாது! (உடனிருப்போரை நோக்கி) செல்க! இப்பொழுதே சென்று அவன் உயிர் கவ்வும் ஆணையை நிறைவேற்றுக! (**ரோஸ்** பெருமகனை நோக்கி) கோடோர் விருது இனி மெக்பெத்திற்கே உரியது! அந்த விருதிட்டே மெக்பெத்திற்கு வரவேற்புரை கூறுக!

ரோஸ் : அவ்வாறே செய்வேன்.

டங்கன் : கோடோர் எதை இழந்தானோ, அதை மேன்மை யாளன் மெக்பெத் பெற்றான்!

(அவை கலைதல்)

## காட்சி : 3

(புதர் வெளி. இடி, மின்னல். **மாயக்காரிகள்** மூவரும் தோன்றுகின்றனர்)

மாயக்காரி 1 : எங்கேநீ சென்றிருந்தாய் என்னினிய
உடன்பிறப்பே?

மாயக்காரி 2 : பன்றியினைக் கொல்லுதற்குப் பரபரப்பாய்ச்
சென்றிருந்தேன்.

மாயக்காரி 3 : நீயெங்குச் சென்றிருந்தாய் நீடுபுகழ்
உடன்பிறப்பே?

மாயக்காரி 1 : கடலோடி ஒருவன்றன் கல்மனத்து
மனைக்கிழத்தி,
கடலன்ன பெருமடியில் கசுக்கொட்டை
தனைவைத்துக்
கிடுகிடெனக் கடித்திட்டுக் கெடுவயிற்றில்
திணித்திட்டாள்!

þÿAll rights reserved. ª¿. •¿°

கொடுவொன்றை எனக்கென்றேன்: கொடுமையினள்
அவளுந்தான்
'விடக்கிழவி செல்க!'வென விரியன்போல்
சீறலுற்றாள்.
அடலன்ன அவள்துணைவன் 'அலெப்போ' வின்
துறைமுகத்தில்
கடல்நோக்கிப் 'புலி'யென்னுங் கலமேறிப்
போய்விட்டான்.
இடம்நீங்கி வாலற்ற எலிபோன்று சல்லடையில்,
கடுமெனவே கலம்நாடிக் கசடியவள் கணவனுக்குத்
திடுமெனவே செய்திடுவேன் தீங்கு!

**மாயக்காரி 2 :** காற்றுனக்கு நான் தருவேன்!

**மாயக்காரி 1 :** அளப்பரிய அன்பினள் நீ.

**மாயக்காரி 3 :** நானுனக்கு மற்றொன்றுந் தந்திடுவேன்.

**மாயக்காரி 1 :** அனைத்திற்கும் நான்தலைவி; அலைதுறையும்
என்கட்டில்;
நினைக்கின்ற திசைமுழுதும் நிறைவுறவே
நானறிவேன்;
காய்ந்திட்ட வைக்கோலாய்க் கருக்கிடுவேன்
நானவனை;
ஓய்வின்றி இரவுபகல் ஒருபோதும் உறங்கவிடேன்!
ஒன்பதுக்கொன் பதின்கிழமை ஒடுங்கிட்டே
இருட்டறையில்
என்புருகி இன்னலுற இகல்வுடனே
வசைபொழிவேன்!
தன்கலத்தைத் தானிழக்கான்; தகர்காற்றுச்
சுழலவைக்கும்
என்னவுண் டென்னிடம் ஈண்டு?

þÿAll rights reserved. ª¿. •¿°

மாயக்காரி 2 : காட்டெனக்கு! காட்டெனக்கு!

மாயக்காரி 1 : விருப்புடனே இல்லிற்கு விரைவுற்றுத்
திரும்புகையில்
உருக்குலைந்த கலத்தலைவன் ஊனமுற்ற
கட்டைவிரல்!

(அருகில் முழவொலி கேட்கின்றது)

மாயக்காரி 3 : முழவொலி! முழவொலி! வருகிறான்
மெக்பெத்!

(மூவரும் பாடியவாறு கொப்பரையைச் சுற்றி முன்னும் பின்னும் வலம் வருகின்றனர்)

மூவரும் : ஊழினது பிறப்புடையார்; ஒருங்கிணைந்து
கைகோத்தார்!
ஆழிதனை வலம்வருவர்; அகல்நிலமும் வலம்வருவர்!
விம்மிதமாய் வட்டமிட்டே விரைவுடனே
சுற்றிடுவோம்;
மும்முறையே உம்வழியும், மும்முறையே
என்வழியும்.
உறுமூன்று சேர்ந்திட்டால் ஒன்பானாம்; நின்றிடுவீர்!
நறுமறையும் முற்றிற்று நன்று!

(போர்க்களத்திலிருந்து பெரும் புகழுடன் திரும்புகின்றான் **மெக்பெத்**. அவனுடன் மற்றப் படைத்தலைவன் **பேங்கோவும்** வருகின்றான்)

மெக்பெத் : வன்புயற் காற்றும் மென்கதிரொளியும் ஒருங்கமைந்த இந்நாள் போன்று என்றுமே கண்டிலேன் நான்!

þÿAll rights reserved. ª¿. •¿°

**பேங்கோ :** ஃபோர்ரெஸ்ஸினின்று நாம் எவ்வளவு தொலைவில் இருக்கின்றோம்? *(**பேங்கோ, மாயக்காரிகள்** மூவரையும் காண்கின்றான்)* ஆ!... பண்பிலா வகையிலே ஆடை புனைந்து நரைத்த மயிர்; திரைத்த உடலொடு தோற்றந்தருகின்ற இவ்வுயிருருவங்கள் யாவை? இவை மாந்தர்போல் தோன்றவில்லையே? *(அவர்களை நோக்கி)* ஓ!... இவ்வுலகத்தினரல்லர் போன்றுளது இவர்கள் தோற்றம். ஆயினும், இவர்கள் இங்கே உளர். நீயிர் உயிர்வாழ்வினரா அன்றி எம்போன்ற மனிதர் வினாக்கள் தொடுக்கும் இயல்புடைத்த ஆவியுருவத்தினரா? *(மாயக்காரிகள் விரல்களைத் தம் இதழ்களில் வைக்கின்றனர்)* நீயிர் உமது பிளவுண்ட வன்மைமிகு விரல்களை வற்றியுலர்ந்த உமது இதழ்களில் வைத்தலை எண்ணிடில், நான் கூறுவனவற்றை முற்றும் அறிவீர் என்றே எண்ணுகின்றேன். *(அவன் அவர்கள் மோவாயை உறுத்து நோக்குகின்றான்)* நீயிர் பெண்டிரைப் போன்று தோன்றுகின்றீர். ஆயினும், உமக்கு மோவாய் மயிர் உளதே!

**மெக்பெத் :** இயலுமெனில் பேசுக! நீயிர் யாவர்?

**மாயக்காரி 1 :** வாழ்த்துகின்றோம், மெக்பெத்! கிளாம்ஸ் பெருமகனே, வாழ்க!

**மாயக்காரி 2 :** வாழ்த்துகின்றோம், மெக்பெத்! கோடோர் பெருமகனே வாழ்க!

**மாயக்காரி 3 :** வாழ்த்துகின்றோம், மெக்பெத்! இனி நீ மன்னனாவாய்!

þÿAll rights reserved. ª¿. •¿°

**பேங்கோ :** *(மெக்பெத் பக்கம் திரும்பி)* என்னரும் நண்பரீர், ஏனிந்தத் திகைப்பு? இது இனிக்குஞ் செய்தி யன்றோ? *(**மாயக்காரிகள்** மூவரையும் நோக்கி)* உண்மையின் பெயரால் வினவுகின்றேன். நீயிர் யாவர்? கற்பனை உருவமா? அன்றி, உமது புறத் தோற்றம் சுட்டுவதுபோன்று நீயிர் மனிதப் பிறவியரா? என்னருந் தோழர் நிகழ்கால விருது குறிப்பிட்டு அப்பெருமகனை வாழ்த்தினீர்! பின்னர், அரச அவாவினையூட்டிப் புதிய விருதுகளையும் முன்னுரைத்தீர்! அச்செம்மல் இப்பொழுது எண்ணச் சுழலில் மூழ்கிப்போனார். என்னைப்பற்றி நீயிர் எதுவுங் கூறாதுபோனீர். கால விதைகளை முன்னறிந்து கணித்து எவை வளரும் எவை வளரா என்பதை உம்மால் கூற இயலுமெனில் - எவர் துலங்குவார், எவர் துலங்கார் எனத் துலக்கவியலு மெனில், என்னிடம் பேசுக! உமது உதவிகளை விரும்பேன் நான்; உமது வெறுப்புக்கும் அஞ்சேன்!

**மாயக்காரி 1 :** *வாழ்க!*

**மாயக்காரி 2 :** *வாழ்க!*

**மாயக்காரி 3 :** *வாழ்க!*

**மாயக்காரி 1 :** மெக்பெத்தினும் தாழ்வினன்; ஆயினும் உயர்ந்தவன்.

**மாயக்காரி 2 :** மகிழ்விலாதவன்; எனினும், பெருமகிழ்வுடை யோன்...

**மாயக்காரி 3 :** நீ மன்னராகும் மக்களைப் பெறுவாய்; எனி னும், நீ மன்னனாதல் இயலாது! வாழ்த்துகின்றோம் மெக்பெத், பேங்கோ!

þÿAll rights reserved. ª¿. •¿°

மாயக்காரி 1 : பேங்கோ, மெக்பெத்! வாழ்த்துகின்றோம்!

மெக்பெத் : *(தன் நினைவு வந்தவனாய்)* குறையுடைச் சொற்களைப் புகன்றோரே, நின்றிடுவீர்! எனக்கு இன்னுங் கூறுவீர்! என் தந்தை சினெல் பெருமகனார் மறைந்ததன் விளைவாய் நானே கிளாம்ஸ் பெருமகன் எனத் திகழ்கின்றேன் என்பதை நானறிவேன். ஆயின், நான் எவ்வாறு கோடோர் ஆவேன்? கோடோர் வாழ்கின்றான்! செல்வங் கொழிக்கும் பெருமகன் அவன். இந்நிலையில் நான் அரசு கட்டிலேறி அரசனாவேனா? எண்ணுதற்கே இயலவில்லை. கோடோர் பெருமகனாதல் எவ்வாறு இயலாச்செயலோ, அதுபோன்றதே மணிமுடி சூடி வேந்தனாதலும்! இவ்வியப்புறு செய்தி உமக்கு எவ்வாறு கிட்டிற்று? வருவதுரைக்க ஏன் எம்மை இந்த அழிந்த புதர்வெளியில் வழி நிறுத்தினீர்? பேசுக! நான் ஆணையிடுகின்றேன்!

**(மாயக்காரிகள் மறைகின்றனர்)**

பேங்கோ : நீருக்குக் குமிழிகள் உளவாதல் போன்று நிலத்திற்கும் குமிழிகள் உள. அவர்களும் நீர்க்குமிழிகளே! அவர்கள் எங்குச் சென்று மறைந்தனர்?

மெக்பெத் : காற்றில் கரைந்து போயினர். உறுதிப்பொருளெனத் தோன்றியோர், மூச்சு, காற்றில் கலப்பது போன்று உருகிக் கரைந்து போயினர். அவர்கள் இங்கே இருந்திருக்கலாம்.

þÿAll rights reserved. ª¿. •¿°

பேங்கோ : நாம் பேசுகின்ற அவை இங்கே இருந்தனவா? அன்றி, நம் நினைவாற்றலை இழக்கச் செய்யும் நச்சுக் கிழங்கை உண்டு நாம் பித்தராகிப் போனோமா?

மெக்பெத் : உமது மக்கள் மன்னர்களாவர்.

பேங்கோ : நீயிர் மன்னனாவீர்!

மெக்பெத் : கோடோர் பெருமகனும் அரசனாவான். அவர்கள் அவ்வாறுதானே கூறினர்?

பேங்கோ : ஆம், அவ்வாறுதான் கூறினர். யார் அங்கே?

(ரோஸ், ஆங்கஸ் இருவரும் வருகின்றனர்)

ரோஸ் : மெக்பெத், உமது வெற்றி குறித்து மன்னர் உவகையடைந்தார். நீயிர் பகைவருடன் பொருதிய போர்த்திறம் அறிந்து வியப்புற்ற அவர், தம் மனக்கிளர்வைத் தம் நெஞ்சத்திற்குள்ளேயே சிறை யிட்டுக்கொள்வதா அன்றி, உம்முடன் பகிர்ந்து கொள்வதா என அறியாது சொல்லிழந்து போனார். பின்னர், அதே நாளில் நீயிர் அந்த நார்வே யினரிடையே இருந்ததை அவர் அறிந்தார். எதற்கும் அஞ்சாச் செம்மலெனச் சாவின் வியத்தகு நிழல் களைப் படைத்தீர்! டங்கன் அரசின் தற்காப்புக்கு நீயிர் ஆற்றிய அரும்பணி குறித்துத் தூதர்கள், மன்னர் முன் வந்து அடுக்கடுக்காய்ப் புகழாரஞ் சூட்டினர்.

ஆங்கஸ் : உமக்கு மன்னர்தம் நன்றிதனைக் கூறவே வந் தோம்; பரிசிலொடு வரவில்லை.

ரோஸ் : ஆயின், குவியவிருக்கும் பெரும்புகழுக்கு அறிகுறி யாய், உம்மைக் கோடோர் பெருமகன் என்னும் விருதுப் பெயரால் அழைத்தல் வேண்டும் என மன்னர் எனக்குக் கட்டளை பிறப்பித்திருக்கின்றார்.

þÿAll rights reserved. ª¿. •¿°

எனவே, அதே விருதால் உம்மை வாழ்த்துகின்றேன். வாழ்க, பெருமதிப்பிற்குரிய பெருமகனாரே! கோடோர் விருது உமக்கே!

பேங்கோ : *(தனக்குள்)* என்ன, பேய் உண்மை புகலுமோ?

மெக்பெத் : கோடோர் பெருமகன் வாழ்கின்றான். ஏன் எனக்கு இரவல் ஆடையை அணிவிக்கின்றீர்? ஏன் அவன் பெயரால் என்னை அழைக்கின்றீர்?

ஆங்கஸ் : பெருமகன் விருதைப் பெற்றிருந்த அவன் இன்னும் வாழ்கின்றான். ஆயின், தன் வினைக்கேற்ப உயிர் போக்கும் கட்டளை ஏற்றிருக்கும் அவன், உயிரிழக்கும் நாள் நோக்கிக் காத்திருக்கின்றான். அவன் நார்வேயருடன் நட்புறவு கொண்டானா அன்றி, மறைமுகமாய்க் கிளர்ச்சியாளர்க்கு உதவி செய்தானா அன்றித் தன் நாட்டின் அழிவிற்கு இரண்டுமே செய்தானா என்பதை நான் அறியேன். ஆயின், அவன்றன் கொடிய வஞ்சகச்செயல் மெய்ப்பிக்கப்பட்டுவிட்டது. அவன் குற்றத்தை ஒப்புக் கொண்டான். விளைவு? வீழ்த்தப்பட்டான்.

மெக்பெத் : *(தனக்குள்)* கிளாம்ஸ் பெருமகன்... பின்னர்க் கோடோர் பெருமகன். மிகச் சிறந்தது இன்னும் உளது! ***(ரோஸ், ஆங்கஸ்*** *இருவரையும் நோக்கி,)* பெருந்தொல்லையுற்ற உம்மிருவர்க்கும் என் நன்றி. ***(பேங்கோ****வை அணுகி)* உமது மக்கள் மன்னர்களாகும் ஆவல் உமக்கு உண்டன்றோ? கோடோர் பெருமகன் விருதை எனக்கு வழங்கியோர் உமது மக்களுக்கும் குறைவாக வாக்குறுதி அளித்தாரில்லையே!



þÿAll rights reserved. ª¿. •¿°

பேங்கோ : இன்னுங் கூறவேண்டுமெனில், நீயிர் கோடோர் பெருமகனாதலுடன், முடியும் சூடிக்கொள்ளலாம். ஆயின், இது விந்தைக்குரியது. சிற்சில வேளை களில், நாம் கேடிழைக்கத் தூண்டும் வகையில் சிறு உண்மைத் துணுக்குகளைக் கூறி நம் நம்பிக்கையைப் பெற்றுவிடுகின்றது பேய்! பின்னர், இன்றியமையா தனவற்றில் நம்மை வஞ்சித்து அழித்து ஒழித்து விடுகின்றது. (**ரோஸ், ஆங்கஸ்** இருவரையும் நோக்கி) நண்பர்களே, உம்மிடம் ஒரு சொல் கூறலாமா?

மெக்பெத் : (தனக்குள்) இரு முன்னறிவிப்புகள் உண்மை யென உறுதியாயின. இது களிப்பின் உச்சமாகிய அரியணை ஏறுதற்குரிய முதல் படி! (**பேங்கோ, ரோஸ், ஆங்கஸ்** மூவரையும் நோக்கி) நன்றி, பெருமக்களே! (தனக்குள்) இயற்கைக்கு மாறாய இதில் சுரக்கின்ற வேட்கை தீதும் அன்று; நன்றும் அன்று! தீதெனில், வெற்றியின் முன்சுவையை ஏன் எனக்கு வழங்கிற்று? உண்மையிலிருந்தன்றோ அது தொடங்கிற்று? நான் கோடோர் பெருமகன். இது நன்றெனின்,மயிர் குத்திட்டு நிற்கும் வண்ணம் - நெஞ்சத் துடிப்பு, இயற்கைக்கு முரணாய், விலா எலும்புகளை நொறுக்கிப் பிழிகின்ற கொடிய எண்ணங்களை நான் ஏன் எண்ணல் வேண்டும்? மனத்துள் உறைந்திருக்கும் அச்ச உணர்வுகள், உண்மை அச்சத்தினும் கொடிது! கொலையை எண்ணிய அளவில், அது ஒருமை நிலையில் உய்த்துணரும் இந்த மனித உடலியக்கத்தைச் செயலிழக்கச் செய்துவிடுகின்றது. என் தலைக்குள் இவ்வேளை என்ன நிகழ்கின்றதோ, அதுவே உண்மையெனத் தோன்றுகின்றது.

þÿAll rights reserved. ª¿. •¿°

பேங்கோ : ***(ரோஸ், ஆங்கஸ்*** *இருவரையும் நோக்கி)* காண்பீர்! நம் தோழர் எவ்வாறு மனமொன்றிப் போய்விட்டார்!

மெக்பெத் : *(தனக்குள்)* நான் மன்னனென ஊழ் உரைக்கின்ற தெனில், அவ்வூழே என் உதவியின்றி என்னை மன்னனாக முடி சூட்டும்.

பேங்கோ : ***(ரோஸ், ஆங்கஸ்*** *இருவரையும் நோக்கி)* நம் புதுமை ஆடைகள் போன்றவை அவர்தம் புதிய விருதுகள். அவை பழகி வருதற்கு நாளாகும்.

மெக்பெத் : *(தனக்குள்)* எது வரினும் வரட்டும். கொந் தளிக்கும் நாளுக்கும் முடிவுண்டு.

பேங்கோ : மதிப்பிற்குரிய மெக்பெத்! புறப்படுதற்கு நீயிர் எண்ணினீராயின் அனைவரும் புறப்படலாம்.

மெக்பெத் : *(தன்னுணர்வு பெற்று)* பொறுத்தல் வேண்டும். என் எண்ணங்கள் எங்கோ போயின. கனிவுடைப் பெருமரீர், உமது பேரன்பிற்கு என்றென்றும் நன்றி. மன்னரைக் காண்போம்; புறப்படுக! ***(பேங்கோவை*** *நோக்கி)* பேங்கோ! நடந்தவற்றை நினைவுகூர்க! பின்னர் நமக்கு வாய்ப்பிருக்குமாயின் அவற்றைச் சீர்தூக்கிப் பார்த்து இருவரும் திறந்த மனத்துடன் பேசுவோம்.

பேங்கோ : மிக மகிழ்வுடன் பேசுவேன்.

மெக்பெத் : இதனுடன் நிறுத்துவோம். ***(ரோஸ், ஆங்கஸ்*** *இருவரையும் நோக்கி)* நண்பர்களே, வருவீர்.

(புறப்படுகின்றனர்)

þÿAll rights reserved. ª¿. •¿°

## காட்சி : 4

(ஃபோர்ரெஸ் மாளிகை. எக்காள இசை முழக்கம். மன்னன் டங்கன், மால்கம், டோனல்பெய்ன், லென்னக்ஸ், துணையாளர் ஆகியோர் இருக்கின்றனர்)

டங்கன் : கோடோர் உயிர் பறிக்கும் கட்டளை நிறைவேறிற்றா? கட்டளை நிறைவேற்றச் சென்றோர் திரும்பினரா?

மால்கம் : மாட்சிமைமிக்க மன்னா, அவர்கள் இன்னும் திரும்பவில்லை. ஆயின், கோடோர் மாண்டதைக் கண்ணுற்ற ஒருவனுடன் நான் பேசினேன். கோடோர், தன் வஞ்சகச் செயலை வெளிப்படையாய் ஒப்புக் கொண்டான் எனவும் மன்னர்தம் பொறுத்தருள்தலை மனமுருகி வேண்டினான் எனவும், இழைத்த இடும்பைக்கு இரங்கினான் எனவும் அத்தூதன் அறிவித்தான். இருக்குங்கால் இருந்த வாழ்வினும், இறக்குங்கால் மதிப்புடன் இறந்தான். இறப்பை நுணுகி அறிந்தான் போன்று, தன் இன்னுயிரால் இனிப் பயனேதும் இலதென வெண்ணி அதனைத் துறந்து மறைந்தான்.

டங்கன் : ஒருவன் மனத்தில் நிழலாடும் எண்ணங்களை அவன் முகத்தில் நீ அறிதல் இயலாது. அவன் பெருமதிப்பிற்குரியனென நான் அவன்பால் முழு நம்பிக்கையுடையனாயிருந்தேன்.

(மெக்பெத், பேங்கோ, ரோஸ், ஆங்கஸ் ஆகியோர் வருகின்றனர்)

þÿAll rights reserved. ª¿. •¿°

மெக்பெத் : அன்பு கூர்ந்து அங்குப் பார்! பார்! இப்பொழுது நீ என்ன கூறுகின்றாய்? (**ஆவி**யை நோக்கி) ஏன்? நான் எதற்குக் கவலையுறல் வேண்டும்? உன்னால் தலையசைக்க முடியுமெனில், பேசவும் இயலும். நாம் புதைகுழியிலிட்டோரைக் கல்லறைகளும் திரும்ப அனுப்பி வைக்குமெனில், நம் பிணங்களைக் கழுகுகளுக்கு இரையாக்குதலே தக்கது!

(**ஆவி** மறைகின்றது)

மெ.பெருமாட்டி : என்ன, அறிவு பிறழ்ந்ததனால் உங்கள் மனிதத் தன்மையும் மறைந்து போயிற்றா?

மெக்பெத் : இங்கு நான் நிற்கின்றேன் என்பது எத்துணை உண்மையோ அத்துணை உண்மை அதனை நான் கண்டதும்!

மெ.பெருமாட்டி : எத்தகு அறிவின்மை!

மெக்பெத் : (தனக்குள்) மனிதத்தன்மைமிக்க நெறிமுறைகள், மக்கள் தொகுதியின் வன்மையைக் களையெடுத்து மென்மையுறச் செய்தற்கு முன்னர், குருதி சிந்தியிருக்கின்றது. அதன் பின்னரும் செவிமடுக்கவியலாக் கொடுமைமிகு கொலைகள் நிகழ்ந்திருக்கின்றன. சிதறிற்று மூளையெனில், அவன் மாண்டு போவான் எனக் கருதிய காலமும் உண்டு. அதனுடன் அது முடிந்தது! இப்பொழுது அத்தகையோர், தலைகளில் சாவினது இருபது வெட்டுகளுடன் மீண்டும் தோன்றுதலுடன் நம் இருக்கைகளையும் கவர்கின்றனர். இது கொலையினும் விந்தை!

þÿAll rights reserved. ª¿. •¿°

ரோஸ் : பெருமக்களே, அனைவரும் எழுவீர்! மன்னருக்கு நலமில்லை.

மெ.பெருமாட்டி : நல்ல நண்பர்களே, அமர்வீர்! எம்பெருமானார் பற்பல வேளைகளில் இவ்வாறுதான் நடந்து கொள்கின்றார். இளமையிலிருந்தே அவர் இவ்வாறு தான் இருக்கின்றார். அன்பு கூர்ந்து உமது இருக்கைகளிலேயே அமர்ந்திருப்பீர். இந்த வலிப்பு நோய் விரைவில் மறைந்தொழியும். அவர் இமைப் பொழுதில் நலங் காண்பார். அவர்பால் பெரிதுங் கருத்துச் செலுத்துவீராயின் நீயிர் அவரைச் சினமுறச் செய்தலுடன், வலிப்பு நோய் வளரவும் வழி வகுத்துவிடுவீர். விருந்துண்க! அவரைப்பற்றி எண்ணுதல் வேண்டாம். (சினத்துடன் மெக்பெத்தை நோக்கி) நீங்கள் ஓர் ஆண் மகனா?

மெக்பெத் : ஆம்! பேயினை எதிர்த்து நோக்கி அதனையே அஞ்சச் செய்யும் பேராண்மைமிக்கவன் நான்.

மெ.பெருமாட்டி : ஓ, உண்மையாகவா? இது உங்கள் அச்சத்தின் கற்பனை. டங்கன்பால் உங்களை இட்டுச் சென்றதாய் நீங்கள் கூறிய காற்றில் தவழ்ந்த குத்துவாள் போன்றதே இது! குளிர்காலத்துத் தீக்காயும் இடந்தன்னில் கூறப்பெற்ற முதிய மனைவி ஒருத்தியின் கதை போன்றதே இத்திடீர் உணர்ச்சிப் பெருக்கும் இப்போலி அச்சமும்! நாணமில்லையா உங்களுக்கு? ஏன் இவ்வாறு நடந்து கொள்ளல் வேண்டும்? பேசியன பேசி செய்வன செய்தற்பின் நீங்கள் காண்பது ஓர் இருக்கையே!

þÿAll rights reserved. ª¿. •¿°

லென்னக்ஸ் : அமருங்கள், மேன்மைமிகு பெரும.

மெக்பெத் : நம் நண்பன் பேங்கோ இங்கு இருந்திருப் பானாயின், இந்நாட்டுப் பெருமகனார்கள் அனை வரும் ஒரே கூரையின் கீழ் ஒருங்குகூடி இருந் திருப்பர். இதனை எதிர்பாரா நிகழ்வென நான் எண்ணவில்லை; அன்பற்ற செயலெனக் கருது கின்றேன்!

லென்னக்ஸ் : அவர் இங்கு இல்லாமை வாக்குறுதியை மீறிய செயல். (ஓர் இருக்கையைச் சுட்டி) மேன்மைமிகு பெருமரீர் இங்கு அமர்ந்து எங்களுக்குப் பெருமை யூட்ட வேண்டுகின்றோம்.

மெக்பெத் : இந்த அமர்விடம் நிறைந்து போயிற்று.

லென்னக்ஸ் : இங்கு ஓரிடம் ஒதுக்கப்பட்டிருக்கின்றது, பெரும.

மெக்பெத் : எங்கே?

லென்னக்ஸ் : இதோ, பெருமைக்குரிய என் பெரும. மேன்மைமிகு பெருமரீர்தமக்கு என்னவாயிற்று?

மெக்பெத் : (**ஆவி**யைச் சுட்டி) உம்முள் இதனைச் செய்தவர் எவர்?

பெருமக்கள் : என்ன பெரும?

(**ஆவி** கைகளால் குறிப்புக் காட்டுகின்றது)

மெக்பெத் : நான் செய்தேனென உன்னால் கூற இயலாது! உன் குருதிமுடித் தலையை என்பால் அசைக்காதே!

þÿAll rights reserved. ª¿. •¿°

கொலைஞன் 1 : ஆம், என் பெரும. தலையினில் அகழ் போன்ற ஆழமிகு இருபது வெட்டுகள் - அவற்றுள் சில சாவு வெட்டுகள். அவற்றோடு அவன் இப்பொழுது அகழியில் நற்காப்புடன் படுத்துவிட்டான்.

மெக்பெத் : அதற்கு நன்றி, முதிய பாம்பு செத்தொழிந்தது. தப்பியோடிய சிறுபாம்பு, காலம் வருங்கால் நஞ்சினைக் கக்கும். ஆயின், இப்பொழுது அதற்கு நச்சுப்பல் இல்லை. நீ போகலாம். நாளை, நான் தனித்திருக்குங்கால் உன்னிடம் இது குறித்து மேலும் அறிகின்றேன்.

(முதற் கொலைஞன் செல்கின்றான்)

மெ.பெருமாட்டி : என் அரசர் பெரும! விருந்தோம்புநராகிய நீங்கள் மகிழ்வித்தலை மறந்தீர்கள். இடைவழி விடுதி உணவு படைத்தலில் வாழத்துரைக்கு வழியில்லை. வெறும் உணவெனில், அதனை இல்லமிருந்தே உண்ணலாம்! விருந்துக்கு மணந் தருவன மரபுவழி நடக்கின்ற மகிழ்வூட்டும் நிகழ்ச்சிகளே! அவை இல்லாவிடில், அவ்விருந்து வெறுமை விருந்தே!

**(பேங்கோவின் ஆவியுருவம் விருந்து மண்டபத்திற்குள் வந்து மெக்பெத்'தின் இருக்கையில் அமர்கின்றது)**

**மெக்பெத்** : கனிவுடன் நினைவூட்டுகின்றேன். பசித்தலும் செரித்தலும் பெருகட்டும்; இரண்டும் நலமுடையன வாகட்டும்!

þÿAll rights reserved. ª¿. •¿°

(அமர்வதற்கு அவன் இருக்கை தேடுகின்றான்) இருபக்கமும் இடமில்லை. நான் இங்கு நடுவில் அமர்கின்றேன். (அவன் **கொலைஞனைக்** காண்கின்றான்) அனைவரும் துய்த்து மகிழ்ந்திடுக! பருகு கிண்ணத்தை யாம் சுற்றுமுறையில் அனுப்புகின்றோம். (**கொலைஞனை** நோக்கி) உன் முகத்தில் குருதி படிந்திருக்கின்றது.

**கொலைஞன் 1 :** இது பே ங்கோவினுடையது.

**மெக்பெத் :** இது அவனுள் இருத்தலினும் உன் முகத்திலிருத்தலே சிறந்தது! அவன் கொலையுண்டானா?

**கொலைஞன் 1 :** என் பெரும, அவன் குரல்வளை அறுந்தது; அறுத்தவன் நான்.

**மெக்பெத் :** குரல்வளை அறுப்பதில் நீ குவலயத்திலேயே சிறந்தவன். ஃப்ளீன்ஸை அவ்வாறு செய்தவனும் சிறந்தவனே. நீயே அதனையும் செய்திருப்பின், உனக்கு ஒப்பாரும் மிக்காரும் எவருமிலர்!

**கொலைஞன் 1 :** பெரும்புகழோங்கும் அரசர் பெரும... ஃப்ளீன்ஸ் தப்பி விட்டான்.

**மெக்பெத் :** என் வலிப்பு நோய் மீண்டும் என்னைப் பற்றிவிட்டது. அல்லாக்கால் வழுவிலாச் சலவைக் கல், மலை போன்ற உறுதி, கட்டற்ற காற்றுப் போன்றவன் நான். ஆயினும், இவ்வேளை குடைகின்ற ஐயுறவாலும் அச்சத்தாலும், கட்டுண்டு - அடைபட்டு - நெருக்குண்டு - சிறைப்பட்டுப் போனேன். எனினும், பேங்கோ முடிந்தான்?

þÿAll rights reserved. ª¿. •¿°

## காட்சி : 4

(மாளிகை விருந்து மண்டபத்தில் விருந்து ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. மெக்பெத், மெக்பெத் பெருமாட்டி, ரோஸ், லென்னக்ஸ், பெருமகனார்கள் ஆகியோருடன் துணையாளர் பலரும் இருக்கின்றனர்)

மெக்பெத் : உம் வரிசை நிலையை நீயிர் அறிவீர். அமர்க! முதன்மை அமர்வு முதல் கீழ்வரிசை ஈறாக அமர்ந்திருக்கும் அனைவர்க்கும் யாம் எம் மனங் கனிந்த நல்வரவு கூறுகின்றோம்!

பெருமக்கள் : நன்றி, மாட்சிமை மிக்க மன்னர் பெரும!

மெக்பெத் : யாம் விருந்தினரொடு கலந்துறவாடிப் பணிவுடை விருந்தோம்புநனாய் எம் கடனாற்றுவோம். விருந்தோம்பும் அரசியார் தம் இருக்கையிலேயே இருப்பார். வேளை வருங்கால் அவர் உம்மை வரவேற்பார்.

மெ.பெருமாட்டி : நம் நண்பர்கள் அனைவர்க்கும் என் சார்பில் அவ்வாறே செய்க, என் பெரும. நான் மனமுவந்து அனைவரையும் வரவேற்கின்றேன்.

(பெருமகனார்கள் அனைவரும் எழுந்து நின்று வணங்குகின்றனர். முதற் கொலைஞன் வருகின்றான்)

மெக்பெத் : (மெக்பெத் பெருமாட்டியை நோக்கி) பார்! அவர்கள்தம் மனம் நிறைந்த நன்றி உனக்குத்தான்.

þÿAll rights reserved. ª¿. •¿°

கொலைஞன் 3 : அவன்தான்!

கொலைஞன் 1 : நில்லுங்கள்!

பேங்கோ : (இயல்பாய்) இன்றிரவு மழை பெய்யும்.

கொலைஞன் 1 : அது கொட்டட்டும்.

(முதற் கொலைஞன் விளக்கைத் தட்டி வீழ்த்து கின்றான். மற்ற இருவரும் பேங்கோவைக் குத்து வாள்களால் குத்துகின்றனர்.)

பேங்கோ : ஓ, வஞ்சகம்! ஓடு, ஃப்ளீன்ஸ் ஓடு, ஓடு, ஓடு! நீ எனக்காகப் பழி வாங்கு! ஓ!... கொடியவர்களே...

(அவன் இறக்கின்றான். ஃப்ளீன்ஸ் தப்பிவிடு கின்றான்.)

கொலைஞன் 3 : விளக்கைத் தட்டியவன் யார்?

கொலைஞன் 1 : அதுதானே திட்டம்?

கொலைஞன் 3 : நாம் ஒருவனைத்தான் கொன்றோம். மகன் தப்பிவிட்டான்.

கொலைஞன் 2 : நம் பணியின் சிறந்த பாதியில் தோல்வி யுற்றோம்.

கொலைஞன் 1 : நன்று; புறப்படுங்கள். நாம் செய்ததைச் சென்று அறிவிப்போம்.

(மூவரும் செல்கின்றனர்)

þÿAll rights reserved. ª¿. •¿°

எங்களுக்குக் கூறினார். என்ன செய்தல் வேண்டும் எனத் துல்லியமாய் விளக்கியிருக்கின்றார்.

கொலைஞன் 1 : நன்று, நீயும் எங்களுடன் சேர்ந்துகொள். மேற்கில் கதிரவனின் ஒளிக்கீற்றுகளுள் சில, இன்னுந் தெரிகின்றன. பின் தங்கிய பயணிகள், வாய்ப்பு நலமிக்க விடுதிகளைப் பெறுதற்குத் தம் குதிரைகளை விரைவாய்ச் செலுத்தி வரும் வேளை இது. நாம் காத்திருக்கின்ற ஆள், அருகில் வந்து கொண்டிருக்கின்றான்.

கொலைஞன் 3 : கேளுங்கள்! எனக்குக் குதிரைக் குளம்பொலிகள் கேட்கின்றன.

பேங்கோ : (தொலைவில் தன் மகனிடம்) அப்பக்கம் எனக்கு விளக்கைக் காட்டு!

கொலைஞன் 2 : அவன்தான்! மற்ற விருந்தினர்கள் மாளிகையில் இருக்கின்றனர்.

கொலைஞன் 1 : அவன் குதிரையினின்று இறங்கிவிட்டான்.

கொலைஞன் 3 : ஏறத்தாழ ஒரு கல் தொலைவு. அவன் வழக்கமாக அவ்வாறுதான் செய்வான். எல்லாரும் அவ்வாறுதான் செய்வர். அவர்கள் இங்கிருந்து மாளிகை வாயிற்கதவுவரை நடந்தே செல்வர்.

**(பேங்கோ வருகின்றான். அவனுடன் ஃப்ளீன்ஸ் கைவிளக்கேந்தி வருகின்றான்)**

கொலைஞன் 2 : ஒரு விளக்கு, ஒரு விளக்கு!

þÿAll rights reserved. ª¿. •¿°

மெக்பெத் : அன்பிற்கினியாளே! அச்செயலினை அறிந்து புகழ்கின்றவரை, அதை நீ அறியாதிருத்தலே நன்று! குருடாக்கும் இரவே வருக! இரங்கத்தக்க பகலின் மென்கண்ணை மறைத்தற்கு வருக! குருதி தோய்ந்த - கட்புலனுக்குத் தோன்றாத உன் கையால் அச்சத்தில் என்னை ஆழ்த்திக் கொண்டிருக்கும் அந்தப் பிணிப்பையறுத்துத் துண்டு துண்டாக்குதற்கு வருக! இருள் சூழ்கின்றது; காக்கை, தன் இல்லம் நாடி இருள்படர்ந்த காடு நோக்கிப் பறக்கின்றது. பகலின் நல்லனவெல்லாம் வருந்தி மயங்கித் துஞ்சுகின்றன. ஆயின் இரவின் உயிர்க்கொல்லிகள் உயிர்த்தெழுந்து உயிர் பறிக்க உந்துகின்றன. என் சொற்கள் உனக்கு வியப்பூட்டலாம். ஆயின், நினைவிற் கொள். தீமை யினின்றே தீயன தோன்றி வலிமையுற்று வளர் கின்றன. எனவே, அன்பு கூர்ந்து என்னுடன் வா.

(இருவரும் செல்கின்றனர்)

## காட்சி : 3

(மாளிகைக்குச் சற்றுத் தொலைவில் கொலைஞர்கள் மூவர் காத்திருக்கின்றனர்)

கொலைஞன் 1 : (**கொலைஞன்** மூன்றாமவனைப் பார்த்து) எங்களுடன் சேர்ந்துகொள்ளுமாறு உனக்குக் கூறியவர் யார்?

கொலைஞன் 3 : மெக்பெத்.

கொலைஞன் 2 : அவர் எங்கள்பால் ஐயமுறத் தேவை யில்லை. எங்கள் கடமைகள் யாவை என்பதை அவர்

þÿAll rights reserved. ª¿. •¿°

மெ.பெருமாட்டி : என் பெரும, கவலற்க! வாட்டமுற்ற முகத்திடையே வாஞ்சையினைக் காட்டுங்கள். இன்றிரவு விருந்து நாடி வருவோர்பால் களிப்புப் பொங்கக் கலந்துறவாடுங்கள்.

மெக்பெத் : அவ்வாறே செய்வேன் என் அன்பே. நீயும் அவ்வாறே இருத்தல் வேண்டுமென வேண்டு கின்றேன் நான். பேங்கோபால் சிறப்புறக் கருத்து வைக்கத் தவறாதே. விழியாலும் நாவாலும் அவனை மேன்மையுறச் செய்திடுவாய். வேண்டுகின்ற காவல் நமக்கில்லை என்பதனால், புகழ்ச்சியுரை புகன்றிடுவாய். நம் உள்ளத்தில் உறைவதை நம் முகத்திரை மறைத்தல் வேண்டும்.

மெ.பெருமாட்டி : இதனை நீங்கள் நிறுத்த வேண்டும்.

மெக்பெத் : ஓ, என் அன்பார்ந்த துணைவியே! என் எண்ண மெல்லாம் தேள்கள். பேங்கோவும் அவன் மகன் ஃப்ளீன்ஸும் உயிருடன் இருக்கின்றனர் என்பதை நீ அறிவாயா?

மெ.பெருமாட்டி : அவர்கள் இறவாத்தன்மையினரல்லர்.

மெக்பெத் : இது ஓர் ஆறுதல். அவர்களை வீழ்த்த இயலும். எனவே, நீ மகிழ்வுடன் இரு. வெளவால், மறை விடம் விட்டு வேட்டை விரும்பிப் பறந்து செல்லுமுன்னர் - இரவில் இரைந்து பேரொலி செய்வதற்கு மாயத்தலைவி ஹெக்கேட், வண்டுகளை அழைக்குமுன்னர் - அச்சம் விளைவிக்கும் ஓர் அருஞ்செயல் நிறைவேறவிருக்கின்றது!

மெ.பெருமாட்டி : என்ன நிகழவிருக்கின்றது?

þÿAll rights reserved. ª¿. •¿°

மெ.பெருமாட்டி : விரும்பியது நிறைவேறினும் அது மன நிறைவு அளிக்காது போயின், அதனால் பெறுவது எதுவுமிலது; இழப்பது பெரிது! குற்றத்தின் விளைவால் வருந்தி வாழ்தலினும் இறையாகுதல் நன்று!

(மெக்பெத் வருகின்றான்)

என் பெரும, ஏனிந்தத் தனிமை? உங்கள் துன்பக் கனவுகளுடன் தோழமை பூணுகின்றீர்களா? எண்ணுங்காலே இறந்துபட வேண்டிய எண்ணங்களில் ஏன் தோய்தல் வேண்டும்? எது குணப்படுத்த இயலாததோ, அதைத் தாங்கிக் கொள்தலே தக்கது. முடிந்தது முடிந்ததுதான்!

மெக்பெத் : பாம்பைக் காயப்படுத்தினோம்; கொல்லவில்லை. அது குணம் பெறும். பின்னர் அது மீண்டும் பாம்பென மாறும். அதன் கடிக்கு நாம் என்றென்றும் அஞ்சியஞ்சிச் சாதல் வேண்டும். பேருருண்டைக் கோள் பலவும் பிளவுண்டு போகலாம்; வானும் நிலமும் சிதறுண்டு போகலாம். ஆயினும், நாம் அஞ்சியுண்ணத் தேவையில்லை; இரவுதொறும் தீக்கனாக் கண்டு துன்புற வேண்டுவதுமில்லை. மன உளைச்சலினால் துன்புற்று வாழ்தலினும், நம் அமைதியின் பொருட்டு - அமைதி பெற நாம் நன்காடு அனுப்பிவைத்த அம்மாண்டார்பால் ஒருங்கிருத்தல் சாலச் சிறந்தது. டங்கன், பிணக் குழியில் வீழ்ந்துபோனான். வாழ்வின் ஏற்றத் தாழ்விற்குப் பின்னர், அவன் இப்பொழுது நீள் துயிலில் ஆழ்ந்துவிட்டான். வஞ்சகம் அதன் பேரழிவைச் செய்துவிட்டது. வாளோ - நஞ்சோ - உள்நாட்டுப் புரட்சியோ - வெளிநாட்டு வரிப்பளுவோ - இனி எதுவும் அவனைத் தொடுதல் இயலாது!

þÿAll rights reserved. ª¿. •¿°

அவன் தந்தையைப் போன்றே அவன் முடிவும் எனக்கு இன்றியமையாதது. செல்க; சென்று முடிவு செய்க. நான் உம்மிருவரையும் பின்னர்க் காண் கின்றேன்.

இருவரும் : நாங்கள் முடிவு செய்துவிட்டோம், பெரும.

மெக்பெத் : இருவரும் சற்று என் அறைக்கு வெளியில் காத்திருப்பீர்! நான் விரைவில் அங்கு வருகின்றேன்.

**(கொலைஞர்கள் செல்கின்றனர்)**

இது முடிவுற்றது. பேங்கோ! உன்னுயிர் துறக்கம் புகுமாயின், அது இன்றிரவே புகும்!

(காத்திருக்கும் கொலைஞர்களைக் காணச் செல்கின்றான்)

## காட்சி : 2

(மெக்பெத் பெருமாட்டி தன் அறையில் இருக்கின்றாள். ஏவலன் ஒருவனும் உடனிருக்கின்றான்)

மெ.பெருமாட்டி : பேங்கோ அரசவையினின்று புறப்பட்டு விட்டானா?

ஏவலன் : ஆம், பெருமாட்டியாரே. ஆயினும், இன்றிரவு அவர் மீண்டும் வருவார்.

மெ.பெருமாட்டி : நான் சில சொற்கள் பேச வேண்டும் என்று மன்னர்க்குக் கூறு.

ஏவலன் : கூறுகின்றேன், பெருமாட்டியாரே.

(அவன் செல்கின்றான்)

þÿAll rights reserved. ª¿. •¿°

மெக்பெத் : அவன் எனக்கும் பகைவனே! அவன் உயிருடன் இருக்கின்ற ஒவ்வொரு மணித்துளியும் என் நெஞ்சில் குத்தி உயிர் குடிக்கும் கொடியன். வெளிப்படை யாகவே அவனை அகற்றிவிட்டு, 'அது என் விருப்பம்' என்று என்னால் கூற இயலும். ஆயினும், நான் அவ்வாறு செய்தல் இயலாது. எங்கள் இருவர்க்கும் உற்ற நண்பர்கள் உளர். அவர்கள் அன்பினைப் புறக்கணித்தல் நன்றன்று. அவனை நானே கொலை செய்வேனாயின், அவன் இறப்புக்கு நானே துயரம் கடைப்பிடித்தல் வேண்டும். இதன் பொருட்டே நான் உம்மிருவர் உதவியை நாடு கின்றேன். அரிய நோக்கங்களுக்கென மக்களிட மிருந்து உண்மையை மறைக்க வேண்டியவனாயிருக் கின்றேன்.

கொலைஞன் 2 : பெருமரீர் ஆணையிடுகின்றவாறே நாங்கள் செய்வோம்.

கொலைஞன் 1 : எங்கள் உயிரே...

மெக்பெத் : (குறுக்கிட்டு) உம் புத்துணர்ச்சி கிளர்ந்தெழு தலைக் காண்கின்றேன் நான். இருவரும் எங்கு மறைந்திருத்தல் வேண்டும், அதற்கு மிகப் பொருத்த முடைய வேளை எது என்பனவற்றை இன்னும் ஒரு மணிப்பொழுதில் கூறுகின்றேன். இது, இன்றிரவே இம்மாளிகையின் புறத்தே நிகழ்தல் வேண்டும். செய்வன திருந்தச் செய்தல் வேண்டுமாகலின், அவனுடனிருக்கும் அவன் மகன் ஃப்ளீன்ஸுக்கும் அவன் தந்தையின் நிலையே ஏற்படுதல் வேண்டும்.

All rights reserved.

ஆயினும்; விரைவுடையன, மந்தமுடையன, அறிவு மிக்கன, காவல் காப்பன, வேட்டையாடுவன என அவை தகுதி வரிசையுடையன. இயற்கை ஒவ்வொன்றிற்கும் சிறப்புத் திறனை அளித்திருக்கின்றது. இதுவே பொதுவினப் பகுப்பில் அவற்றைத் தனித்துப் பிரித்துக் காட்டுகின்றது. மனிதரும் அத்தன்மையரே! கீழோரினும் மேலோரென இருவரும் உம்மைக் கருதுவீராயின். மயக்கமின்றி 'ஆம்' எனக் கூறுக! உமக்கொரு பணி தருகின்றேன். அப்பணி நிறைவேறுங்கால், உம்மிருவர் பகைவன் வீழ்வான். உம்மிருவர்பால் எனக்கிருக்கும் மதிப்பும் பேரன்பும் இன்னும் அணுக்கமுறும். அவன் உயிர் வாழ்வு, என் உடல் நலத்திற்குத் தீங்கு பயப்பது; அவன் சாவு என்னை உய்விக்கும்.

கொலைஞன் 2 : நான் அத்தகையவன் பெரும. வாழ்க்கையின் அடிகளுக்கும் உதைகளுக்கும் இரையாகி வெறியனாய் மாறிவிட்ட நான், பழிவாங்க எதையும் செய்யத் தயங்கேன்.

கொலைஞன் 1 : நானும் அத்தகையவனே! பேரிடர்களின் சோர்வாலும் நல்வாய்ப்பின்மையின் நலிவாலும் தளர்ந்துவிட்ட நான், அவற்றை மாற்றுவதற்கு அன்றிக் களைவதற்கு என் வாழ்க்கையையே பணயம் வைக்கின்றேன்.

மெக்பெத் : பேங்கோ உமது பகைவன் என்பதை இருவரும் அறிவீர்!

இருவரும் : உண்மை, பெரும.

þÿAll rights reserved. ª¿. •¿°

முறை கேடாய் நடத்தியவன் பேங்கோ. ஆயினும் குற்றமற்ற நானே அதனைச் செய்தேனென இருவரும் தவறாய்க் கணித்தீர்! நாம் இறுதியாய்க் கண்டு உரையாடிய வேளை, இருவரும் எவ்வாறு வழி பிறழ வழி நடத்தப்பட்டீர்; எம்முறையில் தடுத்தொதுக்கப் பட்டீர்; துணை நின்ற கருவிகள் - தொடர்புடையார் எவர் என்பனவற்றையும் இன்னபிறவற்றையும் ஓர் அறிவிலியன்றி, பித்தனும் எளிதில் அறியுமாறு, 'இதனைச் செய்தவன் பேங்கோ' எனத் தெளிவுற விளக்கினேன்!

கொலைஞன் 1 : பெருமரீர் அனைத்தையும் எங்களுக்குக் கூறினீர்கள்.

மெக்பெத் : ஆம், கூறினேன். நான் இன்னுங் கூறினேன். அதன் விளைவுதான் நம் இந்த இரண்டாங் காண்டல். இவை அனைத்தையும் மறந்து பிழைபொறுக்கும் அளவிற்கு, எல்லையற்ற பொறையுள்ளம் படைத் தோரென இருவரும் உம்மைக் கருதிக் கொள் கின்றீரா? உம்மிருவரையும் உம் குடும்பத்தினரையும் தன் முருட்டுக் கைகளால் பிணக்குழியில் தள்ளி, என்றென்றும் இரந்துண்டு இடருறச் செய்கின்ற அந்த நல்லவனும் அவன் மக்களும் நலமுற வாழ் தற்கு இருவரும் வழிபாடு செய்யப் போகின்றீரா?

கொலைஞன் 1 : எங்கள் பெரும, நாங்கள் மனிதர்கள்!

மெக்பெத் : ஆம், மனிதப் பட்டியலில் நீர் இருவரும் மனிதர்! வேட்டை நாய், நீறு வண்ண வேட்டை நாய், கலப்பின நாய், செல்ல நாய், தெரு நாய், சடை நாய், நீர் நாய், ஆயர் நாய் அனைத்தும் நாய்களே!



þÿAll rights reserved. ª¿. •¿°

போன்று, பின்னர்த் தோன்றும் மன்னர் மரபினர்க்கு அவன் தந்தையாவான் எனவும் அவனை வாழ்த்தினர். என் மகன் எவனும் அரசுரிமை பெறாது, வேற்று வழித்தோன்றலின் வெங்கரம் என்னை முறுக்கிப்பிழிதற்கு அவர்கள் என் தலையில் பயனற்ற மணிமுடியை ஏற்றினர்; கைதன்னில் செல்லாச் செங்கோலைத் திணித்தனர். அவ்வாறெனின், பேங்கோவின் மரபினர் பொருட்டு நான் என் உள்ளத்தைக் கறைப்படுத்தினேன். அவர்கள் பொருட்டு பெருந்தன்மையாளன் டங்கனைக் கொன்றேன். அவர்கள் பொருட்டு என் அமைதியைக் குலைத்தேன். அவர்களை மன்னர்களாக்குவான் - வேண்டி, என் நிலைபேற்று உயிருணர்வைப் பேயிடம் இழந்தேன். பேங்கோவின் புதல்வர்கள் மன்னர்கள்! அதனினும், இறுதிவரை போரிட அந்த ஊழுக்கே அறைகூவல் விடுக்கின்றேன்! (சிலர் வருகின்ற ஒலிகள்) யார் அங்கே?

(**ஏவலன்,** கொலைஞர்கள் இருவருடன் வருகின்றான்)

(**ஏவலனை** நோக்கி) யாம் அழைக்கின்றவரை நீ அந்த வாயிலருகில் காத்திரு!

(ஏவலன் செல்கின்றான்)

(**கொலைஞர்கள்** இருவரையும் நோக்கி) நேற்று நாம் பேசினோம் அன்றோ?

**கொலைஞன் 1 :** ஆம், மேன்மைமிகு பெரும.

**மெக்பெத் :** நன்று. நான் கூறியன குறித்து இருவரும் எண்ணிப் பார்த்தீரா? முன்னர் உம்மிருவரையும்

þÿAll rights reserved. ª¿. •¿°

கூடல் இனிய நல்வரவை அளிக்கும் பொருட்டு, இரவு இறுதி உணவு வேளைவரை நாம் பிரிந்திருப் போம். இறைவன் துணை நிற்பராக!

**(மெக்பெத், ஏவலன் இருவர் நீங்கலாய் ஏனையோர் செல்கின்றனர்)**

யாம் உன்னுடன் சிறிது பேசுதல் வேண்டும். அவர்கள் காத்திருக்கின்றனரா?

ஏவலன் : ஆம்,பெரும. மாளிகை வாயிலருகே காத்திருக் கின்றனர்.

மெக்பெத் : அவர்களை எம்மிடம் அழைத்து வா.

**(ஏவலன் செல்கின்றான்)**

இவ்வாறு இருத்தல் பெரிதன்று; அச்சமின்றி அரசனாக இவ்வாறு இருத்தலே தக்கது! பேங்கோ வுக்கு நான் பெரிதும் அஞ்சுகின்றேன். அவன் அரசர்க்குரிய வீறுடைமை படைத்தவன்; துணிவுடை யன்; எதற்கும் அஞ்சா மனத்திண்மையினன்! அவன் துணிவை, இடரின்றி வழிநடத்திச் செல்தற்குரிய கூரறிவு அவனுக்குளது. அவனையன்றி வேறெவர்க் கும் அஞ்சேன் நான். அவன் வாழ்வு, என் வாழ்வில் குறுக்கிடும் பெருந்தடை! மார்க் அந்தோணி, சீசரை எவ்வாறு கருதினானோ, அவ்வாறே அவனை நான் கருதுகின்றேன். நான் மன்னனாவேன் என அவ்வுடன் பிறப்பினர் முதலில் கூறிய வேளை, அவன் அவர்களைக் கடிந்து அவனிடம் பேசுமாறு ஆணை யிட்டான். பின்னர், அவர்கள் வருவதுரைப்பார்

þÿAll rights reserved. ª¿. •¿°

பேங்கோ : ஆம், பெரும. இவ்வேளை முதல், இரவு இறுதி உணவு உண்ணுதற்கு இடைப்பட்ட வேளை வரை, எவ்வளவு தொலைவு செல்ல இயலுமோ, அவ்வளவு தொலைவு செல்வேன். என் குதிரை நன்கு ஓடாவிடின், இரவில் ஓரிரு மணிப்பொழுது நிறுத்த வேண்டி வரலாம்.

மெக்பெத் : விருந்தை மறத்தல் கூடாது!

பேங்கோ : மறவேன் பெரும.

மெக்பெத் : கொலைஞராகிய என் உறவினர் இருவரும் இங்கிலாந்திலும் அயர்லாந்திலும் அடைக்கலம் புகுந்தனர் என அறிகின்றேன். தம் தந்தையைக் கொன்றதை அவ்விருவரும் ஒப்புக்கொள்ளார். செவி மடுப்பாரெவரோ, அவர்க்கெல்லாம் நம்பவியலாப் பொய்யுரை புகல்கின்றனர். ஆயினும், அரசு அலுவல் கள் குறித்து நாளை நாம் பேசுங்கால், இதனையும் ஆராய்வோம். இனி, உம் குதிரையேற்றத்திற்கு விரைக! இன்றிரவு நலமுடன் திரும்பி வருக. ஆங்... ஃப்ளீன்ஸ் உம்முடன் வருகின்றானா?

பேங்கோ : ஆம், பெரும. புறப்படும் வேளை நெருங்கிற்று.

மெக்பெத் : உங்கள் குதிரைகள் விரைந்து செல்லட்டும். குதிரையேற்றம் நலமுடன் அமைய வாழ்த்து கின்றேன். சென்று வருக.

**(பேங்கோ செல்கின்றான்)**

இன்றிரவு ஏழு மணிவரை அனைவரும் அவரவர் விருப்பம் போன்று உறைந்து மகிழ்க. நம் ஒன்று

þÿAll rights reserved. ª¿. •¿°

(**மெக்பெத்** மன்னனாகவும் **மெக்பெத் பெருமாட்டி** அரசியாகவும் வருகின்றனர். அவர்களுடன் **லென்னக்ஸ், ரோஸ், பெருமகனார்** பலர், **பெருமாட்டியினர், துணையாளர்** ஆகியோரும் வருகின்றனர்)

மெக்பெத் : *(**பேங்கோ**வை நோக்கி)* இதோ, நம் சிறப்பு விருந்தினன்!

மெ.பெருமாட்டி : *(தணிந்த குரலில்)* இவன் மறந்திருப் பின் நம் பெருவிருந்து நம் தகுதிக்கு ஒவ்வாது போயிருக்கும்.

மெக்பெத் : *(**பேங்கோ**வை நோக்கி)* இன்றிரவு யாம் ஓர் அரச விருந்திற்கு ஏற்பாடு செய்திருக்கின்றோம். அவ்விருந் திற்கு நீயிர் வருதல் வேண்டும் என்பது எம் வேண்டுகோள்.

பேங்கோ : மேன்மைமிகு பெருமரீர்தம் ஆணை. என்றென்றும் மன்னர்தமக்குப் பணியாற்றுதலே என் கடன்.

மெக்பெத் : *(இயல்பாக)* இன்று பிற்பகல் குதிரையேற்றம் உளதோ?

பேங்கோ : ஆம், பெரும.

மெக்பெத் : இக்குதிரையேற்றம் இல்லையெனின், இன்றைய அரசவைக்கு உமது உயர்மிகு கருத் துரையை நாடியிருப்போம். உமது பயனுறு கருத் துரைகள் என்றும் நிறைவும் நன்மையும் தருவன. ம்... இன்று இயலாதெனின், காண்போம் நாளை! ஆங்... நெடுந்தொலைவு செல்லும் எண்ணமோ?

þÿAll rights reserved. ª¿. •¿°

ரோஸ் : *(முதியவரைப் பார்த்து)* விடைபெறுகின்றேன் தந்தையே.

முதியவர் : உமக்கும், தீமையினை நன்மையெனவும் பகைவரை நண்பரெனவும் மாற்றுந் திறமுடையார் அனைவர்க்கும் இறைவனருள் துணை நிற்கும்!

(அவர்கள் வெவ்வேறு வழிகளில் செல்கின்றனர்)

# அங்கம் : 3

## காட்சி : 1

(ஃபோர்ரெஸ் நகர் மாளிகை. பேங்கோ ஆழ்ந்த எண்ணத்தில் மூழ்கியிருக்கின்றான்)

பேங்கோ : அது உனக்கு இப்பொழுது கிடைத்தாயிற்று! அந்த மாயப்பெண்டிர் வாக்குறுதி வழங்கிய வண்ணமே மன்னன், கோடோர், கிளாம்ஸ் அனைத்தும் உன்னுடையன. ஆயின், அதனைப் பெறுதற்கு நீ கொடுஞ்செயல் இழைத்திருக்கின்றாயென நான் அஞ்சுகின்றேன். எனினும், உன் மக்கள் அரசாளார் எனவும், பின்னர்த் தோன்றும் மன்னர் மரபினர்க்கு நான் தந்தையாவேன் எனவும் அவர்கள் கூறினர். மெக்பெத்! அவர்கள் கூற்று, உனக்குக் கூறியது போன்றே உண்மையெனின், எனக்கும் அவ்வாறே நிகழும் என்று நான் ஏன் எதிர்பார்த்தலாகாது? ம்?... *(கொம்போசை முழக்கம்)* நான் ஏதும் பேசாதிருத்தலே நன்று.

þÿAll rights reserved. ª¿. •¿°

மெக்டஃப் : அவ்விருவரும், இக்கொலை செய்தற்கு ஏவப்பெற்ற கொலைஞர்கள்! மன்னர்தம் மக்கள் மால்கமும் டோனல்பெய்னும் நாட்டை விட்டு ஓடிப்போயினர். அவர்கள்பால் ஐயம் நிலவுகின்றது!

ரோஸ் : இது இயற்கைக்கு மாறாய மற்றொரு செயல். சிறுமையின் பேரவா தன்னையே அழித்துக் கொள்கின்றது. அவ்வாறெனில், ஆட்சிப்பொறுப்பு மெக்பெத் கைக்கு வருமோ?

மெக்டஃப் : அவன் தெரிவு செய்யப்பட்டுவிட்டான். முடிசூட்டு விழாவிற்கென அவன் இப்பொழுது ஸ்கோனில் இருக்கின்றான்.

ரோஸ் : டங்கன் நல்லுடல் எங்கே இருக்கின்றது?

மெக்டஃப் : அது அவர் முன்னோர் துஞ்சுகின்ற ஐயோனா நன்காட்டுக் கல்லறைக்கு எடுத்துச் செல்லப்பட்டிருக்கின்றது.

ரோஸ் : நீயிர் ஸ்கோனுக்குப் போகின்றீரா?

மெக்டஃப் : இல்லை, உறவினரே! நான் என் இல்லந் திரும்ப ஃபைஃப் நகர் புறப்படவிருக்கின்றேன்.

ரோஸ் : நன்று; நான் ஸ்கோன் செல்கின்றேன்.

மெக்டஃப் : அங்கு நீயிர் காணவிருப்பன நல்லனவாகவே இருத்தல் வேண்டும். போய் வருகின்றேன். புதிய ஆடையினும் பழைய ஆடை நன்கு பொருந்தும் இயல்பினது. புதிய முறைமைகள், பழையனவற்றைப் போன்று அத்துணை எளிதாக இரா!

All rights reserved.

முதியவர் : நிகழ்ந்த அக்கொலையைப் போன்றே இது இயற்கைக்கு முற்றும் மாறாயது. கடந்த செவ்வாயன்று பெருமையுடன் வானுயரே பறந்து திரிந்த ஒரு பருந்தை, எலி பிடிக்கும் ஓர் ஆந்தை தாக்கிக் கொன்றுவிட்டது.

ரோஸ் : இன்னும், டங்கன் குதிரைகள் - அழகும் விரைவு மிக்க உயரினக் குதிரைகள் - அது பெரும் விந்தை - ஆயினும் உண்மை - அவை மனித இனத்தின் மேல் போர் தொடுத்தாற்போன்று - வெறி கொண்டு குதிரைப்பந்தியை உதைத்துத் தள்ளிப் பணிய மறுத்துவிட்டன.

முதியவர் : அவை - ஒன்று மற்றதைத் தின்று விட்டதெனக் கூறப்படுகின்றது.

ரோஸ் : அவ்வாறு நடந்தது உண்மை. என்னைத் திகைப்புறச் செய்த அந்நிகழ்ச்சியை நான் கண்டேன்!

(மெக்டஃப் வருகின்றான்)

இதோ, நல்லவன் மெக்டஃப் வருகின்றான். உலகம் இப்பொழுது எவ்வாறிருக்கின்றது?

மெக்டஃப் : (வானைச் சுட்டி) ஏன்? நீயிர் அதைக் காண வில்லையா?

ரோஸ் : பெரும்பழி கொணர்ந்த இக்கொலையினைச் செய்தவர் எவரெனத் தெரிந்ததா?

மெக்டஃப் : மெக்பெத் கொன்ற அந்த இருவர்...

ரோஸ் : ஐயகோ! எத்தகைய தீய நாள்? இதன்றால் அவர்கள் பெறக்கருதிய பயன் என்ன?

þÿAll rights reserved. ª¿. •¿°

மால்கம் : எய்யப்பட்ட கொல்லம்பு இதனுடன் முடிய வில்லை; எரிதணல் அம்பு இன்னும் உண்டு. அது நம் நெஞ்சினுள் உறையுமுன் நாம் தப்பிவிடல் வேண்டும். குதிரைகளில் விரைவோம். பிரியா விடைப் பணிவன்பு பெருகுகின்ற வேளை இதுவன்று. நவிலாது நழுவுதலில் நலிவொன்று மில்லை. பரிவற்ற இடமகன்று மறைந்தொழுகிச் செல்லுதலால் நாணமுறத் தேவையில்லை!

(புறப்படுகின்றனா்)

## காட்சி : 4

(மெக்பெத்'தின் கோட்டை. கோட்டையின் முன்புறம் இருக்கும் **ரோஸ், முதியவர்** ஒருவருடன் உரையாடுகின்றார்)

முதியவா் : என் எழுபதாண்டில் அச்சந்தரவல்ல பல காலக்கூறுகளையும் வியத்தகு நிகழ்ச்சிகளையும் நான் கண்டிருக்கின்றேன். ஆயினும், இக்கொடிய இரவுடன் ஒப்பிடின் அவையனைத்தும் சிறுமை வாய்ந்தவை.

ரோஸ் : ஆ! நலமார்ந்த தந்தையே, குருதிப்புனல் நீந்திப் பொல்லாங்கிழைக்கின்ற மாந்தர்தம் இழிசெயல் கண்டு, வானுலகம் பொறாது பொருமுகின்றது. நாழிகை வட்டில் பகலெனக் குறிப்பினும் காரிருள், உலவிவரும் கதிரோனைச் சூழ்ந்து நெரிக்கின்றது. பகல், தன் ஒளி முகத்தைப் புறங்காட்ட நாணுத லாற்றான் இந்நிலவுலகைக் காரிருள் கவ்வுகின்றதோ?

þÿAll rights reserved. ª¿. •¿°

இக்கொடுமைமிகு கொலை குறித்து ஆராய்ந்து தெளிய, அனைவரும் ஒன்று கூடுவோம். அச்சமும் ஐயமும் நம்மை உலுக்குகின்றன. நான் இறைவன் பக்கம் இருக்கின்றேன். அந்நிலை நின்று சூழ்ச்சி எதுவாயினும், எவ்வகைப் பழியுறைந்த வஞ்சகமாயினும் அவற்றை எதிர்த்து வெல்வேன்

மெக்டஃப் : அவ்வாறே நானும் செய்வேன்!

அனைவரும் : நாங்களும் அவ்வாறே செய்வோம்.

மெக்பெத் : செயற்றிறம் காட்டுதற்கு மாற்றுடை விரைவில் அணிந்து மண்டபத்தில் கூடுவோம்.

அனைவரும் : அவ்வாறே ஆகுக!

(மால்கம், டோனல்பெய்ன் இருவர் நீங்கலாய் மற்றவர்கள் செல்கின்றனர்)

மால்கம் : நீ என்ன செய்ய எண்ணுகின்றாய்? அவர்களொடு நமக்குக் கூட்டுறவு வேண்டா! உள்ளத்தில் உணர்வற்றுத் துயரத்தைப் புலப்படுத்துதல் போலி நடிப்பினனுக்கு எளிது. நான் இங்கிலாந்து செல்லப் போகின்றேன்.

டோனல்பெய்ன் : நான் அயர்லாந்து செல்வேன். நம் உயிர் வாழ்வுக்கு நாம் தனித்தனியே பிரிந்து செல்தலே தக்கது. இங்கே புன்னகையில் குறுவாள்கள் மறைந்திருக்கின்றன. இன்னும் அணுகின் குருதி பெருகும், மேலும் அணுகின் கொலை நிகழும்!

þÿAll rights reserved. ª¿. •¿°

எவருமிலர்! மென்மையை வன்மை வென்றது! இங்கே, உயிர் பறிக்கும் குத்துவாள் விளைத்த புண்ணின் பயனாய்த் தன் வெள்ளித்தோல்தனில் பொற்குருதிக் கீற்றுகள் வேயப்பெற்று வீழ்ந்து கிடக்கின்றான் டங்கன். அங்கே, குருதியொழுகும் குத்துவாள்களொடு தம் தொழிற்றிறம் விரித்துரைக்கும் வண்ணக் கோலத்தில் உறைந்து கிடக்கின்ற கொலைஞர்கள். அன்புடை நெஞ்சமும் அதனைப் புலப்படுத்தும் துணிவுங் கொண்டார் எவரே பொறுப்பார்?

மெ.பெருமாட்டி : அன்பு கூர்ந்து எனக்கு உதவுக! ஓ!... *(மயக்கம் ஏற்பட்டவள் போன்று நடிக்கின்றாள்)*

மெக்டஃப் : பெருமாட்டிக்கு உதவுக!

மால்கம் : *(தனித்து நின்று* **டோனல்பெய்னை** *நோக்கிப் பேசுகின்றான்)* இந்நிகழ்வின் தாக்கம், பிறரினும் நம்மையே ஆழ்ந்து பற்றியிருக்கும் இவ்வேளையில், நாம் ஏன் நாவடக்கி நிற்றல் வேண்டும்?

டோனல்பெய்ன் : நம் உயிர் கவ்வ விழைகின்ற இங்கு, எது குறித்துப் பேசவியலும்? புறப்படு! நம் கண்ணீர், இன்னுங் கனியவில்லை!

மால்கம் : நம் பெருந்துயர், இன்னும் ஆழ்ந்து உணரப் படவுமில்லை.

பேங்கோ : *(**ஏவலரை** நோக்கி)* பெருமாட்டிக்கு உதவுக! *(மற்றவர்களை நோக்கி)* நம் மெல்லிய ஆடையொடு வருத்துகின்ற இக்கடுங்குளிரில் நிற்றலியலாது!

þÿAll rights reserved. ª¿. •¿°

**(மன்னன் மக்கள் மால்கம், டோனல் பெய்ன் இருவரும் வருகின்றனர்)**

டோனல்பெய்ன் : என்ன குழப்பம்?

மெக்பெத் : உம்மைப் பற்றியது, ஆயினும் அதை நீயிர் அறியீர்! வற்றாத ஊற்று, விலையற்ற தலைவாய் - உங்குருதியின் பிறப்பிடம் நின்று போயிற்று - முதன்மைப் பிறப்பிடம் நின்று போயிற்று.

மெக்டஃப் : உம் அரச தந்தை கொலையுண்டார்.

மால்கம் : *(பதறி)*, ஓ! எவ்வாறு? எவரால்?

லென்னக்ஸ் : நோக்குங்கால் அவர்தம் ஏவலர் இருவருமே எனத்தோன்றுகின்றது. அவ்விருவர்தம் கைகளிலும் முகங்களிலும் குருதி படிந்திருந்தது! அவர்கள் குத்துவாள்களிலும் செங்குருதி! இன்னும் துடைக்கப் பெறாமல் தலையணைகள் மேலிருந்த அவற்றை நாங்கள் கண்ணுற்றோம். அவர்கள் வெறித்த நோக்குடன் குழப்பமுற்றுக் காணப்பட்டனர். அவர்கள்பால் எவர் உயிர்க்கும் காப்பில்லை!

மெக்பெத் : மூண்டுவந்த வெறியினை அடக்கும் ஆற்றலற்று அவ்விருவரையும் நான் ஏன் கொன்றேன் என வெண்ணி வருந்துகின்றேன்.

மெக்டஃப் : அருள் சுரக்கின் ஏன் கொல்தல் வேண்டும்?

மெக்பெத் : ஒரே வேளையில் - நுண்ணறிவும் திகைப்பும், அமைதியும் ஆறாச்சினமும், பற்றுறுதியும் பொதுமையுணர்வும் பெற்றிருப்போர் எவர்?

þÿAll rights reserved. ª¿. •¿°

மெக்டஃப் : ஓ, கனிவுமிகு பெருமாட்டியே! நான் கூறத் துடிக்கும் அச்செய்தி உங்கள் செவிகளுக்குகந்ததன்று. செவிமடுக்கும் பெண்ணெவரையும் மாய்த் தொழிக்கும் இச்செய்தி.

**(பேங்கோ வருகின்றான்)**

ஓ, பேங்கோ! பேங்கோ! நம் மன்னர் கொல்லப் பட்டார்!

மெ.பெருமாட்டி : *(அதிர்ச்சியுற்றவள் போல்)* ஆ, ஐயகோ! என்ன, என் இல்லத்திலா?

பேங்கோ : எங்கு நிகழ்ந்திருப்பினும் இது மிகக் கொடிது. அன்ப, டஃப்! நான் உம்மை வேண்டுகின்றேன். இது உண்மையன்றென மறுப்பீர்!

**(மெக்பெத், லென்னக்ஸ் இருவரும் திரும்பி வருகின்றனர்)**

மெக்பெத் : இச்செயல் நிகழ்தற்கு ஒரு மணிப் பொழுதுக்கு முன்னரே நான் மாண்டு வீழ்ந்திருப்பேனாயின், அருட்பேறு பெற்ற நல்வாழ்வு வாழ்ந்தவனாய்த் திகழ்ந்திருப்பேன்; மறுமை இன்பத்தை மாந்தி யிருப்பேன். இனி என் இம்மை வாழ்விற்கு இன்றியமையாததென எதுவுமில்லை. அனைத்தும் பயனற்ற சிறுமைப் பொருட்களே! புகழும் மதிப்பும் மறைந்தொழிந்தன. வாழ்க்கை ஊற்றில் சுரந்து வந்த இன்தேறல் வறண்டு போயிற்று; எஞ்சியது வண்டல் ஒன்றே!

þÿAll rights reserved. ª¿. •¿°

மெக்பெத் : *(திகைப்புற்றவன் போன்று) என்ன கூறினீர்? அவர் உயிர்?...*

லென்னக்ஸ் : *மாட்சிமைமிக்க மன்னரையா நீயிர் கூறுகின்றீர்?*

மெக்டஃப் : *பள்ளியறை வருவீர்! அங்கு நீயிர் காணுங் காட்சி உம்மிருவர் கண்களையும் குருடாக்கும்! புது மெதூசா'வென உம்மிருவர் உடல்களையும் கல்லாக்கும். என்னைப் பேசத் தூண்டாதீர்! நீயிரே காண்பீர்! பின்னர் நீயிரே பேசுவீர்!*

**(மெக்பெத், லென்னக்ஸ் இருவரும் விரைகின்றனர்)**

*விழித்தெழுவீர்! விழித்தெழுவீர்! எச்சரிக்கை ஒலியை முழக்குவீர்! வஞ்சகம்! கொலை! பேங்கோ! டோனல் பெய்ன்! மால்கம்! விழித்தெழுவீர்!... இறப்பின் போலியை - மென்பஞ்சு உறக்கத்தை உதறியெறிக; சாவினை நேரிற் காண்பீர்! எழுவீர்!... எழுவீர்! இறுதித் தீர்ப்பு நாளின் மறுவுருவைக் காண்பீர்! மால்கம்! பேங்கோ! உமது கல்லறைகளினின்று எழுதல் போன்று எழுவீர்! இக்கொடுமைமிகு காட்சி தனை எதிர்நோக்கப் பேய்களென நடந்து வாரீர்!*

**(எச்சரிக்கை ஒலி ஒலிக்கின்றது. மெ.பெருமாட்டி ஒன்றும் அறியாதவள் போன்று வருகின்றாள்.)**

மெ.பெருமாட்டி : *அச்சுறுத்தும் எச்சரிக்கை ஒலி முழங்கி எமது விருந்தினரை விழிக்கச் செய்கின்ற அளவிற்கு இங்கு நடந்தது என்ன? பேசுக, பேசுக!*

þÿAll rights reserved. ª¿. •¿°

லென்னக்ஸ் : மன்னர் இன்று புறப்படுகின்றாரா?

மெக்பெத் : ஆம், அதுவே அவர்தம் திட்டம்.

லென்னக்ஸ் : கடந்த இரவு புயலின் கடுஞ்சீற்றம் கட்டுக் கடங்காது போயிற்று. எங்கள் தங்குமிடப் புகைபோக்கிகள் பஞ்செனப் பறந்து போயின. சிலர், 'காற்றில் கலந்து வந்த புலம்பலையும் சாவின் ஓலத்தையும் நாங்கள் செவிமடுத்தோம்' எனக் கூறினர். இவையனைத்தும் விளையவிருக்கின்ற குழப்பந்தரும் நிகழ்வுகளையும் பேரிடர்களையும் முன்னரே வலியுறுத்தி வருவதுரைப்பன. ஓர் ஆந்தை இரவு முழுதும் அலறிற்று. சிலர், நிலம் அதிர்ந்த தெனவும் கூறினர்.

மெக்பெத் : அது கொந்தளிப்புமிக்க இரவுதான்.

லென்னக்ஸ் : நான் அறிந்தவரை, என் குறுகிய வாழ்க்கையில் இவ்வாறு நிகழ்ந்ததில்லை!

**(மெக்டஃப் பதறி ஓடி வருகின்றான்)**

மெக்டஃப் : ஓ! கொடுமை! கொடுமை! கொடுமை! நாவால் நவில்தற்குச் சொற்களில்லை. மனத்தால் எண்ணு தற்கும் இயலாத கொடுமை!

மெக்பெத்
லென்னக்ஸ் : (இருவரும்) என்ன செய்தி?

மெக்டஃப் : பேரழிவு உச்சத்தை எட்டிற்று! இறைவன் அருள் பெற்று அரியணையேறிய அரசர் கொலையுண்டார்! அவர்தம் தெய்வத் திருவுயிர் பறிபோயிற்று!

þÿAll rights reserved. ª¿. •¿°

ஒலி அவரை விழிப்புறச் செய்திருக்கலாம். அதோ, அவரே வருகின்றார்!

லென்னக்ஸ் : வணக்கம், பெருமைக்குரிய மெக்பெத்!

மெக்பெத் : உம்மிருவர்க்கும் வணக்கம்!

மெக்டஃப் : மன்னர் உறக்கத்தினின்று எழுந்தாரா பெருமகனே?

மெக்பெத் : இன்னும் இல்லை.

மெக்டஃப் : குறித்த காலத்தில் தம்மைக் காணுமாறு கட்டளை பிறப்பித்தார். குறித்த வேளை முடிதற்குள் வந்து சேர்ந்தேன்.

மெக்பெத் : நான் உம்மிருவரையும் அவர்பால் அழைத்துச் செல்கின்றேன்.

(மூவரும் மன்னர் பள்ளியறை நோக்கிச் செல்கின்றனர்)

மெக்டஃப் : மன்னர்தம் விருந்தோம்புநர் என்னும் முறையில் இது இன்பந்தரும் துன்பம் என்பதை நானறிவேன். ஆயினும் தொல்லை தொல்லையே!

மெக்பெத் : உழைப்பின் உறுபயன் இன்பம். (சுட்டிக் காட்டி) இதோ கதவு!

மெக்டஃப் : மன்னரைத் துணிவுடன் அழைப்பேன். அது எனக்கிடப்பெற்ற கட்டளை.

(மெக்டஃப் அறைக்குள் செல்கின்றான். வெளியில் மெக்பெத், லென்னக்ஸ் இருவரும் தொடர்ந்து உரையாடுகின்றனர்)

þÿAll rights reserved. ª¿. •¿°

வா.காவலன் : நன்று, ஐயனே! சிவந்த மூக்கு, உறக்கம், சிறுநீர். இந்தப் பாலுணர்வு நம்மைத் தூண்டியும் விடுகின்றது; தூர்க்கவும் செய்கின்றது. அது ஆர்வத்தை மிகுதியாக்குகின்றது. ஆயின், செயலோட்டத்தை நிறுத்தி விடுகின்றது. ஆதலின், மிகைக் குடி, இரட்டை விளைவுகளுக்கு வித்தூன்றி விடுகின்றது. அது நம் பாலுணர்வை வளர்க்கின்றது; பாலுணர்வைப் பாழ் செய்கின்றது. அது ஆர்வத் தீயை மூட்டு கின்றது; பின்னர் அதுவே ஆர்வத் தீயை அணைத்து விடுகின்றது. அது மனக்கிளர்ச்சியூட்டுகின்றது. பின்னர், மனச்சோர்வைச் சுரக்க வைக்கின்றது. உச்ச கட்டத்தில் ஒருவனை நிமிர வைக்கின்றது; பின்னர் குனிய வைக்கின்றது. இறுதியாக, உறக்கத்தில் அவனை இருநிலை மயக்கத்தில் குழப்பி - நிலை குலையச் செய்து கைவிட்டு விடுகின்றது!

மெக்டஃப் : கடந்த இரவில் குடியே உன்னைக் கவிழ்த்ததுவோ?

வா.காவலன் : ஐயனே, அது அவ்வாறே செய்தது. அது என் தொண்டை வரை பற்றியது. ஆயினும், அதை நான் பழிவாங்கிவிட்டேன். சிற்சில வேளைகளில் என் காலிரண்டையும் தள்ளாட வைத்து வீழுமாறு செய்ததெனினும், அதனை மீறியது என் வலிமை என்பதாலோ என்னவோ, நான் அதை வெளியில் கக்கிவிட்டேன்!

(மெக்பெத் வருகின்றான்)

மெக்டஃப் : உன் தலைவர் உறக்கம் நீங்கி எழுந்தாரா? (மெக்பெத்'தைக் காண்கின்றான்) நாங்கள் தட்டிய



þÿAll rights reserved. ª¿. •¿°

வருக! (தட்டுதல்) டொக், டொக், டொக்! யாரங்கே? நம்பிக்கையே, இதோ! ஓர் ஆங்கிலேய தையற்காரர். காலுறையிலேயே துணி திருடதலில் வல்லவர் இவர். தையற்காரரே, வருக! இங்கே உங்கள் ஆடை தேய்ப்புக் கருவியை வெம்மையாக்கிக்கொள்ளலாம். (தட்டுதல்) டொக், டொக்! அமைதியே இல்லை. யார் நீர்? (குளிரால் நடுங்குகின்றான்) அளற்றுக்கு இக்குளிர் மிகைதான்! இனி, நான் பேய் - வாயிற் காவலனாயிரேன். முறையாய் அளறு வருவோர் உள்ளிட்ட அனைத்து வாழ்க்கைத் தொழிலருள் பலரை உள்ளே விடுவதற்கு நான் திட்டமிட்டிருக் கின்றேன். (வாயிற்கதவு தட்டப்படுதல்) உடன் திறக்கின்றேன், உடன் திறக்கின்றேன்!

(வாயிற் கதவு திறக்கப்படுகின்றது. **மெக்டஃப், லென்னக்ஸ்** இருவரும் வருகின்றனர்)

இந்த வாயிற் காவலனை நினைவிற் கொள்ளல் வேண்டும் (கை நீட்டுகின்றான்).

**மெக்டஃப் :** (அன்பளிப்பு வழங்குகின்றான்) காலந்தாழ்த்தி உறங்கச் சென்றதால் நெடும்பொழுது உறங்கினாயோ நண்பனே?

**வா.காவலன் :** நம்பிக்கை, ஐயனே! நாங்கள் காலை மூன்று மணி வரை குடித்தோம். ஐயனே, இந்தக் குடி, மூன்று வகையில் பெருந் தூண்டுணர்வைத் தரவல்லது.

**மெக்டஃப் :** எந்த மூன்று வகையில் இது தூண்டுணர்வைத் தரவல்லது?

þÿAll rights reserved. ª¿. •¿°

## காட்சி : 3

(மெக்பெத் கோட்டையின் தலை வாயில். வாயிற்காவலன் குடிமயக்கத் தில் தள்ளாடியவாறு பேசுகின்றான்)

வா.காவலன் : இதோ, உண்மையில் வாயிற்கதவு தட்டப்படு கின்றது. ஒருவன் அளற்றின் வாயிற்காப்போனா யிருப்பின், அவன் எவ்வேளையிலும் வாயிற்கதவைத் திறந்தே வைத்திருத்தல் வேண்டும். (அவன் தன்னை அளற்றின் வாயிற்காப்போனாய் உருவகம் செய்து கொள்கின்றான். கதவைத் தட்டுதல்) டொக், டொக், டொக்! பேயின் பெயரால் வினவுகின்றேன், யாரங்கே? இதோ, விலை உயருங்கால் கொள்ளை ஊதியத்திற்கு விற்கலாம் எனத் துணிந்து, கூலப்பொருட்களைப் பதுக்கி வைத்த குடியானவர் ஒருவர் வருகின்றார். வாணிகச் சூதாட்டக்காரரே, வருக! உம்முடன் போதிய கைக்குட்டைகளைக் கொண்டு வருக! இங்கே நீர் அதிக வியர்வை சிந்தவேண்டியிருக்கும்! (தட்டுதல்) டொக், டொக்! அந்தப் பேயின் பெயரால் வினவுகின்றேன். யாரங்கே? நம்பிக்கையே, இதோ, கடவுளின் பொருட்டுக் கணக்கற்ற பொய்களைப் புனைந்துரைத்து, வாதிடுங்கால் இருபக்கத்திற் கெதிராய் இருபக்கமும் சாய்கின்ற இருபொருள் வல்லுநர் இவர். ஆயினும், இருபக்கம் சாய்ந்து இருபொருள் கூறித்துறக்கத்திற்குள் நுழைந்துவிட இவ ரால் இயலவில்லை! ஓ! இருபொருள் வல்லுநரே,

þÿAll rights reserved. ª¿. •¿°

மெ.பெருமாட்டி : (மெக்பெத்தை நோக்கி) என் கைகளும் உங்கள் கைவண்ணமொத்தனவே! ஆயினும், உங்கள் மிகுவெள்ளை மனம் எனக்கிருப்பின் நான் நாணிக் குனிவேன். (தொடர்ந்து கதவு தட்டப்படுதல்) தெற்கு வாயிற்கதவை யாரோ தட்டும் ஒலி எனக்குக் கேட்கின்றது. வாருங்கள், நாம் பள்ளியறை செல்வோம். இச்செயலினால் ஏற்படும் ஐயம் அனைத்தையும் சிறிது நீர் போக்கிவிடும். பின்னர் எல்லாம் நமக்கு எளிதாகிவிடும். (சினந்து) நீங்கள் மன வலிமையை இழந்துபோனீர்கள். (மீண்டும் கதவு தட்டப்படுதல்) உற்றுக் கேளுங்கள்! இன்னும் கதவு தட்டப்படுகின்றது. இரவில் அணியும் ஆடையை அணிந்துகொள்ளுங்கள். நம்மை அழைத்தால், விழித்திருந்து வருவோர் போன்று நாம் தோன்றல் வேண்டும். வாருங்கள், எண்ணச் சுழலில் மூழ்குதல் வேண்டா!

(அவள் செல்கின்றாள்)

மெக்பெத் : என் செயல் அறிவதாயின், என்னை நான் அறிதலாகாது. (கதவு தட்டப்படுதல். கண்ணுக்குப் புலப்படாக் கதவு தட்டுவோனை நேரிற் காணுவதாய் எண்ணுகின்றான்.) உன் தட்டலால் டங்களை விழிக்கச் செய்! உன்னால் இயலுமென்றே எண்ணுகின்றேன்!

(மெ.பெருமாட்டியைத் தொடர்ந்து தன் பள்ளியறை நோக்கிச் செல்கின்றான்)

þÿAll rights reserved. ª¿. •¿°

மெக்பெத் : *(அச்சத்துடன்)* அங்கு நான் செல்லேன்! செய்ததை எண்ணுதற்கே நான் அஞ்சுகின்றேன்! அதை நான் காணத் துணியேன்!

மெ.பெருமாட்டி : *(சினமுற்று)* குறிக்கோளில் உறுதியற்ற கோழை! குத்துவாள் இரண்டையும் என்னிடம் கொடுங்கள். உறங்குவாரும் செத்தாரும் தம் ஓவியங்கள் போன்றவர்கள். ஓவியம் கண்டு அஞ்சுவோர் குழந்தைகள். பேயோவியம் எனில், அவர்கள் மேலும் அஞ்சுவர். அவன் உடலில் இன்னுங் குருதி வடியின், பழி செய்தோர் அந்த ஏவலர்களே எனப் பிறர் அறியும் பொருட்டு, அவர்கள் முகங்களில் குருதியைப் பூசிவிட்டு வருகின்றேன்.

(அவள் செல்கின்றாள். அவள் சென்ற பின்னர், அருகில் கதவு தட்டப்படும் ஒலி கேட்கின்றது)

மெக்பெத் : கதவு எங்கே தட்டப்படுகின்றது? ஒவ்வோர் ஒலியும் அச்சுறுத்தும் அளவிற்கு எனக்கு என்ன ஆயிற்று? *(கீழே நோக்கித் திடுக்கிடுகின்றான்)*

யார் கைகள் இவை? ஆ! அவை என் விழிகளைப் பறிக்கின்றன. (புலம்புகின்றான்) நெப்டியூனின் மாக்கடலும் என்னிரு கைகளில் படிந்த இக் குருதியைக் கழுவித் தூய்மையாக்குதல் இயலுமா? இல்லை! என் கை தொட்ட வேளையில் பச்சைப் பெருங்கடலும் செந்நிறமாய் மாறிவிடும்!

**(மெ.பெருமாட்டி திரும்பி வருகின்றாள். அவள் கைகளில் குருதி படிந்திருக்கின்றது)**

þÿAll rights reserved. ª¿. •¿°

நான் செவிமடுத்ததாய் எனக்குத் தோன்றுகின்றது. (அவன் சிந்தனையில் ஆழ்கின்றான்) குற்றமிலா உறக்கம்; நாளினது வாழ்நாளை நாள்தோறும் நசித்து வரும் நல்லுறக்கம். அயர்வுற்ற உழைப்பாளர் சோர்வகற்றும் நீராட்டு! புண்பட்ட நெஞ்சினுக்குப் பொருந்துகின்ற அருந்தயிலம். இயற்கையின்றன் இணையற்ற இரண்டாம் உணவுப் படையல் - வாழ்வுப் பெருவிருந்தின் முதன்மை நிலைப் பெரும்படையல்!

மெ.பெருமாட்டி : (குறுக்கிட்டு) நீங்கள் என்ன கூறு கின்றீர்கள்?

மெக்பெத் : (அவளைப் பொருட்படுத்தாமல்) இந்த இல்லத்திற்கு 'இனி உறக்கமில்லை,' 'கிளாம்ஸ் உறக்கத்தைக் கொன்றான்! ஆதலின், கோடோர் இனி உறங்கான். மெக்பெத் இனி உறங்கான்!' என்று அக்குரல் தொடர்ந்து ஓலமிட்டது!

மெ.பெருமாட்டி : அவ்வாறு ஓலமிட்டவன் எவன்? பெருமை மிகு என்பெரும, மூளை நலிவுற்றுப் பித்தரைப் போன்று எண்ணிக் குழம்பி ஏன் உங்கள் ஒப்பிலா வலிமையை இழத்தல் வேண்டும்? செல்லுங்கள்! சிறிது நீர் கொண்டு, உங்கள் கைகளில் படிந்திருக்கும் இந்த அழுக்குச் சான்றைக் கழுவியகற்றுங்கள்! இக்குத்துவாள்களை அங்கிருந்து ஏன் எடுத்து வந்தீர் கள்? இவை அங்கேயே கிடந்திருக்க வேண்டும். இவற்றை எடுத்துச் செல்லுங்கள். உறங்குகின்ற அந்த ஏவலர் முகங்களில் குருதியைப் பூசிவிடுங்கள்.

þÿAll rights reserved. ª¿. •¿°

மெக்பெத் : (அவள் கூறுவதைப் பொருட்படுத்தாமல்) உறக்கத்தில் ஒருவன் சிரித்தான்; ஒருவன் 'கொலை' யென்று அழுதான். ஒருவன் மற்றவனை விழிக்கச் செய்திருக்கின்றான். நான் அவர்கள் கூறியவற்றைக் கேட்டேன். அவர்கள் தொழுதனர்; பின்னர் மீண்டும் உறங்கத் தொடங்கினர்.

மெ.பெருமாட்டி : மால்கம், டோனல்பெய்ன் - இவர்கள்தாம் அந்த அறையில் இருக்கின்ற இருவர்.

மெக்பெத் : இக்கொலை வினைஞன் கைகளொடு என்னைக் கண்டாற்போல், 'இறைவன் நமக்கு அருள்வாராக' என அழுதான் ஒருவன். 'அவ்வாறே ஆகுக' என்றான் அடுத்தவன். அச்சத்தால் நடுக்குற்று, 'இறைவன் நமக்கு அருள்வாராக' என்று அவர்கள் கூறியவேளை, என்னால், 'அவ்வாறே ஆகுக' எனக் கூற இயல வில்லை.

மெ.பெருமாட்டி : இதையே ஆழ்ந்து எண்ணி அல்லலுறத் தேவையில்லை.

மெக்பெத் : 'அவ்வாறே ஆகுக' என ஏன் என்னால் கூற இயலவில்லை? அருள் வாக்கு எனக்கு நிரம்பத் தேவையாயிருந்தும் 'அவ்வாறே ஆகுக' என்பது என் தொண்டைக்குள்ளேயே அடைபட்டுப் போயிற்று.

மெ.பெருமாட்டி : இவற்றை இவ்வாறு எண்ணிய வண்ணம் இருப்பின், இவை நம்மைப் பித்தராய் மாற்றும்!

மெக்பெத் : 'இனி உறக்கமில்லை! மெக்பெத் உறக்கத்தைக் கொன்றுவிட்டான்' என்று ஒரு குரல் ஓலமிட்டதை

þÿAll rights reserved. ª¿. •¿°

*அங்கு வைத்து வந்தேன். அவற்றை அவர் காணாது போயிரார். (உறுதியுடன்) அந்த டங்கன், தன் உறக்கத்தில் என் தந்தைபோன்று தோன்றியிரானாயின் நானே அதனை முடித்திருப்பேன்!*

**(மெக்பெத் தன் கைகளிலும் இரு குத்து வாள்களிலும் குருதிபடிந்த நிலையில் தள்ளாடி வருகின்றான்)**

*என் துணைவரே!*

மெக்பெத் : *(தாழ்ந்த குரலில்) அச்செயலை நான் செய்து முடித்துவிட்டேன். நீ ஒலி எதனையும் கேட்டாயா?*

மெ.பெருமாட்டி : *ஆந்தை அலறிற்று. சிள் வண்டுகள் ஓலமிட்டன... நீங்கள் பேசினீர்களா?*

மெக்பெத் : *எப்பொழுது?*

மெ.பெருமாட்டி : *இப்பொழுது!*

மெக்பெத் : *நான் மாடியினின்று இறங்கி வருகையிலா?*

மெ.பெருமாட்டி : *ஆம்!*

(இருவரும் உற்றுக் கேட்கின்றனர்)

மெக்பெத் : *ஆங்! இரண்டாம் அறையில் இருக்கின்றவர் யார்?*

மெ.பெருமாட்டி : *டோனல்பெய்ன்.*

மெக்பெத் : *(தன் கைகளைப் பார்த்து) இது இரங்கத்தக்க காட்சி.*

மெ.பெருமாட்டி : *(சினமுடன்) இரங்கத்தக்க காட்சி எனக் கூறுதல் அறிவின்மை!*

þÿAll rights reserved. ª¿. •¿°

## காட்சி : 2

(மெ.பெருமாட்டி, தேறல் கிண்ணத்துடன் வருகின்றாள்)

மெ.பெருமாட்டி : அவர்களைக் குடிமயக்கத்தில் ஆழ்த்திய தேறல், என்னைத் துணிவினளாய் முடுக்கிற்று! அவர்கள் உணர்வினை அணைத்த தேறல் என் உணர்ச்சித் தீயை மூட்டிவிட்டது! (ஆந்தையின் அலறல்) ஆங்!... ஆந்தைதான் அலறிற்று. சாவை அறிவிக்கும் அறிவிப்பாளன் - அந்த ஆந்தையே சூழ்கின்ற இவ்விரவிடைக் கடுங் குரலெடுத்து வணக்கம் கூறுகின்றது! (மெக்பெத்'தை எண்ணியவாறு) இவ்வேளை அவர் அச்செயலைத் தொடங்கியிருப்பார். பள்ளியறைக் கதவுகள் திறந்தே இருக்கின்றன. குடிமயக்கத்தில் மூழ்கிய அந்த ஏவலர், தம் பொறுப்பை ஏளனஞ்செய்து குறட்டை விட்டுக்கொண்டிருப்பர். அவர்கள் இன்தேறலில் மயக்கப்பொருள் கலந்துவிட்டேன். வாழ்வரோ, சாவரோ? அவர்கள் வாழ்வுக்கும் சாவுக்குமிடையில் மிதக்கின்றனர்.

மெக்பெத் : (மேல் மாடியிலிருந்து) யாரங்கே? என்ன அது?

மெ.பெருமாட்டி : (பதறி) ஐயகோ! அவர்கள் விழித்திருப்பரோ வென அஞ்சுகின்றேன்! அச்செயல் முற்றுப் பெறவில்லை. நம்மை அழிப்பது செயலன்று; திண்மையற்ற முயற்சியே! (நிறுத்திச் செவிமடுக் கின்றாள்) ஆ!.... குத்துவாள் இரண்டையும் முன்னரே

þÿAll rights reserved. ª¿. •¿°

இவ்வாறு கற்பனைத் தோற்றத்தை உணர்த்துகின்றது. (ஆழ்ந்த எண்ணமுடன்) ஒரு பாதி உலகு உறங்கிப் போயிற்று. திரையிட்டு மூடப்பெற்ற உறக்கத்தைக் கொடிய கனவுகள் உறுத்திப் பாழ் செய்யும் வேளை இது. மாயக்காரிகள், தம் மாய வித்தைகளின் இறைவி ஹெக்கேட்'டுக்கு வழிபாடு நடத்தி விழாவெடுக்கும் வேளை. உசுப்பிவிடும் ஓநாய்களின் ஊளையொலி கேட்டுக் கொலையுண்ணச் செல்கின்ற கொலைஞர்கள், பேயினைப்போல் ஓசையின்றி உலவுகின்ற வேளை இது! (செயல் முடிக்கும் உறுதியுடன்) வாய் திறந்து நாப்பிளக்கப் புனை மொழி புகல்கின்ற புரையுலகே, என் கால்கள் போகின்ற திசையினை நீ அறிதல் வேண்டா! என் காலடியொலிகளை நீ செவிமடுத்தலும் வேண்டா! இக்கொலையினை நிறைவேற்றுதற்குக் காலம் கனிந்துவரும் வேளை, நான் என்னையே காட்டிக் கொடுத்தல் கூடாது! (உறுதியுடன்) என் வெற்றுரை அவன் வாழ்நாளைக் கூட்டும்; அளவற்ற பேச்சு ஆற்றலைக் குறைக்கும்.

(மணி ஒலிக்கின்றது)

நான் செல்கின்றேன். இது செயல் முடிந்தது போன்றுதான்! மணியொலி என்னை அழைக்கின்றது! கேளாதே, டங்கன்! அது உன்றன் உயிர் குடிக்கும் சாவுமணி! துறக்கந்தான் புகுவதற்கோ அளற்றைத் தான் நாடுதற்கோ நீ செவிமடுக்கும் இறுதிமணி!

(அவன் டங்கன் பள்ளியறை நோக்கி மெல்ல நடந்து செல்கின்றான்)

þÿAll rights reserved. ª¿. •¿°

என் முன்னே நான் காண்கின்ற இது... குத்துவாளா? இதன் கைப்பிடி என் கை நோக்கி நிற்கின்றதே? (அக்குத்துவாளை நோக்கி) வா, உன்னை நான் இறுகப் பற்றுகின்றேன். (அவன் வெற்றுக் காற்று வெளியைத் தன் கைகளால் பற்ற முயல்கின்றான்) நீ எனக்குக் கிட்டவில்லை; எனினும் உன்னை நான் இன்னுங் காண்கின்றேன். கட்புலனறிவால் காண்பது போன்று தொடுபுலனறிவால் உன்னைத் தொடுதல் இயலாதா? அன்றி, நீ என் எண்ணத்தில் உருப்பெற்ற கற்பனைக் குத்துவாளா? நலிவுற்ற மூளையின் உருவகமா? (விழிகளை மூடித் திறக்கின்றான். பின்னர்த் தன் குத்துவாளை அதன் உறையினின்று எடுக்கின்றான்) உன்னை இன்னுங் காண்கின்றேன். இப்பொழுது நான் உறையினின்று உருவியது போன்றே நீ உறுதிப்பொருளாய்த் திகழ் கின்றாய். (மனக் கிளர்ச்சியுடன்) நான் செல்ல எண்ணிய வழியையே நீ எனக்குச் சுட்டுகின்றாய். நான் தெரிவு செய்த கருவியைப் போன்ற அதே குத்துவாள்! (ஐயமுடன்) என் கட்புலன் மற்றப் புலன்கள் அனைத்தையும் அறிவிலிகளாக்கிவிட்டது. (ஊக்க உணர்வு மேலிட்டு) கட்புலனே உண்மை யெனின், அது மற்றப் புலன்களினும் சிறந்தது. (காற்று வெளியை உறுத்து நோக்குகின்றான்) உன்னை நான் இன்னுங் காண்கின்றேன். குத்து வாளின் பரப்பிலும் பிடியிலும் தோய்ந்து படிந் திருக்கும் குருதிக்கறை முன்பில்லை! (கண்களை மூடிக்கொள்கின்றான்) இவ்வாறு எதுவுமில்லை! அந்தக் கொலைச் செயலே என் கண்களுக்கு

þÿAll rights reserved. ª¿. •¿°

மெக்பெத் : *(அக்கறையற்றவன் போன்று) அவர்களைப் பற்றிய எண்ணம் எனக்குத் தோன்றவே இல்லை! (நிறுத்தி) என்றேனும், நமக்கு ஒருமணிக்கூறு ஓய்விருக்குமாயின் நீயிரும் இணங்குவீராயின், நாம் இருவரும் அவர்கள் வருவதுரைத்தது பற்றி உரையாடலாம்.*

பேங்கோ : *நீயிர் விரும்பும் வண்ணமே ஆகுக!*

மெக்பெத் : *வாய்ப்பு வருங்கால், உமது வற்றா நல்லுதவி எனக்குக் கிட்டுமாயின், ஓங்குபுகழ் உயர் சிறப்பனைத்தும் நான் உமக்குத் தருவேன்!*

பேங்கோ : *நான் உமக்கு உதவுங்கால், நேர்மை நெறி பிறழாது - மன்னர்பால் பற்றுடையனாய் என்னால் தொடர்ந்து வாழ்தற்கு இயலுமெனில், உமது அறிவுரையை விரும்பி ஏற்பேன்!*

மெக்பெத் : *நன்று. சென்று நன்கு உறங்குக!*

பேங்கோ : *நன்றி, நண்பரே! நீயிரும் அவ்வாறே செய்வீராக!*

(பேங்கோ, ஃப்ளீன்ஸ் இருவரும் செல்கின்றனர்)

மெக்பெத் : *(தன் ஏவலனை நோக்கி) என் தேறலை எடுத்து வைத்தவுடன், மணியடிக்குமாறு பெருமாட்டியிடம் கூறு. பின்னர் நீ உறங்கச் செல்!*

(ஏவலன் செல்கின்றான். அவன் சென்ற பின்னர், மெக்பெத், ஓர் இருக்கையில் அமர்ந்து எண்ணச் சுழலில் ஆழ்கின்றான். பின்னர்த் திடுக்கிட்டுக் காற்று வெளி யிடை நோக்குகின்றான்)

þÿAll rights reserved. ª¿. •¿°

வைத்துக்கொள்! (கொட்டாவி விடுதல்) ஈயமென என் விழிகள் பளுவாகிப் போயின. ஆயினும், நான் உறங்கேன்! (வானை நோக்கி) அருள் பொழியும் பேராற்றலே, என் கனவிற்கண் தோன்றும் கேடு தரவல்ல எண்ணங்களை அகற்றிவிடு! (நடந்து வரும் ஒலி) என் வாளைக் கொடு! யாரங்கே?

**(மெக்பெத் வருகின்றான். அவனுடன் அவன் ஏவலன் ஒருவனும் கைவிளக்கேந்தி வரு கின்றான்)**

மெக்பெத் : நண்பன்!

பேங்கோ : (தன் வாளைத் தாழ்த்துகின்றான்) என்ன, அன்பரே? இன்னும் ஓய்வு கொள்ளவில்லையா? பாயலில் இருக்கின்றார் மன்னர். இன்று அவர் இயல்புக்கு மாறாய்ப் பெருமகிழ்வுடன் இருக்கின்றார். உமது ஏவலர்க்கு நிரம்ப அன்பளிப்புகளும் வழங்கினார். (ஒரு வைரக்கல்லை எடுத்து) கனிவு நிறை விருந்து போற்றும் உமது துணைவிக்கு அவர் இவ் வைரக்கல்லை வழங்க விரும்புகின்றார். அளவற்ற மகிழ்ச்சிப் பெருக்கில் அவர் உறங்கச் சென்றார்.

மெக்பெத் : எங்கள் முன்னோக்கின்மையால் நிறைவுடை நல்வேற்பு நல்க இயலாமற் போயிற்று. முன்னரே அறிந்திருப்பின், வரவேற்பின் சிறப்பு வான் தொட்டிருக்கும்!

பேங்கோ : எல்லாம் மிகச் சிறப்பு! (நிறுத்தி உரையாடலை வேறு வழியில் திருப்ப முனைகின்றான்) நேற்றிரவு அம்மூன்று மாயக்காரிகளையும் நான் கனவிற் கண்டேன்! உம்மைப்பொறுத்தமட்டில், அவர்கள் சில உண்மைகளைப் புலப்படுத்தியிருக்கின்றனர்.

þÿAll rights reserved. ª¿. •¿°

ஒவ்வொன்றையும் படையலிடுவேன். வா, செல்வோம். பண்புடன் விருந்து படைக்கும் நேர்மையரெனப் பொழுதினைப் போக்குவோம். பொய்ம்மை பொதிந்த நம் நெஞ்சங்களை நம் பொய்ம்மை முகங்கள் மறைக்கட்டும்!

(செல்கின்றனர்)

# அங்கம் : 2

## காட்சி : 1

(**மெக்பெத்**'தின் கோட்டை. கோட்டை முற்றத்தில் கைவிளக்கை ஏந்தி நிற்கும் தன் மகன் **ஃப்ளீன்ஸ்**'ஸுடன் **பேங்கோ** உரையாடுகின்றான்)

பேங்கோ : மணி என்ன மகனே?

ஃப்ளீன்ஸ் : *(வானை நோக்கி)* நிலவு கீழ்வானைத் தொடுகின்றது. மணியொலி என் செவியில் விழவில்லை.

பேங்கோ : பன்னிரண்டுக்கே அது கீழ்ச் செல்லும்.

ஃப்ளீன்ஸ் : அதற்கும் பின்னராக இருக்கலாமென நான் மதிப்பிடுகின்றேன், தந்தையே!

பேங்கோ : *(தன் வாளை உருவி)* இதோ, என் வாளை வைத்துக்கொள். *(இருளில் தடுமாறுகின்றான்)* வானுலகினர் பெரும் பிசினர்கள்! மெழுகுவத்திகள் அனைத்தையும் அணைத்து விட்டனர். *(தன் அரைகச்சை, குத்துவாள், கவசம் முதலியவற்றையும் எடுத்துக் கொடுக்கின்றான்)* இதோ, இவற்றையும்

þÿAll rights reserved. ª¿. •¿°

நெடும்பயணக் களைப்பின் வரவேற்பு அரவணைப்பில் அவன் தன்னுணர்வற்றே உறங்குவான். அவ்வேளை, நான் அவன் அரண்மனைச் செயலர் இருவரையும் அளவிலாது இன்தேறல் பருகுதற்குத் தூண்டுகின்றேன். அது, அவர்கள் நினைவாற்றலை இழக்கச் செய்து மூளையையும் குழப்பிவிடும். மிகுந்த குடிவெறியால் அவர்கள் பன்றிகள் போல் உறங்குங்கால், காவலற்ற காவலன் டங்கனை, நம்மால் செய்ய இயலாத எதுவும் உளதோ? தேறலில் ஊறிக்கிடக்கும் அவன் செயலர் இருவர்பால் ஏற்றவியலாப் பழியும் உண்டோ? இப்பெருங் கொலையின் உறுபழியை அச்செயலரே ஏற்பர்!

மெக்பெத் : நீ ஆண்மக்களை மட்டிலுமே ஈன்று புரந்திடு! அஞ்சாமையும் அருந்திறனும் மிக்குடைய நீ, ஆண்மக்களைப் புரத்தற்கே உகந்தவள்! (ஐயமுடன்) அவன் அறையில் உறங்குங் காவலர் இருவர்தம் உடல் முழுதும் குருதிக்கறை படியுமாறு செய்தலுடன், அவ்விருவர்தம் குத்துவாள்களைப் பயன்படுத்தி இச்செயல் செய்தோர் அவ்விருவரே எனக் கூறிடின், அதனை அனைவரும் ஏற்றுக் கொள்வரன்றே?

மெ.பெருமாட்டி : அவன் இறப்பிற்கு ஆற்றொணாத் துயருள் தோய்ந்து பெருங்குரலெடுத்து அரற்றுகின்ற நம்மைக் கண்டு ஏற்காத் துணிவுடையாரும் உளரோ?

மெக்பெத் : (மன நிறைவுடன்) அமைதியுற்றது என் மனம். இக்கொடுஞ்செயல் நிறைவேற என் செயல்திறன்

þÿAll rights reserved. ª¿. •¿°

**மெ.பெருமாட்டி :** பின் இத்திட்டத்தில் என்னொடு இணைந்து செயலாற்றுதற்கு உங்களை உருமாற்றியது எவ் விலங்கு? இச்செயல் செய்யத் துணிந்து நிற்கையில் நீங்கள் மனிதன். பெற்றிருக்கும் பெற்றியினும் பெறவிருக்கும் பெரும்பேறு உங்களை இன்னுஞ் சிறந்த மனிதனாக உயர்த்தும்! செயல், செயலாக்கம் பெறுதற்கு முன்னர், காலமோ இடமோ பொருந்தாது போயிற்று! எனினும், அவ்விரண்டும் ஒரு சேர அமைதற்கு நீங்கள் அயராது முயன்றீர்கள். இன்று அவை தம்மியல்பாய் நம் நலம் நாடி வரு கின்றன. பெறுதற்கரிய இப்பெரும் வாய்ப்பு வருகின்ற வேளை, உங்கள் வீறுமிகு மனத்துணிவு மறைந்து போயிற்று! பச்சிளங் குழந்தையர்க்குப் பாலூட்டியவள் நான். என் மார்பு சுவைத்துப் பாலருந்தும் குழந்தைபால் சுரக்கின்ற பேரன்பு, எத்தகு இன்ப உணர்வு தருவது என்பதை நான் அறிவேன். எனினும், இச்செயலைச் செய்தற்கு உங்களைப் போல் நான் உறுதிமொழி கூறியிருந்திருப் பேனாயின், என் முகம் நோக்கிப் புன்னகை சிந்துகின்ற அக்குழந்தையின் செவ்வாயை என் மார்பினின்று இழுத்து அதன் மூளையைச் சிதறடித்திருப்பேன்!

**மெக்பெத் :** நாம் தோல்வியுற்றால்?

**மெ.பெருமாட்டி :** *(சினந்து)* தோல்வியா? உங்கள் துணிவினை உச்ச எல்லைவரை முடுக்கிவிடுங்கள்; நாம் தோல்வியுறோம்! டங்கன் உறங்குங்கால் - கடிய

þÿAll rights reserved. ª¿. •¿°

மெக்பெத் : இச்செயலில் நாம் தொடர்ந்து ஈடுபாடு கொள்தல் தக்கதன்று! அண்மையில் அவன் விருதுகள் பல வழங்கி என்னைப் பெருமைப்படுத்தியிருக்கின்றான். அன்றியும், நம் மக்கள் பலர்தம் பொன்னார்ந்த நன்மதிப்பையும் நான் பெற்றிருக்கின்றேன். புதிய பளபளப்புக் குன்றாதபோதே அதனைப் பூண்டு மகிழ்தல் வேண்டும்; மிகுவிரைவிலேயே அதனைத் தூக்கி எறிதல் கூடாது!

மெ.பெருமாட்டி : (சினமுற்று) முன்னர் முனைப்புற்று முகிழ்த்திருந்த உங்கள் நம்பிக்கை, பின்னர் மயங்கி வீழ்ந்ததுவோ? இதுகாறும் உறங்கிய அந்நம்பிக்கை, உணர்வுற்று விழித்துத் தன் நோய்த் தோற்றத்தை அறியலுற்றதோ? இன்றுதான் நான் உங்கள் அன்பின் மதிப்பு எத்திறம் வாய்ந்ததென அறிந்து தெளிந்தேன்! அருஞ்சம முருக்கும் உங்கள் அஞ்சாமைக்கு ஈடெனத் திறல்மிகு செயல் முடிக்க அஞ்சுகின்றீர்களா? கோழை மனத்தினராய் உறைகின்ற நீங்கள், வாழ்வின் மாபெரும் அணிகலன் - மணிமுடி சூடவும் இயலுமோ? மீனை விரும்பிய பூனை, காலை நனைக்க விரும்பாதது போன்று, 'நான் விருப்பம் உடையேன்; ஆயின், துணிவிலேன்' என்று இருமனப் பித்தராய்ப் போனீர்கள்.

மெக்பெத் : (துடிப்புடன்) அருள்கூர்ந்து என்னை அமைதியாய் இருக்க விடு! மனிதப் பண்புக்குகந்த எதனையும் செய்தற்கு அஞ்சாதவன் நான். மனிதப் பண்புக்கு மாறாய எதனையும் செய்யத் துணிபவன் மனிதனல்லன்!



þÿAll rights reserved. ª¿. •¿°

அன்றியும், நான் விருந்தோம்புநன்; அவனைக் கொலை செய்வானிடமிருந்து அவனைக் காக்கும் பொறுப்பினன். குத்துவாளை நானே கையில் ஏந்துதலன்று... அன்றியும், இந்த டங்கன் தன் ஆற்றலை அமைவுறப் பயன்படுத்தியவன். நடுவுநிலை திறம்பாத் திண்மையுடையது இவன் ஆட்சி. இவன் நற்பண்புகள், பெரும்பழி கொணரும் இவன் கொலையை எதிர்த்து நாப்பிளந்து ஓலக் குரலில் கெஞ்சும். புதிதாய்ப் பிறந்த குழந்தையைப் புயலுக்குப் புகலிடமாக்குதற்போல் - வான் குழந்தை யர், வன்மைமிகு வளியினுக்குக் கட்டுண்டாற்போல் இரங்கத்தக்கது இது. இஃகொடுஞ்செயலால் ஒவ்வொரு விழியினின்றும் பெருக்கெடுக்கும் நீர், காற்றையே மூழ்கச்செய்யும். என் நோக்கத்திற்குத் தூண்டுதலாய்த் துள்ளிப் பாய்கின்ற என் புகழாசை யன்றி, என்பால் வேறெதுவுமிலது. பாய்ந்து தாவும் இது, வீழவும் வைக்கலாம்.

(மெக்பெத் பெருமாட்டி வருதல்)

என்ன செய்தி?

மெ.பெருமாட்டி : இன்றைய இறுதி உணவை அவன் ஏறத்தாழ முடித்துவிட்டான். அந்த அறையினின்று நீங்கள் ஏன் வெளியேறினீர்கள்?

மெக்பெத் : அவன் என்னைக் கேட்டானா?

மெ.பெருமாட்டி : அவன் கேட்டிருப்பான் என்பது உங்களுக்குத் தெரியாதா?

þÿAll rights reserved. ª¿. •¿°

## காட்சி : 7

(மெக்பெத் மாளிகையில் ஓர் அறை. தலைமை உணவு பரிமாறுபவன், பல் வேறு உணவு வகைகளை ஏந்திவரும் மற்றப் பரிமாறுவோருக்குக் கட்டளை பிறப்பித்துக்கொண்டிருக்கின்றான். அவ்வேளை மெக்பெத், டங்கன் கொலை குறித்து எண்ணியவாறு வருகின்றான்)

மெக்பெத் : செய்தது செய்ததுடன் முடிவுறின், செய்தலை விரைந்து செய்தல் சாலச்சிறந்தது. இக்கொலை யினால் விளைவேதும் இல்லையெனில் - வெற்றி உறுதியெனில் - இங்கே எல்லாம் முடிந்து முற்றுப் பெறுதற்கு வேண்டுவதெல்லாம் பெருந்தாக்குதல் ஒன்றே! இங்கே, பிறவிப் பெருங்கடலின் மறுகரை மருங்கில், சில்வாழ்நாள் பல்பிணிச் சிற்றறிவினராய் நலிகின்ற நாம், வளங்காண வேண்டுமெனின், வருகின்ற இடரை வரவேற்றலே தக்கது. ஆயின், இங்கே நாம் செய்த வினையின் பயனை நாமே துய்த்தல் வேண்டும். குருதிப்புனல் பெருகும் கலைதன்னை நாம் கற்பிக்கின்றோம். கற்பித்த கலை, பின்னர் நமக்கே பாடங் கற்பிக்கின்றது. நடுவுநிலை பிறழாத நன்னீதி, நாம் உருவாக்கி நலமுடன் வைத்திருந்த நம் நச்சுக்கலவையை நம்மையே பருகவைக்கின்றது. .....அவன் இங்கே இரட்டை நம்பிக்கையில் வந்திருக்கின்றான். ஒன்று: நான் அவன் உறவினன்; அவன் குடிமகன். இரண்டும் இச்செயலை எதிர்க்கும் வலுமிக்க முரண்கள்.

þÿAll rights reserved. ª¿. •¿°

வழங்கிச் சிறப்பித்த பெருமரீர்க்கு வாழ்நாள் முழுதும் தொண்டாற்றக் கடமை பூண்டிருக் கின்றோம்.

டங்கன் : கோடோர் பெருமகன் எங்கே? அவனை முந்தி இங்கு முதலில் வந்து சேர்தல் வேண்டும் என, யாம் அவனை விரைவாய்ப் பின்தொடர்ந்தோம். ஆயின், குதிரை செலுத்துதலில் வல்லவன் அவன். அன்றியும், குதிமுள் போன்று, அவன்றன் அளவிறந்த காதலும் அவனுக்குத் துணை நின்றமையால், அவன் எம்மை முந்தினான். பேரழகும் பெருந்தன்மையும் பொருந் திய விருந்து படைக்கும் பெருமாட்டியே! இன்றிரவு, யான் உன் விருந்தினன்!

மெ.பெருமாட்டி : மன்னர்தம் ஊழியர்கள் நாங்களும் எங்களுக்குரியனவும், எங்கள் ஊழியர்களும் அவர்களுக்குரியனவும் மன்னர்க்கே உரியவர்கள். எனவே, மேன்மைமிகு பெருமரீர் மகிழ்வுக்கென அனைத்தையும் மீண்டும் பெருமானாரிடமே ஒப்படைக்கின்றோம்.

டங்கன் : *(பெரிதும் மகிழ்ந்து)* உன் கையை எம்மிடம் கொடு. எம்மை எம் விருந்தோம்புநன்பால் அழைத்துச் செல்க! யாம் அவன்பால் பேரன்பு உடையேம்... அவனுக்கு யாம் இன்னும் நலம் பலவற்றைத் தொடர்ந்து செய்வோம். *(அவன் தன் கையை அவள்பால் நீட்டுகின்றான்)* பெருமாட்டியே, செல்வோமா?

(செல்கின்றனர்)

þÿAll rights reserved. ª¿. •¿°

ஈர்த்துவிட்டது. தொங்குகின்ற பஞ்சணையாய் - ஈனுகின்ற தொட்டிலாய், அவை பயன் கொள்ளா நீள் பகுதியில்லை; அணைசுவரில்லை; வாய்ப்பமைந்த இடமுமில்லை. எங்கு அவை பேரெண்ணிக்கை யினவாய் வாழ்ந்து இனப்பெருக்கம் செய்கின் றனவோ அங்கு தவழ்கின்ற காற்று மென்மையது என நான் அறிந்திருக்கின்றேன்.

**(மெக்பெத் பெருமாட்டி வருதல்)**

டங்கன் : ஆ!... காண்க!... எமது மதிப்பிற்குரிய விருந்தோம்புநர்! எமது குடிகள் எம்பால் பொழியும் அன்பு, சிற்சில வேளைகளில் எமக்குத் தொல்லை யாய்த் தோன்றினும், அத்தொல்லையை, யாம் அன்பின்பொருட்டு நன்றியறிதலுடன் ஏற்றுக்கொள் கின்றோம். பெருமாட்டியே, உம்மிருவர்பால் எம் உள்ளத்தில் பெருக்கெடுக்கும் பெருமதிப்பின் உணர்வினால் விளைந்த உறுபயனே இவ்வருகை. எனவே, உம்மிருவர் அன்பின் பொருட்டு, யாம் மேற்கொண்டிருக்கும் இவ்வருகையால் விளைகின்ற தொல்லையையும் இன்னலையும் நீயும் உன் துணைவனும் நன்றியுடன் ஏற்றல் வேண்டும்.

மெ.பெருமாட்டி : நாங்கள், பெருமரீர்க்குச் செய்த தொண்டனைத்தும் இருமடங்கெனில், அதுவே பின்னர் இன்னும் இரட்டிப்பாய்ப் பெருகும். மாட்சிமை பொருந்திய பெருமரீர், எங்கள் குடும்பத் திற்கு வழங்கியிருக்கும் மிகப் பெருமை வாய்ந்த விருதுகளுடன் ஒப்பு நோக்கின் இச்சிறு விருந் தோம்பல், துரும்பினும் சிறிது! எமக்கு முன்னைப் பெருமைகளும் பின்னைப் பெருவிருதுகளும்

þÿAll rights reserved. ª¿. •¿°

இற்றைப் பெரும்பணியை நானே ஏற்கின்றேன். இது எக்காலத்தும் எவராலும் எதிர்க்கவொண்ணாப் பெருவலிமை தந்து நம்மை ஆட்சியின் உச்சியில் அமர்த்தும்.

மெக்பெத் : இதுபற்றி நாம் இன்னுங் கலந்தாய்தல் வேண்டும்.

மெ.பெருமாட்டி : களங்கமற்ற முகத்தினராய்த் தோன்றுங்கள். உணர்ச்சிப் புலப்பாடு நம்மை ஒறுத்துவிடும். எல்லாவற்றையும் நான் கவனித்துக்கொள்கின்றேன்.

(இருவரும் செல்கின்றனர்)

## காட்சி : 6

**(மெக்பெத் கோட்டையின் வெளிப்புறம், மன்னன் டங்கன், மால்கம், டோனல் பெய்ன், பேங்கோ, லெனனக்ஸ், மெக் டஃப், ரோஸ், ஆங்கஸ் ஆகியோருடன், துணையாளர் பலரும் இருக்கின்றனர்)**

டங்கன் : இக்கோட்டை, மனங்கவர் இடத்தில் அமைந்திருக் கின்றது. விரைந்து வரும் இவ்வினிய இளங்காற்று, எமது மென்மைப் புலன்களில் ஊடுருவி நலம் பயக்கின்றது.

(தூக்கணங்குருவிகள் கோட்டை மதில்களுக் கருகில் மிகத் தாழ்வாய்ப் பறக்கின்றன)

பேங்கோ : முதுவேனில் முகிழ்க்குங்கால் திருக்கோவில்களை நாடுதல் இத்தூக்கணங்குருவிகள்தம் இயல்பு. வான் வழங்கும் இனிய நற்காற்று அவற்றை இங்கு

þÿAll rights reserved. ª¿. •¿°

குத்துவாள் விளைக்கவிருக்கும் புண்ணைக் காணா திருக்கக் கன்னங்கரிய அளற்றுப் புகையினுக்குள் கவிந்து கொள்! உன் வரவால், வானுலகும் இருள் போர்வையின் இடுக்கிலே என் செயலை உற்று நோக்கி, 'நிறுத்து! நிறுத்து!' என்று ஓலமும் இடாது!

(மெக்பெத் மகிழ்வுடன் வருகின்றான்)

மேன்மைமிகு கிளாம்ஸ்! பெருமகன் கோடோர்! இவ்விரண்டினும் சிறந்தது புதர்வெளி புகன்ற முன்னறிவிப்பு! அன்பரே, உங்கள் மடல்கள் என்னை இந்நிகழ்கால அறியாமை இருளினின்று விடுவித்து விட்டன. இப்போதே ஒளிர்கின்ற எதிர்காலத்தை உடனடியாய் உணர்கின்றேன்.

மெக்பெத் : என் இன்னுயிர் அன்பே, டங்கன் இன்றிரவு இங்கு வருகின்றான்.

மெ.பெருமாட்டி : என்று திரும்புகின்றான்?

மெக்பெத் : நாளை புறப்படலாம் எனக் கருதுகின்றான்.

மெ.பெருமாட்டி : *(திகைப்புற்று)* ஓ!... கூடாது! நாளைக் கதிரவனை அவன் காணுதல் கூடாது! என் பெருமானே, உங்கள் முகம் ஒரு புத்தகம் போன்றது. மக்கள், அதில் வியப்புறு செய்திகள் பலவற்றைப் படித்துணரலாம். அன்பரே, உலகை மயக்க உலகுபோல் தோன்றல் வேண்டும். விழியிலும் கையிலும் நாவிலும், நல்வரவை நாடுகின்ற நலங்கொழிக்கட்டும். குற்றமற்ற மலராய்த் தோன்றுங்கள். ஆயின், அதனுள் வதிகின்ற அரவென இருங்கள். வரும் விருந்தை ஓம்புதல் நம் கடன்.

þÿAll rights reserved. ª¿. •¿°

ஒருவன் அவருக்கு முன்பே மூச்சிறைக்கச் சாவான் போல் ஓடிவந்தான். அவனே மூச்சுத்திணறியவாறு இந்தச் செய்தியைக் கூறினான்.

மெ.பெருமாட்டி : *(ஏவலரை விளித்து)* இவனை அழைத்துச் சென்று உதவுவீர்! இவன் அருஞ்செய்தி கொண்டு வந்திருக்கின்றான்.

(தூதன் செல்கின்றான்)

அந்தச் சாவின் தூதன் அண்டங்காக்கையே என் கோட்டை மதில்களுக்குள் இறுவாய் நாடி வரும் டங்கனின் இறுதி வருகையைத் தன் கரகரப்புக் குரலில் கரைந்திருக்கின்றது. இறப்பதற்குப் பிறப்பெடுத்த மாந்தர்தம் எண்ணக்குவியலுக்குக் குற்றேவல் செய்கின்ற உயிரின் உணர்வுகளே, என் பெண்மையின் மென்மையைக் களைந்தெறிக! முடி முதல் அடியீறாய் இரங்குதல் சிறிதுமற்ற கொடிய உணர்வுகளால் என்னுடலை நிரப்பிடுவீர்! என் குருதியை உறைய வைப்பீர்! செய்ய வேண்டுவதைச் செய்யவிடாது தடுத்து நெஞ்சைத் துளையிட்டு அரிக்கும் மனச்சான்று, என் கொடிய திட்டங்களைக் குலைத்துவிடாதிருக்க, என் கழிவிரக்க உணர்வுகள் செல்கின்ற ஊடுவழி அனைத்தையும் அடைத்து விடுவீர்! இயற்கையின் இயல்புதன்னை இடை யீடின்றி விரைந்து வினை முடிக்க விழிப்புலனுக்குப் புலப்படாது காவல் நிற்கும் கொலைஞர்களே! என் பெண்மையின் மார்பகத்தே வருக! சுரக்கின்ற இன்சுவைப் பாலைக் கைப்புச் சுவையூட்டும் பித்த நீராய் மாற்றுக! காரிருளே, வருக! என் கூரிய

þÿAll rights reserved. ª¿. •¿°

நீங்கள். ஆயினும், நேர்மையற்ற வெற்றியே உங்களுக்குக் கிட்டும்! மேன்மைக்குரிய கிளாம்ஸ், உங்கள் அடிமனத்தில் கிளர்ந்தெழும் வேட்கைத்தீ, 'நீ அதைச் செய்தே முடித்தல் வேண்டும்' என்று அறைகூவி அழைக்கின்றது. அச்செயல் நிறைவேறியே முடிதல் வேண்டுமென நீங்கள் விரும்பினும், அச்செயலைச் செய்தற்கு அஞ்சுகின்றீர்கள். விரைவில் திரும்பி வருக. உங்கள் செவிகளில் நான் பொழி கின்ற ஊக்கவுரைகள் உங்களுக்குப் புத்துணர் வூட்டும். ஊழும் ஆவியுலகும் உங்களுக்கென முன்னரே உறுதி செய்து முடித்த அந்தப் பொன்வட்ட மணிமுடிக்கும் உங்களுக்கும் குறுக்கே நிற்கும் உங்கள் அச்சத்தையும் குழப்பத்தையும் என் வீறுமொழிகள் உடைத்தெறியும்!

(தூதன் ஒருவன் விரைந்து வருகின்றான்)

என்ன உன் செய்தி?

**தூதன் :** இன்றிரவு மன்னர் இங்கு வருகின்றார்.

**மெ.பெருமாட்டி :** இவ்வாறு கூறுதற்கு உனக்குப் பித்தம் பிடித்துப் போயிற்று! உன் தலைவர், மன்னருடன் இல்லாமற் போயினரோ? மன்னர் இங்கு வருகின்றா ரெனில், என் அன்பர் - உன் தலைவர் முன்னேற் பாடுகள் செய்யுமாறு, நமக்கு முன்னரே அறிவிக்கத் தவறியிருத்தல் கூடுமோ?

**தூதன் :** பொறுத்தல் வேண்டும். நான் கூறுவது உண்மை. நம் பெருமகனாரும் வருகின்றார். என் தோழர்களுள்

þÿAll rights reserved. ª¿. •¿°

அறிந்தேன். அவர்களிடம் மேலும் வினாக்கள் தொடுக்க வேண்டுமெனும் வேட்கைத் தீயால் நான் வெந்தவேளை, அவர்கள் காற்றில் கலந்து மறைந் தனர். அந்த விந்தைச் செயலை வியந்து நிற்கையில், மன்னரிடமிருந்து வந்த தூதர்கள், முன்னர் அவ்வூழின்றன் உடன்பிறப்பினர் குறிப்பிட்ட கோடோர் பெருமகன் என்னும் அதே விருதால், என்னை வாழ்த்தினர். 'வாழ்க, நீ மன்னனாவாய்' எனவும் அவ்வுடன்பிறப்பினர் முன்னுரைத்தனர். பெருமைக்குரிய என் இன்னுயிர்த் துணையாகிய உனக்கு இச்செய்தியை அனுப்பி வைக்கின்றேன். எனவே, உனக்கு அமையவிருக்கும் பெருமைதனை நீ அறியாது மகிழ்ச்சிக் கொண்டாட்டத்தை இழந்துவிடலாகாது என்பதற்காகவே இந்த முடங்கல் போக்கினேன். இதை உன் நெஞ்சில் பதித்துவை. விடைபெறுகின்றேன்.'' (தனக்குள்) அன்பரே, நீங்கள் கிளாம்ஸ்; இப்பொழுது கோடோர். உங்களுக் களிக்கப்பெற்ற வாக்குறுதிக்கேற்பவே நீங்கள் விளங்குவீர்கள். இருப்பினும் உங்கள் இளகும் இயல் பினை எண்ணியே அஞ்சுகின்றேன்! குறுக்குவழி செல்லுதற்கு நீங்கள் மிகவும் மென்மையுள்ளம் படைத்தவர். பெருமை தரும் மேன்மை நிலை அடைதல் வேண்டுமென்னும் பேரவா உங்களுக் குண்டு. நீங்கள் மேன்மை நிலையை விரும்பாதவ ரல்லர்! ஆயின், அதனைப் பெறுதற்குரிய அருளற்ற வன்மை மனம் உங்கள்பால் இல்லை. நேர்மைத் திறத்தால் நீடுபுகழ் நாடுகின்றீர்கள். பொய்ம்மை வழி செல்தல் மெய்ம்மைக்கு முரணென எண்ணுகின்றவர்

þÿAll rights reserved. ª¿. •¿°

வீழ்தல் வேண்டும்; அன்றி, அதன் உயரே குதித்துத் தாவுதல் வேண்டும். விண்மீன்களே, ஒளிர்வதை ஒளித்திடுக! என் அளவிடவியலா இழிபுடை அவாவினைக் காணல் வேண்டாம் ஒளி! கை செய்யும் செயலைக் காணல் வேண்டுவது கண்ணின் பொறுப்பன்று. ஆயின், கண் அஞ்சும் அவ்வினை முடியின், கண் அதனைக் காணட்டும்!

(அவ்விடம் விட்டு அகல்கிறான்)

டங்கன் : *(பேங்கோவை நோக்கி)* உண்மை, பண்பார்ந்த பேங்கோ! சிறப்புறு வன்மையினன் அவன். அவன்றன் மேன்மை மதிப்புகளை யாம் உண்டு திளைக்கின்றோம். அவை எமக்குப் பெருவிருந்து. வருக, அவனைப் பின்தொடர்வோம். நம் நலம் நாடி நம்மை வரவேற்றற்கு அவன் முன் சென்றிருக்கின்றான். இணையற்ற உறவினன் அவன்!

(எக்காள இசை முழக்கம். அவை கலைகின்றது)

## காட்சி : 5

(இன்வெர்னெஸ் நகர், மெக்பெத் மாளிகை. மெக்பெத் பெருமாட்டி, மெக்பெத் வரைந்த மடலைப் படிக்கின்றாள்)

மெ.பெருமாட்டி : ''வெற்றித் திருநாளன்று அவர்கள் என்னைக் கண்டனர். மனித அறிவுக்கு எட்டாப் பேராற்றல், அவர்களுக்குளதென, உறுதிமிக்க சான்றுகளால்

þÿAll rights reserved. ª¿. •¿°

பேங்கோ : மன்னர் நெஞ்சத்தில் நான் வளர்வேனாயின், அறுவடை மன்னர்க்கே!

டங்கன் : இன்பப் பூரிப்பினால் எம்மிரு விழிகளில் நீர் மல்குகின்றது. எம் பிள்ளைகளே, உறவினர்களே, பெருமகனார்களே, அரசவை உறுப்பினர்களே! எமக்குப்பின் எம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றற்கு எம் மூத்த மகன் மால்கம்மைத் தெரிவு செய்திருக் கின்றோம் என இங்கு அறிவிக்கின்றோம். அவன் இன்று முதல் கம்பர்லாந்து இளவரசன் என்று வழங்கப் பெறுவான். விருது வழங்குதல் அவன் ஒருவனுடன் முற்றுப் பெறவில்லை! நற்றிறத் தகுதி வாய்ந்தார் அனைவர்க்கும் விருதுகள், அவரவர் வரிசையறிந்து வழங்கப்பெறும். *(மெக்பெத்தை நோக்கி)* இனி இங்கிருந்து, உன்பால் எமக்கிருக்கும் பிணைப்பை மேலும் வலுப்படுத்த - உன் விருந்தினனாய் உன் இன்வெர்னெஸ் மாளிகைக்கு வருகையளிக்கவிருக்கின்றோம்.

மெக்பெத் : எஞ்சியதை என்னிடம் விடுங்கள். நான் முன்னரே சென்று மன்னர் வருகையை என் துணைவிக்கு அறிவித்து அவளை இன்ப வெள்ளத்தில் ஆழ்த்து கின்றேன். விடை தருமாறு பணிவுடன் விழை கின்றேன் *(வணங்குகின்றான்)*

டங்கன் : என் மதிப்பிற்குரிய கோடோர்!

மெக்பெத் : *(தனக்குள்)* கம்பர்லாந்து இளவரசன்! அது என் வழியில் குறுக்கிடும் தடை. அதில் நான் இடறி

þÿAll rights reserved. ª¿. •¿°

ஓ, பெருமதிப்பிற்குரிய இளவலே! என் நன்றியில்லாச் செயல்குறித்து நான் பெரிதும் வருந்துகின்றேன். அளவற்ற அருஞ்செயல்கள் பல வற்றை மிகக் குறுகிய காலத்திற்குள் நிறைவேற்றிய நீ அருஞ்செயல் மறவன்! அத்துணை விரைவுடன், உனக்குச் செலுத்துதற்குரிய கடனை என்னால் ஈடு செய்தல் இயலாது! பெறவேண்டுவனவற்றுள் நீ குறைவுறப் பெற்றிருப்பின், அப்பொழுது ஒருகால் என் நன்றியும் பரிசில்களும் பன்மடங்கு மேலோங்கியிருத்தல் கூடும். ஆயின், ஒன்றுரைப் பேன்: நான் வழங்குவனவற்றினும் மேலானவை உனக்குக் கிட்டும்!

மெக்பெத் : (வணங்கி) பற்றுமிக்க குடிமகன் என்னும் முறையில் மன்னர்க்குக் கடமையுணர்வுடன் பணியாற்றுதலே எனக்குக் கிட்டிய பெரும் பரிசில், மேன்மைமிகு மன்னர், மன்னர்தம் அரியணை, அரசு, குழந்தைகள், ஏவலர் அனைவர்க்கும் நான் பணியாற்றுதலைப் பெருமரீர் ஏற்றுக் கொள்ளல் வேண்டும். வேந்தர்தம் அன்பையும் மதிப்பையும் காத்து நிற்றலே எம்போன்றார் கடன்.

டங்கன் : மெக்பெத், வருக இங்கே! நீ வளமுடன் வாழ்தற்கு நல்லுதவி நல்கத் தொடங்கிவிட்டேன். (**பேங்கோ**வை நோக்கி) மதிப்பார்ந்த பேங்கோ, தகுதியில் நீ சிறிதேனுங் குறைந்தவனல்லன்! உன் அளப்பரிய அருஞ்செயலை அகிலம் அறிதல் வேண்டும். உன் மதிப்பு அறியப்படுதல் வேண்டும். வருக, உன்னை நான் என் நெஞ்சாரத் தழுவு கின்றேன்!

þÿAll rights reserved. ª¿. •¿º

மெ.பெருமாட்டி : பெருமைமிக்க என் பெரும! உங்கள் பெருமதிப்பிற்குரிய நண்பர்களைப் புறக்கணிக்கின்றீர்கள்.

மெக்பெத் : நான் மறந்து போகின்றேன். (விருந்தினரை நோக்கி) என் பெருமதிப்பிற்குரிய நண்பர்களே! என் நினைவு வேண்டாம். எனக்கு விந்தைமிகு ஓர் இயலாத்தன்மை உண்டு. ஆயின், என்னை அறிந்தோர்க்கு அது அத்துணை பெரிதன்று. வருக! (தன் கோப்பையை உயர்த்தி) அன்பும் நலனும் அனைவரும் பெறுக. நான் அமர்கின்றேன். எனக்கு இன்தேறல் சிறிது தருக. கோப்பையை நிரப்புக!

**(ஆவி மீண்டும் வருகின்றது)**

இங்கிருப்போர், இங்கிராத நம் நண்பன் பேங்கோ அனைவர்தம் மகிழ்வுக்கென நான் பருகுகின்றேன். அவன் இங்கிருந்திருக்கலாம். (வாழ்த்துக் கூறிப் பருகுதற்கு முன்மொழிகின்றான்) அனைவர்க்கும் இங்கிராத அவனுக்கும் என் நல்வாழ்த்துகள்!

பெருமக்கள் : எங்கள் கடமைகளை நினைவுகூர்ந்து பருகுகின்றோம்.

மெக்பெத் : (**ஆவி**யைக் காண்கின்றான்) விலகிச் செல்! என் பார்வையினின்று அகன்று போ! உன் கல்லறை உன்னை மறைக்கட்டும்! ஊனற்றவை உன்னெலும்புகள்; குளிர்மிக்கது உன் குருதி. உன் உறுத்த விழிகளால் பார்க்கின்ற ஆற்றல் உனக்கில்லை.

þÿAll rights reserved. ª¿. •¿°

Library Library Libr
ry Library Library
Library Library Libr
ry Library Library
Library Library Libr
ry Library Library
Library Library Libr

þÿAll rights reserved. ª¿. •¿°

þÿAll rights reserved. ª¿. •¿°

þÿAll rights reserved. ª¿. •¿°

வழங்குகின்றது. செத்த இக்கொலை வெறியன், பிறர் கூறுதல்போல் தன் கொடுங் கைகளால் தன்னுயிர் போக்கிய இவன் கொடிய மனைவி - இவ்விருவர்தம் இரங்குந் தன்மையற்ற துணையாளர்கள் இழைத்த கொடுமைகளுக்கஞ்சி, நாட்டை விட்டோடிய எம் நண்பர்களை நாடு திரும்ப அழைத்தல், யாம் ஆற்றவிருக்கும் மற்றொரு பணி. இவர்களுக்குப் பொருத்தமிகு வேளையில் பொருத்தமிகு இடத்தில் நனி சிறந்த நல்வரவேற்பு நல்குவோம். எனவே, ஒருங்குறவும் தனித்தும் அனைவர்க்கும் நன்றி நவில்கின்றோம். ஸ்கோனில் நடைபெறும் எமது முடி சூட்டு விழாவிற்கு வருமாறு உம் அனைவர்க்கும் யாம் அழைப்பு விடுக்கின்றோம்.

(எக்காள இசை முழக்கம்)

## ஆசிரியரின் பிற நூல்கள்:

1. இலக்கியக் காட்சிகள்
2. புதுமைதாசன் கதைகள்
   (சிங்கப்பூர்த் தேசிய புத்தக மேம்பாட்டு மன்றத்தின் பாராட்டு விருது பெற்றது)

þÿAll rights reserved. ª¿. •¿°

சீவர்ட் : அவன் மதிப்பு இவ்வளவுதான். 'அவன் புகழொடு இறந்தான்; தன் கடன் முடித்தான்' என்றனர் அவர்கள். எனவே, இறைவன் அவன் அருகில் இருப்பாராக. இதோ! மிகப்புதிய மகிழ்வு வருகின்றது.

**(மெக்டஃப், வெட்டுண்ட மெக்பெத் தலையைக் கோலில் குத்தி எடுத்து வருகின்றான்)**

மெக்டஃப் : (**மால்கம்**'மை நோக்கி) மன்னர் வாழ்க! நீயிர் மன்னர்தாம்! உரிமையில்லான் இழிவுடைத் தலை, எங்கே நிற்கின்றதெனக் காண்க! காலத்திற்கு விடுதலை. உமது அரசின் முத்துகள் உம்மைச் சூழ்ந்திருத்தலை நான் காண்கின்றேன். என் வாழ்த்தினை அவர்கள் தம் மனத்துள் கூறுகின்றனர். என்னுடன் இணைந்து வாழ்த்துதற்கு உங்கள் அனைவரையும் அழைக்கின்றேன். வாழ்க, ஸ்காட்லந்து மன்னர்!

பெருமகனார்கள் : வாழ்க, ஸ்காட்லந்து மன்னர்!

**(எக்காள இசை முழக்கம்)**

மால்கம் : உம் அனைவர் அன்பையும் மதிப்பீடு செய்து, ஒவ்வொருவர்க்கும் எம் நன்றிக் கடனைச் செலுத்துதற்கு உம்மை நெடுங்காலம் காத்திருக்கச் செய்யேன். இவ்வேளை முதல் பெருமகனார்களும் என் உறவினர்களும் கோமகர்கள் என வழங்கப் பெறுவர். ஸ்காட்லந்து முதல் முறையாய் இந்த விருதை

þÿAll rights reserved. ª¿. •¿°

சீவர்ட் : சிலர் இறக்கத்தான் வேண்டும். எனினும், இத்திறமிக்க ஓர் ஒப்பற்ற நாளை நாம் மலிவாய்ப் பெற்றோம் என்றே கருதுகின்றேன்.

மால்கம் : மெக்டஃப்'பைக் காணவில்லை. உமது பெருமைக் குரிய மகனும்...

ரோஸ் : பெரும, உமது மகன் பெருமறவனென மாண்டான். அவன் தன் ஆண்மைத்திறம் எட்டுகின்ற காலத்திற் கெனவே வாழ்ந்திருந்தான். அக்காலம் வந்தகாலை, போர்க்களம் புகுந்து - மனஞ் சிறிதுங் குன்றாது தன் ஒப்பிலாப் பேராற்றலை வீறுடன் புலப்படுத்தி நெடும்புகழ் நிறுவி மறைந்தான்.

சீவர்ட் : அவ்வாறெனில் அவன் இறந்தான்?

ரோஸ் : ஆம். போர்க்களத்தினின்று அவனுடல் எடுத்து வரப்பெற்றது. உம் துன்பத்தை அவன் மதிப்புடன் அளவிடல் வேண்டாம். அது எல்லையிலாதது!

சீவர்ட் : அவன் பெற்றது விழுப்புண்ணா?

ரோஸ் : ஆம்! அவன் நெஞ்சில்!

சீவர்ட் : நன்று. அவன் இறைவன்றன் படைஞனாய்த் திகழ்வானாக! என் தலைமயிர் எண்ணிக்கையளவு எனக்கு ஆண்மக்கள் இருப்பரேல், அவர்களுக்கு இதன்னினும் சிறப்புடைச் சாவினை விரும்பேன்! அவன் சாவுமணி அடித்தது.

மால்கம் : அவன் மதிப்புக்கு இன்னும் துயரம் வேண்டும். அதை நான் தருவேன்.

þÿAll rights reserved. ª¿. •¿°

நிகழ்த்துகின்ற அக்கொடும் பேய்களை இனி நம்புதல் கூடாது! அவர்கள் இருபொருளால் நம்முடன் சொற்புரட்டுச் செய்கின்றனர். நம் செவிக்கு நம்பிக்கை மொழியூட்டிப் பின்னர் அதனைச் சிதறச் செய்கின்றனர். நான் உன்னுடன் போர் செய்யேன்!

மெக்டஃப் : அவ்வாறெனின் பணிந்து விடு கோழையே! அச்சமூட்டும் எங்கள் மாவிலங்குகளுள் ஒன்றாய் உன்னைக் கருதுவோம். உன் உருவம் வரைந்து, 'கொடுங்கோலனை நீயிர் இங்குக் காண்பீர்' என்றெழுதித் தொங்கச் செய்வோம்!

மெக்பெத் : நான் பணியேன்! இளையன் மால்கம் காலடி முன் வீழ்ந்து நிலமகளை முத்தமிடேன்! ஒழுங்கற்ற கூட்டத்தினர்தம் இழிவுரைகளுக்கு இரையாகேன்! பேர்னாம் காடு டன்சினேனுக்கு வந்ததெனினும், என்னை எதிர்க்கும் நீ பெண்ணுக்குப் பிறவாதவனெனினும் இறுதிவரை போரிடுவேன் நான்! போர் வீறு மிக்குடைய இக்கேடயத்தை என் உடல் முன்னே எறிகின்றேன்! இருவருள் ஒருவர், 'நிறுத்து, போதும்!' என்று கூறும்வரை போரிடு மெக்டஃப்!

(இருவரும் போரிட்டவாறே செல்கின்றனர்)

(முழவுகள் முழங்க, கொடிகள் பறக்க மால்கம், சீவர்ட், ரோஸ், பெருமகனார்கள், படைஞர்கள் ஆகியோர் வருகின்றனர்)

மால்கம் : நம் நண்பர்களுள் சிலரைக் காணவில்லை. அவர்கள் இங்கு நலமே வந்து சேர்தல் வேண்டுமென விரும்புகின்றேன்.

þÿAll rights reserved. ª¿. •¿°

இருப்போரைக் காணுங்கால், அவர்களே என் நெடுவாள் வீச்சுக்கு மிகப் பொருத்தமுடையராய்த் தோன்றுகின்றனர்.

(மெக்டஃப் வருகின்றான்)

மெக்டஃப் : திரும்பு! அளற்றின் வேட்டை நாயே, திரும்பு!

மெக்பெத் : அனைவருள்ளும் உன்னையே தவிர்த்து வந்தேன்! திரும்பிச் செல்! முன்னரே உன் குருதி என் உயிருள் நிறைந்துளது.

மெக்டஃப் : உன்னிடம் நான் சொற்களால் பேசேன்; என் பொருட்டு என் வாள் பேசும்! வெறுஞ் சொற்களால் விளக்கவியலா வெங்கொலை வெறியன் நீ!

(இருவரும் போரிடுகின்றனர்)

மெக்பெத் : உன் ஆற்றலை நீ வீணாக்குகின்றாய். உன் கூரிய வாள் முனையால் எளிதாய்க் குருதிப் பெருக் கெடுக்கச் செய்தல் போல், காற்றையும் நீ எளிதாய் வெட்டலாம். வலியற்றார் தலைகள் வீழ்தற்கு வீசு உன் வாளை! மாய ஆற்றல் மிக்கது என் உயிர்! பெண்ணுக்குப் பிறந்த எவனுக்கும் அது பணியாது!

மெக்டஃப் : உன் மாயத்தின்பால் நம்பிக்கை வேண்டாம்! நீ பணியாற்றும் அந்த வீழ்ச்சியுற்ற வான்தூதர் உனக்கு இதைக் கூறட்டும்: தன் தாயின் பேறு காலம் வருதற்கு முன்னரே அவள் வயிற்றினின்று எடுக்கப் பெற்றவன் இந்த மெக்டஃப்!

மெக்பெத் : அவ்வாறு உரைத்த உன் நா அழியட்டும்! என் ஆண்மையை அது அச்சுறுத்திற்று. சொற்சிலம்பம்

þÿAll rights reserved. ª¿. •¿°

ஆவிகள் இடையறாது என்னைச் சுற்றிய வண்ணமேயிருக்கும். கூலிக்குழைக்கின்ற குறுந்தடி ஏந்தும் இழிவினருடன் போரிடேன் நான்! அவன் - நீ! அல்லாக்கால் உருவிய வாளை உறையிலிடுவேன்! (சுட்டி) இரைச்சல் வருமிடம் நோக்கின் நீ அங்கேதான் இருத்தல் வேண்டும். அது பெருமதிப்பினன் ஒருவனையே குறிக்கின்றது. நற்பேறே, அவனை எனக்குக் காட்டு! வேறெதுவும் வேண்டேன் நான்!

(அவன் செல்கின்றான். போர் முழக்கங்கள் தொடர்ந்து ஒலிக்கின்றன. *மால்கம், சீவர்ட்* இருவரும் வருகின்றனர்.)

சீவர்ட் : பெரும, இவ்வழியே வருக. இக்கோட்டை எதிர்ப்பின்றி வீழ்ந்தது. அக்கொடுங்கோலன் படையினர் இருபக்கமும் போரிடுகின்றனர். பெருமைமிகு பெருமகனார் பலர் இப்போரில் வீறுடன் போரிட்டனர். இந்நாள், உமக்குரிய நாள். இனிச் செய்ய வேண்டுவது சிறிதே.

மால்கம் : பகைவர் பலர் நம்மைச் சார்ந்து போரிட்டனர்.

சீவர்ட் : ஐய, கோட்டைக்குள் நுழைக!

## காட்சி :8

(போர்க்களத்தின் மற்றொரு பகுதி. மெக்பெத் வருகின்றான்)

மெக்பெத் : ஏன் நான் அறிவற்ற ரோமானியன்போன்று என் வாளாலேயே சாதல் வேண்டும்? உயிரோடு

þÿAll rights reserved. ª¿. •¿°

மெக்பெத் : அதைக் கேட்டற்கு நீ அஞ்சுவாய்!

இ.சீவர்ட் : இல்லை! அளற்றில் அறியப்பெறும் பெயர் களினும் நீயிர் கூறும் பெயர் வெம்மைமிக்கதாயினும் உறுதியாய் இல்லை!

மெக்பெத் : என் பெயர் மெக்பெத்.

இ.சீவர்ட் : என் செவி பெரிதும் வெறுக்கின்ற இப்பெயர் போன்று வேறு ஒரு பெயரைப் பேயும் புகலாது!

மெக்பெத் : இல்லை! இனி அச்சமென்பதே இல்லை!

இ. சீவர்ட் : நீ பொய் புகல்கின்றாய் வெறுப்பூட்டுங் கொடியனே! அது பொய்யென என் வாளால் மெய்ப்பிக்கின்றேன்!

(இருவரும் போரிடுகின்றனர். இறுதியில் **இளையன் சீவர்ட்** கொல்லப்படுகின்றான்)

மெக்பெத் : நீ பெண்ணுக்குப் பிறந்தவன்! பெண்ணுக்குப் பிறந்த ஒருவன் வாள் சுழற்றுகையில் அவ்வாள் கண்டு முறுவலிக்கின்றேன்; படைக்கலங்கள் சுழற்றுங்கால் அவற்றைக் கண்டு எள்ளி நகைக் கின்றேன்!

(போர் முழக்கவொலிகள். **மெக்பெத்**'தைத் தேடி **மெக்டஃப்** வருகின்றான்)

மெக்டஃப் : இரைச்சல் அங்கிருந்து வருகின்றது. (கத்துகின்றான்) கொடுங்கோலனே, காட்டு உன் முகத்தை! என்னாலன்றிப் பிறரால் நீ கொல்லப்படுவாயெனின், என் மனைவி மக்கள்தம்

þÿAll rights reserved. ª¿. •¿°

மெய்யுடை நீயிர் யாவரென அறியச் செய்வீர்! (*சீவர்ட்*'டை நோக்கி) பெருமைமிகு மாமன் அவர்களே! நீயிர், என் மைத்துனன் - உமது பெருமைமிகு மகன் - இளையன் சீவர்ட்'டுடன் முதல் தாக்குதலைத் தொடங்குவீர்! மதிப்பிற்குரிய மெக்டஃப்'பும் நானும் பிறவற்றிற்குப் பொறுப்பேற்கின்றோம்.

சீவர்ட் : பிரியாவிடை பெறுகின்றோம். இரவு சூழ்வதற்குமுன் அக்கொடுங்கோலன் படையினைக் காண்போமெனில் - அவ்வேளை போரிடாமற் போவோமெனில் தோல்வி எம்மைத் தழுவட்டும்!

மெக்டஃப் : நம் எக்காள ஒலிக் கருவிகள் அனைத்தையும் ஒலிக்கச் செய்வீர்! அனைத்தையும் ஊதுக! குருதியும் சாவும் குவியட்டும் இங்கே!

## காட்சி : 7

(போர்க்களத்தின் மற்றொரு பகுதி)

மெக்பெத் : அவர்கள் என்னைக் கழுமரத்தில் பிணித்தனர். நான் தப்புதல் இயலாது! கடிநாய்கள் கடிக்கெனவே கழுவினில் கட்டுண்ட கரடியென எதிர்த்தே தீர்தல் வேண்டும். பெண்ணுக்குப் பிறவாத ஒருவன் எத்தன்மையினன்? அவனுக்கே நான் அஞ்சுதல் வேண்டும்; மற்றெவனுக்கும் அன்று!

(இளையன் சீவர்ட் வருகின்றான்)

இ.சீவர்ட் : உம் பெயரென்ன?

þÿAll rights reserved. ª¿. •¿°

**மெக்பெத்** : நீ பொய் புகன்றாயெனின், பசியால் இறக்கின்றவரை அடுத்திருக்கும் மரத்தில் உயிரொடு தொங்குவாய். நீ மெய் மொழிந்தாயெனின், அவ்வாறே என்னை நீ செய்யினும் நான் கவலையுறேன். என் நம்பிக்கையை நான் இழந்து வருகின்றேன். பேயின் சொற்புரட்டுகளால் நான் ஐயுறுகின்றேன். அதன் பொய்கள் மெய்யெனத் தோன்றின. 'டன்சினேனுக்குப் பெர்னாம் காடு வாராதவரை அஞ்சற்க.' ஆயின், காடு இப்பொழுது டன்சினேன் நோக்கி வருகின்றது. படைக்கலங்கள்! படைக்கலங்கள், படுகளம் நோக்கி! அவன் உரைத்தது உண்மையெனின், வேறு இலது! தயக்கமும் வேண்டா! காய்கின்ற கதிரவன் என்னைக் களைப்புறச் செய்கின்றான். வையகம் சிதறட்டும்! எச்சரிக்கை முழங்குக! காற்றே, கடுகி வீசு! அலைக்கின்ற அழிவே வருக! வாளேந்திக் களத்தில் மாள்கின்றேன்!

(செல்கின்றனர்)

## காட்சி : 6

**(டன்சினேன் கோட்டை வாயிலருகில் மால்கம், சீவர்ட், மெக்டஃப் ஆகியோருடன் படையணியினரும் இருக்கின்றனர். படைஞர்கள் மரக்கிளைகளைக் கைகளில் தூக்கிப் பிடித்திருக்கின்றனர்)**

**மால்கம்** : நாம் அருகில் நெருங்கிவிட்டோம். படைஞரே! உமது இலைத்திரை மரக்கிளைகளை எறிந்து விடுக!

þÿAll rights reserved. ª¿. •¿°

வழியினுக்கு ஒளிகாட்டும் விளக்குகளாய் மட்டுமே விளங்கியிருக்கின்றன. அணைந்து போ, அணைந்து போ குறை நாள் மெழுகுவத்தியே! வாழ்க்கை, நடக்கும் நிழல்: மேடையில் ஆர்ப்பாட்டத்துடனும் இறுமாப்புடனும் சிறுபொழுது தோன்றுகின்ற திறனற்ற நடிகன். பின்னர் அவனை அறிவார் எவருமிலர்! இது ஒரு முட்டாள் கூறிய கதை. இரைச்சலும் சீற்றமும் நிறைந்தது; பொருளற்றது. குறிப்பிடுதற்கு ஒன்றுமில்லை!

(தூதன் வருகின்றான்)

நீ, உன் நாவைப் பயன்படுத்த வந்திருக்கின்றா யெனில் விரைக! என்ன செய்தி?

தூதன் : பெருந்தன்மைப் பெரும, 'நான் கண்டேன்' என நான் கூறுவதைப் பெருமரீர்தமக்கு அறிவித்தல் என் கடன். ஆயின், எவ்வாறு கூறுதலென நான் அறியேன்.

மெக்பெத் : கூறு!

தூதன் : குன்றின் மீது நின்றிருந்து பெர்னாம் காட்டைக் கருத்தூன்றிக் கவனித்து வந்தேன். விரைவில் அக்காடு நகர்வதைப் போன்று உணர்ந்தேன்.

மெக்பெத் : பொய் புகலும் அடிமையே!

தூதன் : நான் பிழை செய்தேனெனின் பெருமரீர்தம் பெருஞ்சினம் என்னை ஒறுக்கட்டும்! மூன்று கல் தொலைவுக்குள் அது நகர்ந்து வருதலைப் பெருமரீர் காணலாம். அது நகருந் தோப்பு.

þÿAll rights reserved. ª¿. •¿°

நம்மைக் கைவிட்டோடியோர் அவர்கள் படைக்கு வலியூட்டாதிருந்திருப்பின், அவர்களைத் துணிவுடன் எதிர்த்திருப்போம்; அவர்கள் நாட்டுக்கே மீளச் செய்திருப்போம். (அவன், அழும் ஒலி கேட்கின்றான்) அது என்ன ஒலி?

செய்ட்டன் : பெண் ஒருவர் அழுகின்ற ஒலி பெரும.

(அவர் செல்கின்றார்)

மெக்பெத் : அச்ச உணர்வினை நான் பெரிதும் மறந்தேன். இரவிடை எழுகின்ற ஓலம் என்னை நடுக்குறச் செய்த காலமும் உண்டு. புலம்பல்கள், தோல் மயிர்களை உயிர் பெற்றன போல் குத்திட்டுக் கூச்செறியச் செய்திருக்கின்றன. அச்சம் நிறைந்தது என் வாழ்க்கை. என் கொலை மனத்து எண்ணங்களில் பேயோலமும் பேய்த்தோற்றங்களுமே இடம் பிடித்திருந்தன. அவை, இனி என்னைத் திடுக்கிட வைத்தல் இயலாது.

(செய்ட்டன் மீண்டும் வருகின்றார்)

ஏன் அந்த அழுகை?

செய்ட்டன் : பெரும... அரசியார் இறந்துவிட்டார்.

மெக்பெத் : என்றேனும் அவள் இறக்க வேண்டியவளே. அது நிகழவே செய்யும். நாளை... அதற்கடுத்த நாள்... அதற்கடுத்த நாள்... வாழ்க்கை, ஒவ்வொரு நாளும் இறுதி எல்லை நோக்கி மெல்ல மெல்ல நகர்ந்து செல்கின்றது. நம் கழிந்த நாள்கள், முட்டாள்களை அவர்கள் கல்லறைகளுக்கு இட்டுச் செல்லும்

þÿAll rights reserved. ª¿. •¿°

மால்கம் : அதுவே அவன் தலையாய நம்பிக்கை. தமக்கு வாய்ப்பு வந்தகாலை, பல்திறத்து மக்களும் அவனை விட்டுப்பிரிந்தனர். வற்புறுத்தலால் திரட்டப் பெற்றோர் அவனுக்குப் பணி செய்கின்றனர். ஆயின், அவர்கள் மனம் அங்கில்லை!

மெக்டஃப் : முடிவுரை கூறுதல் போருக்குப்பின்! இப்பொழுது வேண்டுவது கருத்தூன்றித் திட்டமிடப்பெறும் நற்றிறம் வாய்ந்த போர்த்திறன்!

சீவர்ட் : எதனைப் பெற்றோம், எதனை இழந்தோம் என்னும் உண்மை நிலையை நாம் விரைவில் அறிவோம். முன்னரே முடிவு செய்யும் எண்ணங்கள் பயனற்றவை. சில குழப்பங்கள் போரில் மட்டுமே தீர்வன. அதனை உறுதி செய்யப் புறப்படுவீர் போர்க்களம்!

(அணிவகுத்துச் செல்கின்றனர்)

## காட்சி : 5

(டன்சினேன் கோட்டையில் ஓர் அவை. மெக்பெத், செய்ட்டன், படைஞர் சிலர் இருக்கின்றனர்)

மெக்பெத் : புறச் சுவர்களில் நம் கொடிகளைத் தொங்கச் செய்வீர்! இன்னும் 'அவர்கள் வருகின்றார்கள்' என்னும் கூக்குரல். நம் கோட்டை வலிமைமிக்கதா தலின், முற்றுகை நகைப்பிற்குரியது. வற்கடமும் வன்குளிரும் அவர்களை வருத்தி உண்ணட்டும்.

þÿAll rights reserved. ª¿. •¿°

## காட்சி : 4

(**பெர்னாம் காட்டினருகில் அமைந்த புறநகர்ப் பகுதி. முழவுகள் முழங்குகின்றன. கொடிகள் பறக்கின்றன.** ***மால்கம், சீவர்ட், மெக்டஃப், சீவர்ட்'டின் மகன், மென்டைத், கெய்த்னெஸ், ஆங்கஸ், லென்னக்ஸ், ரோஸ்,*** **படைஞர்கள் ஆகியோர் இருக்கின்றனர்)**

**மால்கம்** : உறவினர்களே! பள்ளியறைகள் காப்புடையனவாய் விளங்கும் நன்னாள் அருகில் வருகின்றது.

**மென்டைத்** : எமக்கு ஐயமில்லை!

**சீவர்ட்**: நம் முன்னே இருப்பது என்ன காடு?

**மென்டைத்** : பெர்னாம் காடு.

**மால்கம்** : படைஞன் ஒவ்வொருவனும் ஒவ்வொரு பெரும் மரக்கிளையை வெட்டித் தனக்கு முன்னே தூக்கிச் செல்லுமாறு படைஞன் ஒவ்வொருவனுக்கும் கூறுக!... அது நம் படையளவை மறைத்துப் பகைவனுக்கு நம்மைப்பற்றித் தவறுடைத்த செய்தியுரைக்கும்.

**படைஞன்** : அது செயலாக்கம் பெறும்.

**சீவர்ட்** : எல்லாச் சான்றுகளும், பெருநம்பிக்கையில் ஆழ்ந்திருக்கும் அக்கொடியன் டன்சினேனுக்குள் அடைபட்டுக் கிடக்கின்றான் என உணர்த்துகின்றன. நம் முற்றுகையை அவன் நெடுநாள் தாங்குவான்.

þÿAll rights reserved. ª¿. •¿°

*எனக்கு அணிவிப்பீர்! என் ஈட்டியைத் தருவீர்!* (**மருத்துவரை** நோக்கி) *மருத்துவரே! பெருமக்கள் என்னை விட்டு ஓடுகின்றனர்.* (**செய்ட்டனை** நோக்கி) *விரைந்து அணிவிப்பீர்!* (**மருத்துவரை** நோக்கி) *மருத்துவரே! என் நாட்டின் நோய் எத்தன்மையது என்பதை நீயிர் மட்டும் தேர்ந்து தெளிவீராயின்... அந்நோயகற்றி அதன் முன்னைப் பெருநலத்தை மீட்பீராயின் உம்மை எதிரொலிக்கப் போற்றுவேன். அவ்வெதிரொலி, மீண்டும் உம்மைப் போற்றும்!* (**செய்ட்டனை** நோக்கி) *கவசத்தைக் கழற்றுவீர்!* (**மருத்துவரை** நோக்கி) *குடற்கழிவைப் பெருகச் செய்யும் மருந்துகள் எங்கே? அவை இந்த ஆங்கிலேயர்களைத் தூய்மைப்படுத்தும்! அவற்றை நீயிர் கேள்வியுற்றிருக்கின்றீரா?*

மருத்துவர் : *ஆம், பெரும. மாட்சிமைமிகு மன்னர்தம் ஆக்கத்தால் செய்யப் பெற்ற மருந்தெனக் கேள்வியுற்றோம்.*

மெக்பெத் : *(பொறுமையிழந்து கவசம் அணிந்துகொள்ள மறுக்கின்றான்;* **செய்ட்டனைச்** *சீறுகின்றான்) கவசத்துடன் என்னைப் பின்தொடர்வீர்! டன்சினேன் நோக்கிப் பெர்னாம் காடு நகர்ந்து வாராதவரை சாவிற்கோ அழிவிற்கோ அஞ்சேன் நான்!*

மருத்துவர் : *(தனக்குள்) டன்சினேனின்று நான் நெடுந் தொலைவு அகன்றிருப்பின், எச்செல்வமும் என்னை இங்கு ஈர்க்காது!*

(அவர்கள் செல்கின்றனர்)

þÿAll rights reserved. ª¿. •¿°

மெக்பெத் : புதிய செய்தி யாது?

செய்ட்டன் : அறிவித்தவாறு அனைத்தும் உண்மை.

மெக்பெத் : என் எலும்புகளினின்று தசையனைத்தும் சிதைந்து போகின்றவரை போரிடுவேன். என் கவசத்தைக் கொடுப்பீர்!

செய்ட்டன் : அது இப்பொழுது தேவையில்லை.

மெக்பெத் : நான் அணிந்துகொள்கின்றேன். இன்னும் ஒற்றர்கள் பலரை அனுப்புக; நாடு முழுதும் அலைந்து தேடுக; அச்சம் என்பாரைத் தூக்கிலிடுக. என் கவசத்தைக் கொடுப்பீர்! (**மருத்துவர்** பக்கம் திரும்பி) உம் நோயாளியின் நிலை என்ன மருத்துவரே?

மருத்துவர் : நோய் பெரிதன்று பெரும. அடுக்கிவரும் மனப்புனைவுகள் அவரை உறங்கவிடாது தடுக்கின்றன.

மெக்பெத் : அவளை நலமுறச் செய்க! நோயுற்ற மனத்தை உம்மால் நலங்காணச் செய்தல் இயலாதா? நினைவில் நிலைத்திருக்கின்ற துன்ப வேரினைப் பிடுங்கியெறிக; மூளையில் எழுதப் பெற்றிருக்கும் தொல்லைகளை அழித்து விடுக; நெஞ்சையடைத்து உள்ளத்தை அழுத்தும் பளு தளர்ந்து ஓய்வுற்றிருக்க - இன்சுவை நல்கும் மாற்று மருந்து கொடுப்பீர்!

மருத்துவர் : இத்தகு செயல்களில் நோயாளியே தன்னைப் பேணிக்கொள்தல் வேண்டும்.

மெக்பெத் : மருந்தை நாய்களுக்கு வீசுக! அது எனக்குப் பயனில்லை. (**செய்ட்டனை** நோக்கி) என் கவசத்தை

þÿAll rights reserved. ª¿. •¿°

ஏவலன் : படைஞர்கள் ஐயனே.

மெக்பெத் : செல்! முகத்தை வெட்டி உன் அச்சத்தைச் சிவக்கச் செய், வெள்ளீரல் சிறியனே! என்ன படைஞர்கள் முட்டாள்? உன் உயிருக்கு இறுதி பயக்கட்டும். நோய் பற்றியது போன்ற உன் கன்னங்கள் அச்சத்தின் அடிமைகள்! என்ன படைஞர்கள் வெளிறிய முகத்தினனே?

ஏவலன் : ஆங்கிலேயர் படை ஐயனே...

மெக்பெத் : முகத்தைக் காட்டாதே!

**(ஏவலன் ஓடுகின்றான்)**

(அழைக்கின்றான்) செய்ட்டன்! (சோர்வுடன்) இப்போர் என்னை ஏற்றலாம்; அன்றி இறக்கலாம்! நான் நெடுங்காலம் வாழ்ந்தேன். என் வாழ்க்கைப் பயணம், மஞ்சள் வண்ணமென மாறி உதிர்ந்து வீழ்கின்ற இலை போலாயிற்று. முதிய அகவையில் துணை நிற்க வேண்டிய புகழ், அன்பு, பணிவு, நண்பர் குழாம் அனைத்தையும் நான் பெற எண்ணுதல் இயலாது. இவற்றுக்கு ஈடாய்ப் பழி மலிந்த உரைகள்! உரத்த குரலிலன்று; மனத்திற்குள்! வாய்ப் புகழ்ச்சி! பணிவார்ந்த சொற்கள் அச்சத்தால் உதிர்கின்றன; நெஞ்சாரவன்று! (மீண்டும் அழைக்கின்றான்) செய்ட்டன்!

**(செய்ட்டன் வருகின்றார்)**

செய்ட்டன் : மேன்மைமிகு ஐயன்மீர், வேண்டுவது என்ன?



þÿAll rights reserved. ª¿. •¿°

## காட்சி : 3

**(டன்சினேன் கோட்டையில் ஓர் அவை. மெக்பெத், மருத்துவர், துணையாளர், ஏவலர் ஆகியோர் இருக்கின்றனர்)**

மெக்பெத் : இனி அறிக்கைகள் எவற்றையும் என்பால் கொண்டு வருதல் வேண்டா! ஓடுவார் ஓடட்டும்! பெர்னாம் காடு டன்சினேனுக்கு நகர்ந்து வாராதிருக்கும்வரை, நான் அஞ்ச வேண்டுவ தில்லை! யார் இந்தச் சிறுவன் மால்கம்? அவன் என்ன பெண்ணுக்குப் பிறவாதவனா? மாந்தர்தம் செய்வினைகளின் விளைவுகள் அனைத்தையும் அறிந்த அந்த ஆவிகள் 'அஞ்சேல் மெக்பெத்! பெண்ணுக்குப் பிறந்த எவருக்கும் உன்னை வெல்லும் ஆற்றல் இல்லை'யென எனக்குக் கூறி யிருக்கின்றன. எனவே, பொய்ம்மைப் பெருமான் களே, ஓடுங்கள்! அந்த இழிவினர் - ஆங்கிலேய ருடன் தோழமை பூண்டு உறவாடுங்கள். அரசோச்சும் என் எண்ணமும் உரமிக்க உள்ளமும், ஐயத்தால் தளரவோ அச்சத்தால் நடுங்கவோ மாட்டா!

**(ஏவலன் அச்சத்துடன் வருகின்றான்)**

பேய் உன்னைக் கறுப்பனாக்கட்டும். வெளுத்த முகக் கிறுக்கனே! இவ்வாத்து முகத்தினை எங்கிருந்து பெற்றாய் அறிவற்றவனே?

ஏவலன் : அங்கே பதினாயிரம்...

மெக்பெத் : வாத்துகளா கொடியனே?

þÿAll rights reserved. ª¿. •¿°

ஆங்கஸ் : தன் மறைகொலைகள் தன் கைகளில் ஒட்டுகின்றன என்பதை அவன் இப்பொழுது உணர்கின்றான். ஒவ்வொரு நொடியும் கிளர்ச்சிகள் அவன் குற்றங்களைப் பழிதீர்க்கின்றன. அவன் ஆணைக்கு அடங்கினோர் கடமை கருதியே பணிகின்றனர்; அன்பின் பொருட்டன்று. வல்லரக்கன் மேலாடை குள்ளவுருத் திருடன் மீது கிடந்தாற் போல், தன் அரச நிலைப் பெரும் பளு, தன்னைச் சோர்வுறச் செய்கின்றது என்பதனை அவன் இப்பொழுது உணர்கின்றான்.

மென்டைய்த் : அவன்றன் ஒரு கூறாய் இருத்தலை எண்ணி நாணமுற்றுக் குலுங்குகின்ற அவன் குலைந்த புலனுணர்வுகளை எவரே குறை சொல்வார்?

கெய்த்னெஸ் : நேர்மை நெறியொடு எங்கு நாம் பணி செய்தல் வேண்டுமோ, அவ்விடம் நோக்கி அணிவகுக்கட்டும் நம் படை! நோயுற்ற நம் நாட்டின் மருத்துவன் மால்கம்'மைக் காண்டற்குக் கடிநடை யிடுக! நம் நாட்டின் நோயினைக் களைதற்கு அவனுடன் நம் குருதியின் ஒவ்வொரு துளியும் சிந்தட்டும்!

லென்னக்ஸ் : அவ்வாறே இன்றியமையா அரச மலருக்கு நீர் தெளிப்போம்; பதரை நீரில் மூழ்கச் செய்வோம்! பெர்னாம் நோக்கி அணி வகுப்புத் தொடங்கட்டும்!

(அணிவகுத்துச் செல்கின்றனர்)

þÿAll rights reserved. ª¿. •¿°

நேரிய நோக்கின் பொருட்டு, அவர்கள் செந்நீர்ப் போரைத் தொடங்கவே வேண்டும். படைக்கலங் களுடன் 'திரண்டெழுக' என்னும் வீறுமிக்க அழைப்பொலி செத்தாரையும் கிளர்ச்சியுறச் செய்யும்!

ஆங்கஸ் : நாம் அவர்களைப் பெர்னாம் காட்டினருகில் காணுதல் கூடும். அவர்கள் அவ்வழியாகவே வருகின்றனர்.

கெய்த்னெஸ் : டோனல்பெய்ன் தன் தமையனுடன் இருக் கின்றானா என எவரேனும் அறிவாரா?

லென்னக்ஸ் : ஐய, உறுதியாய் இல்லை. பெருமக்கள் அனைவர்தம் பெயர்ப்பட்டியல் என்னிடம் உளது. அப்பட்டியலில் சீவர்ட் பெருமகனார்தம் மகன் பெயர் உண்டு. இன்னும் தம் ஆண்மைப் பருவத் திறத்தை முதன் முறையாய்ப் போர் முனையில் புலப்படுத்தத் துடிக்கும் இளையர் பலர் பெயர்களும் அடங்கும்.

மென்டைய்த் : அக்கொடுங்கோன்மையினன் என்ன செய்கின்றான்?

கெய்த்னெஸ் : அவன் டன்சினேன் கோட்டையைப் பெரிதும் வலுப்படுத்தியிருக்கின்றான். சிலர் அவன் பித்தனானான் என்று கூறுகின்றனர். அவனைக் குறைவாய் வெறுக்கின்ற வேறு சிலர், அதனைத் துணிவுடை வெறியென மொழிகின்றனர். ஆயின், ஒன்று மட்டும் உறுதி: அவன் தன்னடக்கத்தை இழந்தான்!

þÿAll rights reserved. ª¿. •¿°

செயல்கள் இயற்கைக்கு முரணிய தொல்லைகளையே விளைவிக்கின்றன. நோயுற்ற மனம் தன் மறை செயல்களைத் தன் செவிகேளாத் தலையணை களிடமே வெளியிடுகின்றது. அவருக்கு இப்பொழுது இன்றியமையாது வேண்டுபவர் மருத்துவரல்லர்; சமய குரவர்! இறைவா! இறைவா, எம்மைப் பொறுத்தருள்க! (**செவிலி**யை நோக்கி) அவர்பால் கருத்தாயிரு. கேடுபயக்கும் பொருள்களை அகற்றி விடு. தொடர்ந்து விழிப்பாயிரு. நான் வருகின்றேன். என் மனத்தைப் பின்னி விழிகளை வியப்புறச் செய்துவிட்டார் அவர். நான் எண்ணுகின்றேன்; ஆயின், பேசத் துணியேன்!

செவிலி : வணக்கம், மருத்துவரே!

(மருத்துவர் செல்கின்றார்)

## காட்சி : 2

(**டன்சினேன்** கோட்டைக்கருகில் அமைந்த புறநகர்ப்பகுதி. முழவுகள் முழங்குகின்றன. கொடிகள் பறக்கின்றன. **மென்டைத் கெய்த்னெஸ், ஆங்கஸ், லென்னக்ஸ்** ஆகியோருடன் படையணியினரும் இருக்கின்றனர்)

மென்டைத்: மால்கம், அவர் மாமன் சீவர்ட், மெக்டஃப் ஆகியோர் தலைமையில் ஆங்கிலேயர் படை, அண்மையிலேயே இருக்கின்றது. பழிதீர்க்கும் பெருந்தீ அவர்கள் உள்ளத்துள் பரவி எரிகின்றது.

þÿAll rights reserved. ª¿. •¿°

மருத்துவர் : நன்று, நன்று, நன்று...

செவிலி : இது நலமுற நான் இறைவனை இறைஞ்சு கின்றேன்.

மருத்துவர் : என் திறனையும் மீறியது இந்நோய்! எனினும், உறக்கத்தில் நடப்பாரை நானறிவேன். அவர்கள் திருத்தூய்மையராய் தம் பாயலிலேயே இறந்திருக் கின்றனர்.

மெ.பெருமாட்டி : (முன்னர் நடந்த நிகழ்ச்சிகளை மீண்டும் நினைவுகூர்கின்றாள்) உங்கள் கைகளைக் கழுவுங் கள். இரவில் அணியும் ஆடையை அணியுங்கள். வெளிறிய முகத்தோற்றம் வேண்டா! நான் மீண்டும் கூறுகின்றேன்; பேங்கோ புதையுண்டான். கல்லறை யினின்று அவன் எழான்!

மருத்துவர் : (உண்மை தோன்ற) ஓ! உண்மை இதுவோ?

மெ.பெருமாட்டி : பாயல் செல்வோம், பாயல் செல்வோம். வாயிற் கதவை எவரோ தட்டுகின்றார். வாருங்கள், வாருங்கள், வாருங்கள். உங்கள் கையைக் கொடுங் கள். செய்ததை மாற்றுதல் இயலாது! பாயலுக்கு, பாயலுக்கு, பாயலுக்கு!

(செல்கின்றாள்)

மருத்துவர் : இப்பொழுது அவர் பாயலுக்குச் செல்வாரா?

செவிலி : நேரே!

மருத்துவர் : வெறுப்பூட்டும் முணுமுணுப்புச் சொற்கள் நாடு முழுதும் பரவுகின்றன. இயற்கைக்கு முரணிய

þÿAll rights reserved. ª¿. •¿°

நம் ஆட்சியை எதிர்த்தற்கு எவருமிலர் என்பதை நாம் அறிவோம். பின்னர் ஏன் அச்சம்? எனினும், அந்த முதியவனுக்கு அவ்வளவு குருதி இருந்ததை எவரே எண்ணியிருப்பார்?

மருத்துவர் : அதைச் செவிமடுத்தாயா!

மெ.பெருமாட்டி : அந்த ஃபைஃப் பெருமகனுக்கு மனைவி ஒருத்தி இருந்தாள். இப்பொழுது அவள் எங்கே? (கைகளைத் துடைத்துக் கொள்கின்றாள்) என்ன, இக்கைகளைத் தூய்மையுறச்செய்தலே இயலாதா? (விருந்து மண்டப நிகழ்ச்சிகளை நினைவு கூர்கின்றாள்) அவ்வாறு செய்தல் வேண்டாம் பெரும. அவ்வாறு செய்தல் வேண்டாம். அச்சத்தால் அனைத்தையும் பாழ் செய்கின்றீர்கள்!

மருத்துவர் : செல், செல்! அறியத் தகாதனவற்றை நீ அறிந்தாய்.

செவிலி : கூறத்தகாதனவற்றை அவர் கூறினார். அது உண்மை. அவர் அறிவதை இறைவனே அறிவார்!

மெ.பெருமாட்டி : (கையை மூக்கினருகே கொணர்கின்றாள்) குருதி மணம் குறைந்திலது. அரேபிய நாட்டு நறுமணப் பொருள்கள் இச்சிறு கை மணத்திற்கு ஈடாகா! ஓ! ஓ! ஓ!

மருத்துவர் : எத்தகு மிகுவிருப்புப் பெருமூச்சு? அவர் நெஞ்சத்தில் பளு மிகுந்து போயிற்று.

செவிலி : அவர் அரசித் தகுதி அனைத்தும் எனக்குக் கிடைக்கினும் என் மார்பினுள் அத்தகு நெஞ்சம் இருத்தலை நான் விரும்பேன்.

þÿAll rights reserved. ª¿. •¿°

செவிலி : அது அவர் பாயலருகிலிருந்த விளக்கு. அங்கு அது தொடர்ந்து எரிந்த வண்ணமே இருக்கும். அது அவர் கட்டளை.

மருத்துவர் : பார்! அவர் விழிகள், திறந்திருக்கின்றன!

செவிலி : ஆம்! ஆயின், அவற்றின் புலனுணர்வு மூடியிருக்கின்றது.

மருத்துவர் : இப்பொழுது அவர் என்ன செய்கின்றார்? அவர் தம் கைகளை எவ்வாறு துடைக்கின்றார் பார்!

செவிலி : தம் கைகளைக் கழுவுதல் போன்ற பழக்கம். அவர் கால் மணிப் பொழுது இவ்வாறு செய்தலை நான் கண்ணுற்றிருக்கின்றேன்.

மெ.பெருமாட்டி : இன்னும் ஒரு கறை!

மருத்துவர் : கேள்! அவர் பேசுகின்றார். என் நினைவை உறுதி செய்தற்கு அவர் கூறுவனவற்றைக் குறித்துக்கொள் கின்றேன்.

மெ.பெருமாட்டி : பழிமிகு கறையே! வெளியே வா! நான் கூறுகின்றேன்; வெளியே வா! (டங்கன் கொலை யுண்ட இரவன்று தான் மணியடித்ததை அவள் நினைவுகூர்கின்றாள்) ஒன்று. இரண்டு. அதைச் செய்தற்கு இதுவே வேளை. (அவள் நடுங்கு கின்றாள்) அளறு இருண்டது. (முன்னர்த் தன் கணவனிடம் உரையாடியவற்றை நினைவுகூர் கின்றாள்) என் பெரும, நீங்கள் கட்டுப்பாட்டைக் கடைப்பிடித்தல் வேண்டும். மறவனுக்கு அச்சமா?

þÿAll rights reserved. ª¿. •¿°

அணிகின்றார்; தம் நிலைப்பேழையைத் திறக்கின்றார்; எழுதுதாள் எடுக்கின்றார்; மடிக்கின்றார்; அதில் எழுதுகின்றார்; முத்திரையிடுகின்றார். பின்னர் மீண்டும் பாயலுக்குச் செல்கின்றார். இவை அனைத்தையும் உறங்கிய வண்ணமே செய்கின்றார்!

மருத்துவர் : இயற்கைக்குப் பெரிதும் முரண். ஒரு திறம் உறங்குதல்; பிறிதொரு திறம் விழித்த நிலையில் செய்தல்போல் செயலாற்றுதல்! அமைதியற்ற இந்த உறக்கத்தில் நடத்தலையும் பிற செயல்களையும் செய்கின்ற அவர், எவ்வேளையிலேனும் எதனையும் கூறக்கேட்டனையா?

செவிலி : ஐயன்மீர்! அவர் கூறியனவற்றை நான் கூறேன்.

மருத்துவர் : நீ எனக்குக் கூறலாம். என்னிடம் கூறுதலே முறை.

செவிலி : நான் கூறுதலை உறுதி செய்யும் சான்றுரையாளர் எவரும் இல்லாத உம்மிடமோ வேறு எவரிடமுமோ நான் கூறேன்.

(மெக்பெத் பெருமாட்டி மெழுகுவத்தி விளக்குடன் வருகின்றாள்)

இதோ, அவர் வருகின்றார். இவ்வாறு செய்தலே அவர் இயல்பு. என் உயிர்மேல் உறுதி. அவர் நீண்ட உறக்கத்திலிருக்கின்றார். மறைந்திருந்து கூர்ந்து நோக்குங்கள்.

மருத்துவர் : அவருக்கு அவ்விளக்கு எவ்வாறு கிட்டிற்று?

þÿAll rights reserved. ª¿. •¿°

மால்கம் : ஆண்மகன் ஒருவனுக்குரித்த உரை. வருக, மன்னர்பால் செல்வோம். நம் படை முன்னேற் பாட்டுடன் உளது; நாம் இங்கே விடைபெற்றுக் கொள்தல் நீங்கலாய் வேறு செய்ய வேண்டுவது ஒன்றுமிலது. மெக்பெத்தை உலுக்குதற்குக் காலம் கனிந்தது. மெக்பெத்தை அழித்துப் பழி முடிக்கும் கருவிகளாய் நாம் திகழ்வோம். எனவே, இவற்றால் மனநிறைவு கொள்க! இந்த இரவு நீண்டது; இதற்கு விடிவில்லை!

(செல்கின்றனர்)

# அங்கம் : 5

## காட்சி : 1

(***டன்சினேன்*** கோட்டையின் ஓர் அறையில் ***மருத்துவர், செவிலி*** இருவரும் உரையாடுகின்றனர்)

மருத்துவர் : உன்னுடன் ஈரிரவு கருத்துச் செலுத்தினேன், ஆயின், உன் கூற்றில் உண்மையிலதென உணர்கின்றேன். அரசியார், இவ்வாறு இறுதியாய் எப்பொழுது நடந்தார்?

செவிலி : மன்னர் போர்க்களம் சென்ற நாள் முதல் அவர் இவ்வாறு செய்கின்றார். படுக்கையினின்று எழுகின்றார்; இரவில் அணிகின்ற ஆடையை

þÿAll rights reserved. ª¿. •¿°

கங்கள் அனைவருமா? நீயிர் 'அனைவரும்' என்றா கூறினீர்? ஓ! அளற்றின் பருந்தே! அனைவரும்? என்ன?... என் அழகுக் கோழிக் குஞ்சுகளையும் அவற்றின் தாயையும் அது ஒரே வீச்சில் அழித்துப் போயிற்றோ?

மால்கம் : ஆண்மகன் ஒருவன் போன்று எதிர்த்து நிற்க!

மெக்டஃப் : அவ்வாறே செய்வேன். ஆயின், ஆண்மகன் ஒருவன் போன்று நான் உணர்ச்சியுடையனாதலும் வேண்டும்! எனக்குப் பெருமதிப்புடையனவாய் விளங்கியவற்றை என்னால் மறத்தல் இயலாது! வானகம் அதைக் கண்ணுற்றதா? கண்ணுற்றும் அவர்களைக் காத்தற்கு மனமின்றி வாளாவிருந்ததா? மெக்டஃப்! நீ தீவினையாளன்! உன் பொருட்டு அவர்கள் கொலையுண்டனர்! நான் பயனற்றவன். என் தீவினைக்கு அவர்கள் மடிந்தனர்; அவர்கள் தீவினைக்கன்று. அவர்கள் அமைதி பெறுவார்களாக!

மால்கம் : இது உமது வாளைக் கூர்மையாக்கட்டும்; துன்பம் சினமென மாறட்டும்! நெஞ்சம் மழுங்குதல் வேண்டாம்; சீறட்டும்!

மெக்டஃப் : ஓ! பெண் போன்று என் விழிகளில் நீர் பெருகலாம்; நா தற்புகழ்ச்சி புகலலாம். ஆயின், கனிவுடை வானகமே, காலந்தாழ்த்தாதே! ஸ்காட் லந்தின் இக்கொடியவனை என் முன் நேருக்கு நேர் நிறுத்து! வாள் நீள் தொலைவில் என் முன் நிறுத்து! அவன் தப்புவானெனில் வானகம் அவனையும் பொறுப்பதாக!

þÿAll rights reserved. ª¿. •¿°

பெருங்கொடுமைப் பேரொலியைச் செவிமடுக்க விருக்கின்றன.

மெக்டஃப் : ம்... நான் உய்த்துணர்கின்றேன்...

ரோஸ் : உமது கோட்டை வீழ்ந்தது - உமது மனைவியும் மக்களும் கொடுமையாய்க் கொலையுண்டனர். நிகழ்ந்தவற்றை நிகழ்ந்தவாறே உரைத்தலெனில், கொலையுண்டு குன்றெனக் குவிந்திருக்கும் உம் அன்பிற்குரியர்தம் பிணக்குவியலில் உம்முடலையும் சேர்க்கின்ற நிலை வரலாம்.

மால்கம் : ஓ, அருளுடை இறைவா! (**மெக்டஃப்**'பை நோக்கி) சோர்தல் ஏன்? தலையணி தாழ்த்தி விழியினை மறைத்தல் வேண்டா! உம் உள்ளக் குமுறலைக் கொட்டுக! பேசாத் துயரம் உள்ளமுடைக்கும்.

மெக்டஃப் : என் குழந்தையருமா?

ரோஸ் : மனைவி, மக்கள், ஏவலர், காணப்பெற்றார் அனைவரும்!

மெக்டஃப் : நான் அங்கிருந்து வெளியேறினேன். என் மனைவியும் கொலையுண்டாளா?

ரோஸ் : அவ்வாறே நான் கூறினேன்.

மால்கம் : ஆறுதல் கொள்க! இறப்பன்ன துன்பத்தைக் குணப்படுத்தும் மருந்தென பெரும்பழி முடிப்போம்!

மெக்டஃப் : (**மால்கம்** பக்கம் நோக்கி) அவனுக்கு மக்கள் இல்லை. (**ரோஸை** நோக்கி) என் அழகுப் பெட்ட

þÿAll rights reserved. ª¿. •¿°

சென்றதைக் கண்ணுற்றதால் இது மெய்யென உணர்கின்றேன். இப்பொழுது எமக்கு உமது உதவி தேவை. உமது தோற்றங்காணின் ஸ்காட்லந்தில் உறுபடை உருவாகும். ஒன்னலன் இழைத்த இன்னலைக் களைதற்குப் பெண்டிரெலாம் வாளெடுப்பர்!

மால்கம் : அவர்கள் ஆறுதல் கொள்வார்களாக! நாம் அங்குச் செல்கின்றோம். பெருந்தன்மைமிக்க இங்கிலாந்தின் எட்வர்ட், நல்லவர் சீவர்ட்'டையும் பதினாயிரவரையும் நமக்குத் துணையாய் அனுப்புதற்கு இணங்கியிருக்கின்றார். இவர்களினும் செயலறிவும் போர்த்திறமுமிக்கார் வேறெவரும் கிறித்துவ உலகில் இலர்!

ரோஸ் : உமது மகிழ்வுரை போன்றே நானும் கூற விரும்புகின்றேன். ஆயின், நான் கொணர்ந்திருக்கும் செய்தி, ஓலமிடும் பாலைக் காற்றுக்கு மட்டுமே உரியது. அங்கே எவரும் அதனைக் கேளார்.

மெக்டஃப் : அவை எவை குறித்தன? பொது நிகழ்வுகளா அன்றித் தனியொருவர் துன்பமா?

ரோஸ் : நேர்மைத் திறமுடையார் எவரும் பேரிடர் இதனைப் பகிர்வு கொள்ளத் தவறாரெனினும் இது உம்மொருவருக்கே உரியது.

மெக்டஃப் : எனக்குரியதெனின் என்னிடம் மறைத்தல் வேண்டாம். விரைந்து கூறுக!

ரோஸ் : உமது செவிகள் எக்காலும் என் நாவை வெறுக்கட்டும். அவை இதுகாறும் செவிமடுத்திராப்

þÿAll rights reserved. ª¿. •¿°

யாரென வினவுவார் எவருமிலர். நல்லவர் வாழ் நாள், அவர் குல்லாய் மலரினும் குறைந்தது. காலம் வருமுன்னரே கடுகி மடிகின்றனர்.

மெக்டஃப் : நுணுகி அறியப்பெற்றிருக்கின்றன; அத்தனையும் உண்மை.

மால்கம் : புதிய துன்பம் என்ன?

ரோஸ் : ஒருமணிப் பொழுதுக்கு முன்னர் நடந்தது காலங் கடந்தது. ஒவ்வொரு நொடியும் புதியன நடைபெறு கின்றன.

மெக்டஃப் : என் துணைவி எவ்வாறு இருக்கின்றாள்?

ரோஸ் : நலம்...

மெக்டஃப் : என் குழந்தைகள் அனைவரும்?...

ரோஸ் : அவர்களும் நலம்...

மெக்டஃப் : அந்தக் கொடுங்கோலன் அவர்கள் அமைதியை அழிக்கவில்லையா!

ரோஸ் : இல்லை. நான் அவர்களை விட்டு வருங்கால் அவர்கள் நலமாகவே இருந்தனர்...

மெக்டஃப் : உரைப்பதைக் குறைக்காதீர்! நிலைமை எவ்வாறு இருக்கின்றது?

ரோஸ் : உள்ளத்தைப் பிழிந்தெடுக்கும் துன்பச் செய்தி கூற நான் இங்குப் புறப்படுங்கால், மதிப்புமிக்கார் பலர் படைக்கலங்கள் ஏந்தினர் என அறிந்தேன். அக்கொடுங்கோலன் படைகள் அணிவகுத்துச்

þÿAll rights reserved. ª¿. •¿°

குணப்படுத்தும் இவ்வருங் கொடைத்திறத்தை அவர் தமக்குப்பின் அரசுரிமை ஏற்பார்க்கு வழங்குவா ரெனக் கூறுகின்றனர். இச்சிறப்புமிகு ஆற்றலுடன் அவருக்கு இறையருள் பொருந்திய வருவதுரைக்கும் பேராற்றலும் உண்டு. அவர்தம் ஆட்சி, இறைப்பேறு பெற்றது. அவர் சால்புநிறைச் சான்றோர்.

(ரோஸ் வருகின்றார்)

மெக்டஃப் : இதோ! வருகின்றவர் யாரெனக் காண்க.

மால்கம் : *(அவர் அணிந்திருக்கும் உடைகளைப் பார்த்து)* நம் நாட்டினர். ஆயின், இவரை நான் அறியேன்.

மெக்டஃப் : இவர் என் அன்பார்ந்த உறவினர். இங்கு வந்ததற்கு மகிழ்ச்சி.

மால்கம் : இவரை இப்பொழுது நான் நினைவுகூர்கின்றேன். நாம் அயலாராய் இருத்தற்குரிய நிலையை நல்லிறைவன் விரைவில் அகற்றுவாராக!

ரோஸ் : அவ்வாறே ஆகுக.

மெக்டஃப் : ஸ்காட்லந்து இருந்தவாறே இருக்கின்றதா?

ரோஸ் : ஐயகோ! அது இரங்குதற்குரிய நாடு. அது தன்னையறியவே அஞ்சுகின்றது. அதனை நம் தாய் நாடெனல் இயலாது. அது நம் கல்லறை. அறியாரே முறுவலிப்பர். காற்றைக் கிழிக்கின்ற பெருமூச்சும் புலம்பலும் ஓலமும் எவர் செவியிலும் விழவில்லை! வன்செயலும் கொடுந்துயரும் நாள்தோறும் நடக் கின்ற நலிவுடைக் காட்சிகளாயின. மாண்டவர்

þÿAll rights reserved. ª¿. •¿°

மால்கம் : நன்று; மற்றவை பின்னர். (மருத்துவர் பக்கம் நோக்கி) மன்னர் வருகின்றாரா என நான் அறிதல் கூடுமோ?

மருத்துவர் : ஆம், ஐயனே! துன்புறும் மக்கள் வெள்ளம், குணம் பெறுதற்கு அவர்பால் திரண்டிருக்கின்றது. மருத்துவத் திறன்களையே எதிர்த்து எள்ளுவன அந்நோய்கள். ஆயின், இறைவன் அவர் திருக் கைக்கு அளித்திருக்கும் அருட்கொடையால் தொட்ட பின்னர் அவை குணம்பெறுகின்றன.

மால்கம் : நன்றி, மருத்துவரே!

(மருத்துவர் செல்கின்றார்)

மெக்டஃப் : என்ன நோய்பற்றி அவர் குறிப்பிடுகின்றார்?

மால்கம் : அதன் பெயர் 'அரசர் தீமை'. தெய்வத்தன்மை பொருந்திய பேரருட் கொடை பெற்றவர் இம் மன்னர்: நான் இங்கிலாந்து வந்த நாள்முதல், அவர் அதனைப் பயன்படுத்துதலைப் பன்முறை பார்த்திருக் கின்றேன். அதன் மறைபொருளை வானுலகினரும் அவருமே அறிவர். முன்னர் அறிந்திரா நோய்களால் பிணியுற்ற மன்பதையின் மம்மர் அறுக்கும் மருந்தென விளங்குகின்றது அவர்தம் ஆற்றல். புடைத்து நிற்கும் பெருவீக்கமும் குருதி வடியும் வெம்புண்ணும் காண்பாரை உருக வைக்கும்; அறுவை மருத்துவர்களை நம்பிக்கை இழக்கச் செய்யும். தொழுகின்ற வேளை, அவர் நோயுற்றார் கழுத்தில் ஒரு பொற்காசை அணிவிக்கின்றார்.

þÿAll rights reserved. ª¿. •¿°

நம்புதலைத் தடுத்து ஒதுக்கிற்று. ஆயின், இறைவனே நம் இருவர்க்கும் சான்றானார். இனி நீயிரே எனக்கு வழிகாட்டுவீராக! என்னையே நான் இழித்துரைத்த சொற்களை நான் மீட்டுக் கொள்கின்றேன். குறையுங் கறையும் என்பாலுளவெனக் கூறியதை நான் விட்டொழிக்கின்றேன். அவை என் இயல்புக்குப் புறம்பானவை. நான் எப்பெண்ணையும் அறிகிலேன்; சொல் தவறியவனுமல்லேன். என் உரிமையைப் பெறுதற்கே விரும்பினேன். எவ்வேளையிலும் என் உறுதிமிகு நம்பிக்கையை இழந்தேனில்லை. ஒரு பேயினை மற்றொரு பேயினுக்குக் காட்டிக் கொடேன். வாழ்வினைப் போன்று மெய்ம்மையை நம்புகின்றவன் நான். இப்பொழுது எனக்கெதிராய் நானே கூறியதுதான் என் முதல் பொய். இந்த மெய்யினன் இனி உமக்குரியவன். என் இரங்கற்குரிய நாடு உமது ஆணையை ஏற்கும். உண்மையைக் கூறின், நீயிர் இங்கு வருதற்கு முன்னர்தான் முழுப் படைக் கலங்களுடன் முதியவர் சீவர்ட், பதினாயிரம் படைஞருடன் போர்முனை நோக்கிச் செல்ல முனைந்து நிற்கின்றார். இப்பொழுது நாம் இருவரும் இணைந்து செல்வோம். நம் நேரிய நோக்கத்திற் கேற்ப, நற்பண்புகளின் எதிர்காலம் அமைவதாக! ஏன் நீயிர் அமைதியானீர்!

மெக்டஃப் : மகிழ்வையும் மகிழ்வின்மையையும் ஒன்றிணைத்தல் எளிதன்று!

(மருத்துவர் வருகின்றார்)



þÿAll rights reserved. ª¿. •¿°

மெக்டஃப் : ஓ, ஸ்காட்லந்தே! ஸ்காட்லந்தே!

மால்கம் : இவ்வியல்புகளுடையான் ஆளத் தகுந்தவனெனின், கூறுக! நான் எத்தன்மையினன் எனக் கூறினேனோ, அத்தன்மையினனே நான்.

மெக்டஃப் : ஆளத் தகுந்தவன்! இல்லை, வாழ்தல் கூடாது! ஓ, துயர் பொங்கும் நாடே! உரிமையற்ற கொடுங் கோலன் செங்குருதிச் செங்கோலேந்தலுற்றான். இனி என்று நீ மதிப்புநிறை நாள்களைக் காணப் போகின்றாய்? அரியணைக்குரியவன் தன் முன்னோரை முனிந்து பழிகூறி, தன்னையும் இழித்துரைத்து நிற்கின்றான். (**மால்கம்'**மை நோக்கி) உமது அரச தந்தை சால்புடைச் சான்றோர். உம்மைப்பெற்ற அரசி காலூன்றி நிற்றலினும், பெரும்பொழுது முழந்தாளிட்டு இறைஞ்சிய வண்ணம் இருக்கின்றார். அவர் நாள்தோறும் வாழ்ந்து சாகின்றார். சென்று வருகின்றேன். உம்மை நீயிரே கூறிய தீயன என்னை ஸ்காட்லந்தினின்று நாடு கடத்தின! ஓ, என் நெஞ்சே! நம்பிக்கை இங்கேயே செத்துவிட்டது!

மால்கம் : (உணர்ச்சியுடன்) மெக்டஃப், உமது நேர்மைக்குச் சான்றாயமைந்த இவ்வுயரிய உணர்வுகள் என் உயிருணர்வில் படிந்திருந்த தீய ஐயங்கள் அனைத்தை யும் அகற்றின; உமது வாய்மையும் உயர் பண்பும் என் உள்ளத்தை நிறைத்தன. அக்கொடியன் மெக்பெத், சூழ்ச்சிகள் பலவால் என்னை ஏமாற்றித் தன் ஆணைக்குள் அடக்க முயன்றான். ஆயினும், என் அடக்க அறிவு, விரைந்து எதனையும் எளிதில்

þÿAll rights reserved. ª¿. •¿°

நல்லார், பற்றுடையார் அனைவர்க்கும் எதிராய் நேர்மை பிறழ்ந்து போர் தொடுப்பேன். அவர்கள் செல்வங் கருதி அவர்களை அழித்தொழிப்பேன்.

மெக்டஃப் : இப்பேரவா பேராழமிக்கது. முதுவேனிற் கால மன்ன குறைநாள் காமத்தினும் இது உறுதி செறிந்து ஊடுருவிப் பாய்ந்து நிற்கும் வேரனையது. இது வெட்டுண்டு மடிந்த நம் வேந்தர் பலருக்குக் கொடுவாளென அமைந்தது. எனினும் அஞ்சுதல் வேண்டாம். நீயிர் துய்த்து மகிழ்தற்கு வேண்டுகின்ற குன்றாப் பெருஞ்செல்வம் ஸ்காட்லந்தில் உளது. அவற்றை உமது உடைமைகளே வழங்கும். மற்றப் பண்புகளின்பால் ஒப்பிடின் இவை மிகச் சிறுமையின.

மால்கம் : ஆயினும் எனக்கு எதுவுமிலது. மன்னனாதற்கு இன்றியமையாப் பண்புநலன்கள் - நடுவுநிலைமை, வாய்மை, அடக்கமுடைமை, ஊக்கமுடைமை, சான்றாண்மை, ஆள்வினையுடைமை, அருளுடைமை, பணிவுடை-மை, கடமை, பொறையுடைமை, துணிவுடைமை, நிலைத்தன்மை - இவற்றை நான் சுவைத்தறியேன்! ஆயின், பல்திறத்துக் குற்றங்களில் அழுந்தி அழுந்தித் திளைத்திருக்கின்றேன். இல்லை! ஆளும் உரிமை எனக்குக் கிட்டுமாயின், நல்லிணக்கம் என்னும் நறும்பாலை அழிவுறும் அளற்றுக்கு அனுப்பி வைப்பேன்; அமைதியை அயர்வின்றி அழிப்பேன்; இவ்வுலகின் ஒற்றுமையைக் குலைத்துப் பாழ் செய்வேன்!

þÿAll rights reserved. ª¿. •¿°

மனைவியர், உமது பெண் மக்கள், உம் மணமுடித்த பெண்டிர், உமது கன்னியர் அனைவராலும் என் சிற்றின்ப வேட்கைத் தொட்டியை நிரப்புதல் இயலாது! பொங்கிவரும் என் பெருவிருப்புப் பேரோடை, தடைபோடும் கரைகளை உடைத்தெறியும். (தன்னைச் சுட்டி) இவனினும் மெக்பெத் ஆள்தலே சிறப்பு.

மெக்டஃப் : கட்டற்ற காமம் ஒருவனைக் கொடுங்கோலனாய் மாற்றும். அது மன்னர் பலரை வீழ்த்தி அவர்கள் மணிமுடிகளை இழக்கச் செய்திருக்கின்றது. ஆயின், உமக்குரியதைப் பெறுதற்கு நீயிர் அஞ்ச வேண்டுவதில்லை. தூயர் போல் இருந்தவாறே மறைந்தொழுகி இன்பந் துய்த்தற்கு வாய்ப்புகள் பலவுள. செய்கின்ற ஒவ்வாச் செயல்களை மறைத்திடவும் இயலும். தாமாய் விரும்பி வரும் பெருமாட்டியர் நம்மிடையே பலருளர். தம்மையே உரிமையாய்க் கொடுத்தற்கு முன்வரும் பெண்டிர்தம் எண்ணிக்கை உமது பசியினும் பெரிது.

மால்கம் : இவற்றுடன் என் தீநெறிகளுள் பிறிதொன்று அளவிறந்த வேணவா. நான் மன்னனானேனெனில், நிலமனைத்தையும் என்னுடைமையாக்குதற்குப் பெருமக்கள் தலைகளைக் கொய்வேன். இவன் அணிகள்; அவன் இல்லம் என அனைத்தையுங் கவர்வேன். எவ்வளவு மிகுதியாய்ப் பெறுகின்றேனோ, அது,. இன்னும் வேண்டும் என்னும் என் பசியுணர்வைத் தூண்டிப் பெருக்கும். இன்னும்,

þÿAll rights reserved. ª¿. •¿°

பெருந்தன்மைமிக்கார் - இங்கிலாந்து மன்னர், பல்லாயிரவர் போர்க்களம் புகுதற்கு இசைந்திருக் கின்றார். ஆயின், இதற்கென அக்கொடுங்கோலன் தலையினை என் காலடியில் கிடத்திய பின்னர் - அன்றி என் வாள் முனையில் அணிவித்த பின்னர், இரங்கற்குரிய என் நாட்டில் தீவினைகள் முன்னினும் பன்மடங்காய்ப் பெருகும். புதிய மன்னன் ஆட்சியின் கீழ் அது இன்னும் பல்லாற்றானும் இன்னலுறும்.

மெக்டஃ்ப் : *யார் அவன்?*

மால்கம் : நான் என்னையே குறிப்பிடுகின்றேன். நேர்மைக் கேட்டுத் தீநெறிகள் என்னுள்ளே ஒட்டியிருக்கின்றன என நானறிவேன். இவை மலருங்கால் கரிய மெக்பெத் வெண்பனியெனத் தூயனாய்த் தோன்று வான். என் எல்லையற்ற கொடுஞ்செயல்களொடு ஒப்பிடுங்கால் அந்த இரங்கற்குரிய நாடு, மெக்பெத்தை ஓர் ஆட்டுக்குட்டியெனக் கூறும்.

மெக்டஃ்ப் : *அச்சுறுத்தும் அளற்றினின்று வருகின்ற வன் பேயும், பேய்த்தன்மை மிக்குடைய மெக்பெத்தை மீறிவிடல் இயலாது!*

மால்கம் : அவன் கொலை வெறியன், காமுகன், பேரவா வினன், வஞ்சனையாளன், ஏமாற்றுவோன், முருடன் கன்னெஞ்சினன் - இன்னும் பெயருடைத்த தீவினை கள் அனைத்தையும் சுவைக்கும் இயல்பினன் என்பதை நான் ஏற்கின்றேன். ஆயின், என் சிற்றின்ப நுகர்ச்சிக்கு எல்லையே இல்லை. உமது

þÿAll rights reserved. ª¿. •¿°

பிணைக்கப்பெற்ற பேருடைமைகள் உமது துணைவியையும் குழந்தையையும் ஏன் விட்டு வந்தீர்? ஏனில்லை பிரியாவிடை? அன்புகூர்க! என் ஐயுறவால் உமக்கு இழிவு செய்ய நான் விரும்பேன். அவை என் தற்காப்புக்கே. என் எண்ணம் எதுவாயினும் நீயிர் மேதகைமையினராகவே இருத்தல் கூடும்.

மெக்டஃப் : *(உணர்ச்சி பொங்க)* இரங்கற்குரிய என் இனிய நாடே, குருதிப்பெருக்கெடுத்தோடுக! குருதிப்பெருக்கெடுத்தோடுக! அழிக்கின்ற கொடுங்கோன்மை அடித்தளம் அமைக்கின்றது. அதனைத் தடுத்து நிறுத்த நல்லதனுக்குத் துணிவில்லை! தீதுறப் பெற்ற உன் மணிமுடியை அணிந்து கொள்! விதிமுறை உன் பக்கம்! *(**மால்கம்**'மை நோக்கி)* பெரும, விடை பெறுகின்றேன். அக்கொடுங்கோலன் ஆட்சி நிலங்களும் செல்வங் கொழிக்கும் கிழக்கும் பேறெனப் பெறினும் நீயிர் நினைக்கும் வண்ணம் நான் கொடியனாகேன்!

மால்கம் : சினமுறச் செய்தேன் என எண்ணல் வேண்டா! உம்மை நான் முழுமையாய் நம்பவில்லையென நான் கூறேன். அடிமைப் பளுவால் அழுந்துகின்றது நம் நாடெனக் கருதுகின்றேன் நான். அது அழுகின்றது. அது குருதி கொட்டுகின்றது; ஒவ்வொரு நாள் தொடக்கத்திலும் அதன் புண்களில் ஒரு புதிய பெருவெட்டு வெட்டப்படுகின்றது. எனினும், என் உரிமையின் பொருட்டு எண்ணிறந்தோர் போருடற்ற உறுதி பூண்டிருக்கின்றனர் என எண்ணுகின்றேன்.

þÿAll rights reserved. ª¿. •¿°

நான் இயன்றதைச் செவ்விதின் செய்வேன். நீயிர் கூறியன மெய்யாயிருக்கலாம். இக்கொடுங்கோலன் - இவன் பெயர் கூறிடின் நம் நா முழுதும் கொப்புளங்கள் பொரிகின்றன. இவன் ஒருகால் நேர்மைத் திறத்தினனாய் விளங்கியவன். நீயிர் அவனைப் பெரிதும் விரும்பினீர். அவன் இன்னும் உம்மைத் தீண்டிலன். நான் இளைஞன். ஆயினும், என்னை நீயிர் காட்டிக் கொடுக்கின், அவன் வழி சில நன்மைகள் பெறலாம். செற்றமிகு இறைவன்றன் சீற்றத்தைத் தணித்தற்கு வலுவற்ற - இரங்கற்குரிய - குற்றமற்ற ஆட்டுக்குட்டியை வேள்வியிடல் அறிவார்ந்த செயலன்றே?

மெக்டஃப் : நான் வஞ்சகனல்லேன்!

மால்கம் : ஆயின், மெக்பெத் அவ்வியல்பினன்! உயர்வுடை நன்னெறியும், மன்னன் ஏற்றும் பளு பொறாது பணியுமாயின் அது பொறுத்தற்குரியதே. என்னை நீயிர் பொறுத்திடல் வேண்டும். நீயிர் எத்தன்மையின ரென நான் எண்ணியிருக்கும் எண்ணத்தை மாற்றுதல் இயலாது! வான்தூதினும் பேரொளிமிக்கது தோன்றி னும் வான்தூதின் ஒளிர்வு குன்றாது. கொடியன வெல்லாம் நல்லனவாய்த் தோன்ற முயல்கின்றன. எனினும், நல்லதன் தனித்தன்மை மாறுவதில்லை!

மெக்டஃப் : நான் நம்பிக்கை இழந்தேன்!

மால்கம் : ஒருகால் அதன் பொருட்டே நான் ஐயுறுகின்றேன் போலும். அக்கொடுஞ் சூழலில், அன்பால்

þÿAll rights reserved. ª¿. •¿°

கொலைஞன் 1 : முட்டையே! வஞ்சகச் சிறு குஞ்சே!

(குத்துவாளால் சிறுவனைக் குத்துகின்றான்)

மகன் : அன்னையே, அவன் என்னைக் குத்திவிட்டான்! ஓடுங்கள்! உங்களை வேண்டுகின்றேன்.

(மெக்டஃப் பெருமாட்டி, 'கொலை, கொலை' என அலறிய வண்ணம் ஓடுகின்றாள். கொலைஞர்கள் அவளைப் பின்தொடர்கின்றனர்)

## காட்சி : 3

(இங்கிலாந்து மன்னன் மாளிகைக்கு அருகில் மால்கம், மெக்டஃப் இருவரும் உரையாடுகின்றனர்)

மால்கம் : நிழல் தரும் தனிமையிடம் செல்வோம்; நம் துயரினை அழுது துடைப்போம்.

மெக்டஃப் : அதனினும், நம் பிறப்புரிமையின் பொருட்டு மதிப்புமிகு மனிதனெனப் படைக்கலமேந்திப் போர்க்களம் புகுதல் சாலச் சிறந்தது. நாள்தோறும் புதிய கைம்பெண்டிர் கதறியழுகின்றனர்; புகலில்லாப் புதியோர் புலம்புகின்றனர்; புதிய துன்பங்கள் வானுலகின் முகத்தில் அறைகின்றன. அது ஸ்காட்லந்தையெண்ணி - இரங்கிப் புலம்புகின்றது; அதன் துன்பங் கண்டு அழுகின்றது.

மால்கம் : நான் நம்புதற்கு நான் புலம்புவேன்; நான் அறிந்தவற்றை நான் நம்புவேன். தக்க காலம் வரின்,

þÿAll rights reserved. ª¿. •¿°

இடர் சூழ்ந்திருக்கின்றது. இந்த எளியன் அறிவுரையைச் செவிமடுப்பீராயின் இங்கிருந்து உடனே செல்க! உம் குழந்தைகளுடன் இவ்விடத்தினின்று அகல்க! உம்மை அச்சுறுத்துதல் கொடுமை மிக்கதெனினும், இவ்வாறு செய்யேனாயின், அது இதனினும் பெருங்கொடுமையினதாகிவிடும். கொடுமை சேய்மையில் இல்லை. இறைவன் உம்மைக் காப்பாராக! இன்னும் இங்கிருக்க எனக்குத் துணிவில்லை.

(தூதன் செல்கின்றான்)

மெக்டஃப் பெருமாட்டி : எங்கு நான் செல்வேன்? நான் தீதெதுவும் இழைத்திலேன். ஆயின், இப்பொழுது நினைவுகூர்கின்றேன்: நான் இந்நிலவுலகில் இருக்கின்றேன். இங்குத் தீயது செய்யின் ஓங்கு புகழ்; நல்லது செய்யின் கேடுறுத்தும் மடமை. பின்னர் ஏன் ‘நான் தீதெதுவும் இழைத்திலேன்’ எனப் பெண்மைத் தற்காப்புச் செய்தல் வேண்டும்?

(கொலைஞர்கள் வருகின்றனர்)

இவர்கள் யாவர்?

கொலைஞன் : உன் கணவன் எங்கே?

மெக்டஃப் பெருமாட்டி : சிறிதும் அருள் சுரக்கா இடந்தனில் உன்னைப் போன்றார் அவரைக் காணலாமெனக் கருதுகின்றேன்.

கொலைஞன் 1 : அவன் வஞ்சகன்!

மகன் : நீள்முடி முருடனே, நீ பொய் கூறுகின்றாய்!

þÿAll rights reserved. ª¿. •¿°

மகன் : அவ்வாறு செய்வோர் அனைவருமே வஞ்சகர்களா?

மெக்டஃப் பெருமாட்டி : அவ்வாறு செய்யும் இயல்பினர் ஒவ்வொருவரும் வஞ்சகரே. அத்தன்மையுடை யாரைத் தூக்கிலிட வேண்டும்.

மகன் : வசையும் பொய்யும் கூறுவோர் அனைவரையும் தூக்கிலிடத்தான் வேண்டுமா?

மெக்டஃப் பெருமாட்டி : ஒவ்வொருவரையும்!

மகன் : அவர்களைத் தூக்கலிடுவோர் யாவர்?

மெக்டஃப் பெருமாட்டி : நேர்மையாளர்கள்.

மகன் : அவ்வாறெனில் வசையும் பொய்யும் கூறுவோர் அனைவரும் அறிவிலியர். நேர்மையாளர்களை அடித்துத் தூக்கிலிடுதற்கு வசையும் பொய்யும் கூறுவோர் மிகுதியாய் இருக்கின்றனர்.

மெக்டஃப் பெருமாட்டி : இந்தச் சிறு குரங்கை இறைவனே காத்தல் வேண்டும். தந்தைக்கு நீ என்ன செய்வாய்?

மகன் : அவர் உண்மையில் இறந்திருந்தால் அவருக்காக நீங்கள் அழுதிருப்பீர்கள். நீங்கள் அழவில்லையாத லின், நான் புதிய தந்தையைப் பெறவிருக்கின்றேன் என்பதை அறிவேன்.

மெக்டஃப் பெருமாட்டி : பிதற்றல்! எவ்வாறு பேசுகின்றாய்?

(தூதன் ஒருவன் வருகின்றான்)

தூதன் : பெருமாட்டியாரே, வாழ்த்துகள்! நீயிர் என்னை அறியீர். ஆயின் உம்மை நான் அறிவேன். உம்மை

þÿAll rights reserved. ª¿. •¿°

மெக்டஃப் பெருமாட்டி : என்ன? புழுவுண்டு பறப்பாயா?

மகன் : எது கிடைக்கினும் அவை செய்வன போன்றே செய்வேன்.

மெக்டஃப் பெருமாட்டி : இரங்கற்குரிய பறவை. வலை, பறவைப் பசை, கண்ணிகள், கூண்டுகள் போன்ற வற்றுக்கு நீ அஞ்சாயா?

மகன் : நான் ஏன் அஞ்சுதல் வேண்டும் அன்னையே? இரங்கற்குரிய பறவைகள் பிடித்தற்கு அவர்கள் கண்ணிகளிடார். நீங்கள் எது கூறினும் என் தந்தை இறக்கவில்லை.

மெக்டஃப் பெருமாட்டி : ஆம், அவர் இறந்தார்! தந்தைக்கு இனி நீ என்ன செய்வாய்?

மகன் : அதனினும் கணவனுக்கு நீங்கள் என்ன செய்வீர்கள்?

மெக்டஃப் பெருமாட்டி : எச்சந்தையிலும் இருபது கணவர் களை என்னால் பெற இயலும்.

மகன் : அவ்வாறாயின், மறு விற்பனைக்கென அவர்களை வாங்குவீர்களா?

மெக்டஃப் பெருமாட்டி : நீ குழந்தையெனவே பேசுகின்றாய்; ஆயினும் அறிவுத்திறமுடன் பேசுகின்றாய்.

மகன் : அன்னையே, என் தந்தை வஞ்சகரா?

மெக்டஃப் பெருமாட்டி : ஆம்; அவர் வஞ்சகரே!

மகன் : வஞ்சகரெனில் என்ன?

மெக்டஃப் பெருமாட்டி : வசையும் பொய்யும் கூறுவாரே வஞ்சகர்.

þÿAll rights reserved. ª¿. •¿°

ரோஸ் : என் இனிய உறவினளே, உன் குமுறலைத் தணித்தலே நன்று. உன் துணைவன் பெருமை மிக்கவன்; அறிவார்ந்தவன்; நடுவுநிலை திறம்பா நேர்மையினன்; இற்றைச் சூழலை இனிது அறிந்தவன். இதனினும் விரித்துரைக்கத் துணியேன் நான். நாம் வஞ்சகராயிருப்பின் - அதை நாம் அறியாமற்போயின் அது நம் கொடிய காலமே. நாம் எது குறித்து அஞ்சுகின்றோம் என அறிதலின்றியே அஞ்சுகின்ற அச்சம், ஊரறியுரை பரப்புகின்றது. கொந்தளிக்கும் கடலில் புரள்கின்ற அலையென நாம் தத்தளிக்கின்றோம். இப்பொழுது நான் விடை பெறுகின்றேன். விரைவில் மீள்வேன். தொல்லைகள் ஓயலாம்; அன்றி இன்னும் பெருகலாம். என் அழகிய உறவினளே, என் வாழ்த்துகள்!

மெக்டஃப் பெருமாட்டி : (மகனைச் சுட்டி) இவனுக்குத் தந்தை இருந்தும் தந்தை இல்லை.

ரோஸ் : நான் இங்கு நெடும்பொழுது இருப்பேனாயின், பொங்கிப் பெருகும் என் உணர்ச்சி வெள்ளம் எனக்கு இழிவைக் கொணர்தலுடன் உனக்கும் இடுக்கண் விளைவிக்கும். நான் இப்பொழுதே செல்கின்றேன்.

(அவர் செல்கின்றார்)

மெக்டஃப் பெருமாட்டி : மகனே, உன் தந்தை இறந்தார். இனி நீ என்ன செய்வாய்?

மகன் : பறவைகள் போன்று வாழ்வேன் அன்னையே.

þÿAll rights reserved. ª¿. •¿°

## காட்சி : 2

(ஃபைஃப் நகரில் அமைந்திருக்கும் மெக்டஃப்'பின் கோட்டை. மெக்டஃப் பெருமாட்டி, அவள் மகன், ரோஸ் ஆகியோர் இருக்கின்றனர்)

மெக்டஃப் பெருமாட்டி : நாட்டினின்று ஓடுதற்கு அவர் என்ன செய்தார்?

ரோஸ் : பெருமாட்டி, நீ பொறுமையினளாய் இருத்தல் வேண்டும்.

மெக்டஃப் பெருமாட்டி : அவ்வாறில்லை அவர். அவர் ஓடிய செயல் அறிவற்றது. நம்மை வஞ்சகராக்குவன நம் செயல்களல்ல; நம் அச்சம்.

ரோஸ் : அது பேரறிவா பேரச்சமா என நீ அறியாய்.

மெக்டஃப் பெருமாட்டி : பேரறிவு? எங்கிருந்து ஓடினாரோ அங்கேயே அவர் மனைவியைப் பிரிதலா பேரறிவு? மக்களைப் பிரிதலா பேரறிவு? அவர் மாளிகைகள், பெற்ற விருதுகள் அனைத்தையும் துறந்து ஓடுதலா பேரறிவு? எம்பால் அன்பிலார் அவர். குடும்பத்தின் பால் இயல்பாய பற்றிலாதவர். கூட்டிலிருக்கின்ற தன் குஞ்சுகளை இரையாக்கிக் கொள்ளுதற்கு வருகின்றது ஆந்தையென அறிந்ததும், பறவைகளுள் மிகுசிறு பறவையும் அதனை எதிர்த்துப் போரிடத் துணி கின்றது. எல்லாம் அச்சம். அன்பினை அறியார் அவர். நாட்டினின்று ஓடுதல் அறிவுக்கு ஒவ்வாச் செயலாதலின் இதில் பேரறிவு இல்லை!

þÿAll rights reserved. ª¿. •¿°

மெக்பெத் : அவர்கள் பறக்கின்ற காற்றில் பரவட்டும் நோய்கள். அவர்களை நம்புவார் அனைவர்க்கும் பெரும்பழி வந்து சூழட்டும்! ஆ!... குதிரைக் குளம்பொலிகள் கேட்டனவே! சென்றோர் யாவர்?

லென்னக்ஸ் : இருவரோ மூவரோ இருக்கலாம் பெரும. மெக்டஃப் இங்கிலாந்துக்குத் தப்பிவிட்டான் என்பதை மன்னர்தமக்கு அறிவிக்க வந்தவர்கள் அவர்கள்.

மெக்பெத் : இங்கிலாந்துக்குத் தப்பிவிட்டானா?

லென்னக்ஸ் : ஆம், பெரும.

மெக்பெத் : காலமே! என் திட்டங்களில் நீ எனக்கு ஒரு படி முன்னரே சென்று விடுகின்றாய். செய்ய வேண்டுவன உடனே செய்யப்பெறின், அவை தீட்டிய திட்டங் களுக்கு ஈடுகொடுக்கும். இவ்வேளை முதல், என் மனம் நினைப்பதை என் கைகள் உடனே செய்து முடிக்கட்டும். இப்பொழுதே, செயல்களினால் என் எண்ணங்களுக்கு மணிமுடி சூட்ட, எண்ணுதல் வேண்டும்; எண்ணியாங்கு வினையினைத் திண்ணி தின் முடித்தல் வேண்டும். மெக்டஃப் கோட்டையை வியப்புறும் வண்ணம் கைப்பற்றுவேன். ஃபைஃப் கோட்டையைக் கைப்பற்றுவேன்; அவன் மனைவி, மக்கள், உறவினர்கள் அனைவரையும் கொல்வேன். முட்டாளைப் போன்று தற்புகழ்ச்சி பேசேன்! என் சினம் தணிவதற்குள் இதனை நான் செய்து முடிப்பேன்! (**லென்னக்ஸ்'**ஸை நோக்கி) அத்தூதர்கள் எங்கே? என்னை அங்கே அழைத்துச் செல்வீர்!

(அவர்கள் செல்கின்றனர்)

—

þÿAll rights reserved. ª¿. •¿°

மாயக்காரி 1 : முடியுடை யரசே, முற்றும் உண்மை!
துடிப்புடைப் பெரும, துஞ்சுதல் ஏனோ?
என்னுடன் பிறப்பினர் இருவரும் வருக;
மன்னன் மெக்பெத் மாற்றங் கண்டான்!
ஊக்கங் குன்றினான்; உணர்வுங் கொன்றான்;
ஆக்கம் நல்கிட அருவினை முடிப்போம்!
இன்னல் நீக்கி இன்னொலி முழங்கக்
கன்னல் காற்றைக் கட்டி யழைப்பேன்!
அமைவுற இனிதாய் ஆடுவோம் வருக!
குமைகிற அரசன் குன்றென உயர்ந்து
வருகை தந்தது மகிழ்வுறு பரிசென
இருகை நீட்டி இறைஞ்சுவான் நமையே!

**(இசை. மாயக்காரிகள் வியப்பூட்டும் வண்ணம் ஆடி மறைகின்றனர்)**

மெக்பெத் : எங்கே அவர்கள்? மறைந்துபோயினரா? இப் பெருங்கேடு விளைவிக்குங் காலம், என்றென்றும் வெறுக்கத்தக்கதாய் நாள்காட்டியில் குறிக்கப் படட்டும்! (அழைக்கின்றான்) வெளியில் இருப்பவர் யார்? வருக உள்ளே!

லென்னக்ஸ் : மேன்மைக்குரிய பெரும, அழைத்தீர்களா?

மெக்பெத் : அம்மாயக்காரிகளைப் பார்த்தீரா?

லென்னக்ஸ் : இல்லை, பெரும.

மெக்பெத் : அவர்கள் உம்மைக் கடந்து செல்லவில்லையா?

லென்னக்ஸ் : இல்லை, பெரும.

þÿAll rights reserved. ª¿. •¿°

(**மன்னர் எண்மர் உருவில் ஆவிகள்** உலா வருகின்றன. இறுதியாக வருகின்ற **பேங்கோவின் ஆவி** கையில் ஒரு கண்ணாடி ஏந்தி வருகின்றது)

மெக்பெத் : (**முதல் ஆவி**யை நோக்கி) நீயும் பேங்கோவின் ஆவியைப் போன்றே தோன்றுகின்றாய்! தாழ்ந்து போ! உன் மணிமுடி என் விழிகளைக் குருடாக்கு கின்றது. (**இரண்டாம் ஆவி**யை நோக்கி) உன் பொன்முடியின் கீழ் தொங்குகின்ற உன் தலைமயிர், முன்னதைப் போன்றே இருக்கின்றது. (**மூன்றாம் ஆவி**யை நோக்கி) இம்மூன்றாவதும் மற்றவற்றைப் போன்றே இருக்கின்றது. (**மாயக்காரிகள்** மூவரையும் நோக்கி) அருவருப்புமிக்க கிழவிகளே, இவற்றை ஏன் எனக்குக் காட்டுகின்றீர் ? (**நான்காம் ஆவி**யை நோக்கி) நான்காவது இல்லையா? என் கண்கள் உறுத்துகின்றன. (**ஆவி ஐந்து, ஆவி ஆறு** இரண்டும் கடந்து செல்கின்றன) இந்த வரிசைக்கு எல்லை இல்லையோ? (**ஏழாம் ஆவி** தோன்றுகின்றது) இன்னும் ஒன்று? ஏழாவதா? நான் அதனைக் காண மாட்டேன். (ஆயினும் அச்சத்துடன் அவன் அதனைக் காண்கின்றான்) இப்பொழுது கண்ணாடியை ஏந்திய வாறு எட்டாவது வருகின்றது. அது எனக்கு இன்னும் பலவற்றைக் காட்டுகின்றது. ஈரரசு மணிமுடியும் முச்செங்கோலும்! கொடுங் காட்சி! இப்பொழுது இது எனக்கு உண்மையெனத் தோன்றுகின்றது. குருதி யில் உறைந்து சிக்குண்ட தலைமயிருடன் பேங்கோ என்னை நோக்கிப் புன்முறுவல் பூக்கின்றான்; மற்ற மன்னர்களைச் சுட்டி அவர்கள் தன்னைச் சார்ந்தோ ரெனக் காட்டுகின்றான். என்ன? இது உண்மையா?

þÿAll rights reserved. ª¿. •¿°

மெக்பெத் : அது என்றுமே இயலாது! எவரால் கானையும் மரத்தையும் வேருடன் பிடுங்கிக்கொண்டு, நிலம் பெயர்ந்து நகருமாறு வற்புறுத்த இயலும்? இது மனநிறைவையளிக்கின்றது. நன்று! பெர்னாம் காடு எழுந்தாலன்றிப் புரட்சியாளர்க்கும் மாண்டு மீள் வார்க்கும் நான் என்றுமே அஞ்ச வேண்டுவதில்லை! மன்னன் மெக்பெத் நெடுங்காலம் வாழ்வான். இயற்கை நெறியால் அவன் முதுமை வந்தே மறைவான். எனினும், ஒன்றை அறியத் துடிக் கின்றேன். உன் ஆற்றல் அளவிறந்ததெனின் கூறெனக்கு! இந்த அரசை ஆள்கின்ற வாய்ப்புப் பேங்கோவின் மக்களுக்குளதோ?

மூவரும் : இன்னும் அறியும் இயல்பு வேண்டாம்!

மெக்பெத் : இதை மறுத்திடுக, மனநிறைவு கொள்வேன். அன்றேல், ஒரு பேராற்றலால் வசை கூறப்படுவாய்! கூறு எனக்கு!

(கொப்பரை அமிழத் தொடங்குகின்றது. கொம்பொலி.)

இக்கொப்பரை ஏன் அமிழத் தொடங்குகின்றது? என்ன ஒலி அது?

மாயக்காரி 1 : தோன்றுக!

மாயக்காரி 2 : தோன்றுக!

மாயக்காரி 3 : தோன்றுக!

மூவரும் : அவன்கண் தோன்றுவீர்; அவனுளம் உருக்குவீர்! நிழலென வருவீர்; நிறைவுடன் மறைவீர்!



þÿAll rights reserved. ª¿. •¿°

பெண்ணுக்குப் பிறந்த எவரும் மெக்பெத்திற்குத் தீங்கிழைத்தல் இயலாது!

(இரண்டாம் ஆவி செல்கின்றது)

மெக்பெத் : அவ்வாறெனின் பிழைத்துப் போ மெக்டஃப்! நான் ஏன் உனக்கு அஞ்சுதல் வேண்டும்? ஆயினும், ஊழினை உறுதி செய்ய இருமடங்கு உறுதி பூணுவேன். மெக்டஃப், நீ உயிர் வாழ்தல் கூடாது! அவ்வாறு செய்தால்தான் என் கோழை அச்சத்தின் பொய்ம்மையை வெறுத்தல் முடியும்; இரவில் உறங்கவியலும்!

(இடி. தலையில் மணிமுடியுடனும் கையில் மரக் கிளையுடனும் குழந்தை வடிவில் மெக்பெத்தை நோக்கியவாறு தோன்றுகின்றது மூன்றாம் ஆவி)

என்ன இது? அரசகுலக் குழந்தைப்போல் தோன்றும் இது, தன் சிறு தலையில், அரச முடியை அணிந்திருக் கின்றதே!

மூவரும் : கேள்; பேசாதே!

ஆவியுருவம் 3 : அரிமா போன்று துணிவும் பெருமையும் உடையனாயிரு. சினமூட்டுவார்பால் கவனம் வேண்டா! வஞ்சகஞ் செய்வார் எவரென எண்ணி வருந்துதல் வேண்டா! பெர்னாம் பெருங்காடு, டன்சினேன் பெருங்குன்றம் நோக்கி நகர்ந்து வாராதிருக்கின்றவரை, எவராலும் மெக்பெத்தை வெற்றிகொள்ளல் இயலாது!

(மூன்றாம் ஆவி செல்கின்றது)

þÿAll rights reserved. ª¿. •¿°

(இடி. முதல் ஆவியுருவம் உடலற்ற தலையில் போர்க்கவசத்துடன் தோன்றுகிறது)

மெக்பெத் : அறியவியலா ஆற்றலே, கூறெனக்கு...

மாயக்காரி 1 : உன்னெண்ணம் அதுவறியும்; உன்னிப்பாய் அதனுரைகேள்!

ஆவியுருவம் 1 : மெக்பெத்! மெக்பெத்! மெக்பெத்! மெக்டஃப்பின்கண் விழிப்பாயிரு! ஃபைஃப் பெருமகனிடம் விழிப்பாயிரு! என்னைப் போகவிடு. போதும்!

(ஆவி செல்கின்றது)

மெக்பெத் : நீ யாராயினும் ஆகுக! உன் எச்சரிக்கைக்கு நன்றி! என் அச்சத்தைத் துல்லியமாய் அறிந்து கூறினாய். இன்னும் ஒரு...

மாயக்காரி 1 : உன்னாணைக் கடங்காதே; உற்றுப்பார் மற்றொன்று!
முன்னதினும் ஆற்றலிலே முந்துற்று நிற்பதிது!

(இடி. உடல் முழுதும் குருதி தோய்ந்த குழந்தை உருவில் இரண்டாம் ஆவி தோன்றுகின்றது)

ஆவியுருவம் 2 : மெக்பெத்! மெக்பெத்! மெக்பெத்!

மெக்பெத் : மூன்று செவிகள் எனக்குளவோ? முற்றாய்க் கேட்கின்றது எனக்கு!

ஆவியுருவம் 2 : குருதி வெறியும் துணிவும் உறுதியும் உடையனாயிரு. மனித ஆற்றலை எள்ளி நகைத்திடு!

þÿAll rights reserved. ª¿. •¿°

விட்டாலும் கோட்டைகள்தாம் இடிபட்டுத் தலைகளிலே வீழ்ந்தாலும்; வான் நோக்கும் மாளிகையும் கூர்முனைக் கொடுமுடியும் நிலம் நோக்கிச் சரிந்தாலும், இயற்கையின் அணுத்திரள் அனைத்துமே அடியோடு அழிந்தாலும், அவற்றை அழிப்பனவே அழிவுற்றுப் போனாலும் - நான் வினவிடில், விடையிறுத்திடுக!

மாயக்காரி 1 : பேசு!

மாயக்காரி 2 : கேள்!

மாயக்காரி 3 : விடையிறுப்போம் யாம்!

மாயக்காரி 1 : எம்பால் அறியும் எண்ணமோ? அன்றி;
எம்மருந் தலைவர் இன்மொழி வேண்டுமா?

மெக்பெத் : அழைத்திடுவீர் அவர்களை; காண்கின்றேன் நான்!

மாயக்காரி 1 : ஒன்பானாம் குட்டிகளை ஒவ்வொன்றாய் ஈன்றற்பின்
ஒன்றாய அவற்றைத்தான் ஒருங்குறவே உண்டுவிட்ட
தீக்குணத்துப் பெண்பன்றித் தீக்குருதி கொட்டிடுவீர்!
தூக்குமரக் கம்பத்தில் தோய்ந்தொழுகும் கொழுப்பையெலாம்
விருப்புடனே வழித்தெடுப்பீர்; விரைவுடனே, எரிகின்ற
நெருப்பினிலே வீசிடுவீர் நீர்!

மூவரும் : அளற்றில் மேலோ அதனுள் கீழோ;
விளக்க மாகவே விரைந்து தோன்றுவீர்!

þÿAll rights reserved. ª¿. •¿°

ஹெக்கேட்: உறுபணி முடித்தீர்; உமைமிகப் புகழ்வேன்!
நிறுவினீர் திறனாய்; நீள்பயன் பெறுவீர்!
குறுமைத் தேவர் குறும்ப ரன்ன
விறுவிறு வெனவே விரைவா யாடி
நறுமணப் பொருளிது நலமுற வாக
ஒப்புர வுடனே உயர்மறை யோதிக்
கொப்பரை இசையைக் கூடி இசைமினே!

(இசையும் '**கரிய ஆவிகள்**' என்னும் பாடலும். இதன் பின்னர் ஹெக்கேட் புறப்படுகின்றாள்)

மாயக்காரி 2 : பெருவிரல் தைத்தது; பேயிவண் வருகுது!
வருபவன் யாவனோ; வருகிறான் வழுவுடன்!
வருமவன் தட்டிடின் வாயிலைத் திறமினே!

(மெக்பெத் வருகின்றான்)

மெக்பெத் : கான்தன்னில் கரந்துறையும் கரியன்ன நள்ளிரவு இழிகிழவியரே, இனி எச்செயல் செய்தற்கு முனைகின்றீர்?

மூவரும் : பெயரில்லாப் பெருஞ்செயல்!

மெக்பெத் : உம் பேராற்றலின் தோற்றுவாய் எதுவோ, அதன் பெயரால் எனக்கு விடையிறுக்க வேண்டுகின்றேன். வழிபாட்டு இடங்களெல்லாம் இடியுண்டு வீழுதற்கு வன்காற்றைக் கட்டவிழ்த்துவிட்டாலும், கலமனைத்தும் கடலுள்ளே மாய்வதற்குக் கடும்புயலை ஏவியே விட்டாலும், முற்றுகதிரையெல்லாம் முழுதாய்ப் பாழுறவே செய்தாலும், வான்முட்டும் மரங்களைத் தான் வேரறுத்து நெடுந்தரையில் வீழ்த்தியே

þÿAll rights reserved. ª¿. •¿°

பெருங்கடலில் பிடியுண்ட பெரிதாய அருஞ்சுறவும்
இருளினிலே பிடுங்கிட்ட இரும்பூண்டின்
பெருவேரும்;
பழியுரைக்கும் ஒருயூதர் பருமைமிகு ஈரலுடன்
விழியில்லா ஆட்டினது விறுவிறுக்கும்
பித்தமுந்தான்;
மரத்தினது சிறுதுண்டும் மறைநிலவின் சிம்புகளும்;
தரளதுருக் கியன்மூக்கும் தத்தரியன் உதடுகளும்;
கொடுபரத்தை ஈன்றெடுத்துக் குரல்வளையை
நெரித்துப்பின்
படுகுழியில் வீசிவிட்ட பைங்குழவிச் சிறுவிரலும்;
நல்லாட்டுக் குழம்பினைப்போல் நலமுறவே
கூழாக்கிப்
பொல்லாத வரிப்புலியின் பொசிகின்ற
சுருள்குடலும்;
அனைத்தையுமே கொப்பரையில் அளவினவாய்
அள்ளியிட்டு
முனைப்புடனே பொங்குதற்கு முந்து!

மூவரும் : இருமடங்காம் இருமடங்காம்; இயம்பவொண்ணாக்
கடுமுழைப்பு
பெருநெருப்புப் பற்றிற்று; பெருங்கொதியும்
பொங்குகவே!

மாயக்காரி 2 : தனிப்பெருஞ் செயலிதைத் தகவுற முடிக்குவம்!
நனிமிகு பொருளிதை நலமிகு கடுவனின்
குருதியில் குளிர்ந்திடக் குவித்திடின்
கருதிய வினையிது கனிந்திடும் இனிதே!

(ஹெக்கேட் வருகின்றாள்)

þÿAll rights reserved. ª¿. •¿°

மூவரும் : இருமடங்காம் இருமடங்காம்; இயம்பவொண்ணாக்
கடுமுழைப்பு!
பெருநெருப்புப் பற்றிற்று; பெருங்கொதியும்
பொங்குகவே!

மாயக்காரி 2 : சதுப்புநிலச் சாரைதனின் சால்புநிறை
ஊனினையே
புதுப்பொலிவாய்ப் படைப்பதற்குப் பொறுப்புடனே
பொங்கிடுவோம்.
சிறுபல்லிச் சிறுகண்ணும் செறுதவளைக்
கால்விரலும்;
குறுவெளவால் கருமயிரும் குக்கலதன் நீள்நாக்கும்;
குன்றரவு விரிநாக்கும் குருடாய புழுக்கொடுக்கும்;
வன்பல்லி வரிகாலும் வான்கூகைச் சிறகுகளும்;
பிளவூட்டும் பெருங்குழப்பம் பெருக்குதற்கே
எண்ணிடலால்,
அளற்றினது கூழன்ன அருங்கஞ்சி காய்ச்சுதற்கும்
நனியுறவே கலந்திட்டு நல்மாயஞ் செய்வதற்கும்
இனிதுறவே முந்திடுவோம் இன்று.

மூவரும் : இருமடங்காம் இருமடங்காம்; இயம்பவொண்ணாக்
கடுமுழைப்பு!
பெருநெருப்புப் பற்றிற்று; பெருங்கொதியும்
பொங்குகவே!

மாயக்காரி 3 : சிறைநாகத் திணிசெதிளும் செறுவோநாய்க்
கொடும்பல்லும்;
மறையணங்கின் உறைபிணமும் மாவிலங்கின்
பெருவயிறும்;

þÿAll rights reserved. ª¿. •¿°

# அங்கம் : 4

## காட்சி : 1

(ஒரு *முழைஞ்சு.* அம்முழைஞ்சின் நடுவில், கொதிக்கும் **கொப்பரையின்** அருகில் ***மாயக்காரிகள்*** மூவரும் இருக் கின்றனர். இடி, மின்னல்.)

**மாயக்காரி 1 :** மூன்றுமுறை கத்திற்று முடுகிவரும்
வரிப்பூனை.

**மாயக்காரி 2 :** மூன்றனுடன் இன்னொன்றும் முனகிற்று
முள்ளெலியும்!

**மாயக்காரி 3 :** 'வேளையிது வேளையிது': வீறிட்டான்
வல்லரக்கன்.

**மாயக்காரி 1 :** மெச்சுபுகழ்க் கொப்பரையை மேவுதற்கு
வலம்வருக;
நச்சுடைய பொருளையெலாம் நலமுடனே
நிரப்பிடுவீர்!
பகலிரவாய்க் கல்லடியில் பதைத்திருந்த சிறுதேரை
பகரவொண்ணா நஞ்சினையே பதுக்கித்தான்
வைத்திருக்கும்.
ஒருதிங்கள் நஞ்சுதனை ஒருங்குறவே பெற்றதனால்
அருந்திறத்துத் தேரைகளை அமைவுடனே
தேர்ந்தெடுப்பீர்;
மாயமிகு கொப்பரையில் மகிழ்வுடனே கலந்திட்டுத்
தூயனவாய்ப் பொங்கிடுவோம் துய்த்து!

þÿAll rights reserved. ª¿. •¿°

இரவில் உறங்கலாம்; குருதி தோய்ந்த குத்து வாள்களை விருந்துகளிலிருந்து விரட்டிவிடலாம்; பற்றுறுதியுடன் வழிபாடுகள் செய்யலாம்; நேர்மை மிக்க விருதுகளை நேர்மையுடன் பெறலாம். இப்பொழுது எவையுமின்றிச் சோர்வுற்றிருக் கின்றோம். இந்த அறிக்கையினைக் கேட்டுச் சின மடைந்த மெக்பெத், போருக்கு முனைந்துவிட்டான்.

லென்னக்ஸ் : அவன் மெக்டஃபிற்குக் கட்டளை பிறப்பித் தானா?

பெருமகன் : பிறப்பித்தான். ஆயின் அவன், 'ஐயன்மீர், நான் அல்லேன்!' என்று விடையிறுத்துவிட்டான். சினமுற்ற அத்தூதன் திரும்பியவாறே, 'இத்தகு விடையை அளிக்குமாறு என்னிடம் கூறினாயாதலின், பின்னர் நீ வருந்தப்போகின்றாய்!' என்று முனகிச் சென்றுவிட்டான்.

லென்னக்ஸ் : அது அவன் விழிப்புடன் விலகியிருத்தல் வேண்டும் என்று அறிவுறுத்தியிருத்தல் வேண்டும். வான்தூதர் எவரேனும் அவனுக்கு முன் இங்கிலாந்து அரண்மனை சென்று, துன்பத்தில் உழல்கின்ற நம் நாட்டு விடுதலையை விரைவுபடுத்த முனைதல் வேண்டும்!

பெருமகன் : என் வழிபாடுகளை நான் துணையாய் அனுப்பி வைப்பேன்.

(அவர்கள் செல்கின்றனர்)

þÿAll rights reserved. ª¿. •¿°

மறுத்ததைச் செவிமடுத்த கனிந்த உள்ளமுடையார் எவரே சினமுறாதிருத்தல் முடியும்? எனவே நான் கூறுகின்றேன்: அவன் முறையுடனே நடந்து கொண்டான். டங்கன் மக்கள் அவன் கைகளில் சிக்குண்டு நிலவறைச் சிறைகளில் சிறைப்பட்டிருப் பின் - இறைவன் அருளால் அவ்வாறு நிகழவில்லை -அவனால் இயலாது - அவர்கள், தம் தந்தையைக் கொன்றவர்கள் நிலை என்னவாயிற்று என்பதை அறிந்துகொண்டிருப்பர். ஃப்ளீன்ஸூம் அவ்வாறு தான். ஆயின், எல்லாம் போதும். தான் கூறிய சொற்களாலும் அக்கொடுங்கோலன் விருந்துக்கு வாராமையாலும் மெக்டஃப், இழிவினனாய் வாழ்கின்றான். அவன் எங்கே போனான் என்று நீயிர் அறிவீரா?

மெருமகன் : அந்தக் கொடுங்கோலன் எவன் அரியணையை உரிமையின்றிக் கைப்பற்றினானோ அந்த டங்கன் மகன், இப்பொழுது ஆங்கிலேயர் அரண்மனையில் வாழ்கின்றான். இறைப்பற்று மிகுந்த மன்னன் எட்வர்ட், அவனைப் பெருந்தன்மையுடன் பேணி வருகின்றான். அதனால், அவன் ஊழ்வினை அவன் தகுதியைக் குறைத்துவிடவில்லை. நார்தம்பர்லாந்துக் கோமகனாகிய - போர் விருப்புடைய சீவர்ட் என்பாரைத் தூண்டித் தனக்கு உதவி செய்யுமாறு அத்தெய்வத் திருநிலை மன்னனிடம் கூறவே, மெக்டஃப் அங்குச் சென்றிருக்கின்றான். இறைவன் துணை பெற்றிருக்கும் அவர்கள் உதவியுடன் நாம் மீண்டும் நம் விருந்தினர்களை மகிழ்விக்கலாம்;

þÿAll rights reserved. ª¿. •¿°

## காட்சி : 6

(ஃபோர்ரெஸ் நகர் மாளிகை. லென்னக்ஸ், பெருமகனார் ஒருவருடன் உரையாடுகின்றார்)

லென்னக்ஸ் : (வஞ்சகப் புகழ்ச்சியுடனும் எச்சரிக்கையுடனும்) நான் கூறுவன உமது கருத்துகளுடன் ஒத்திருக்கின்றன. எனவே நீயிரே மேலும் விரிவாய் உணர்ந்து கொள்ளலாம். நான் இதனை மட்டுந்தான் கூறுவேன். எல்லாம் வியப்புறும் வண்ணம் மாறிப் போயின. பெருந்தன்மையினன் டங்கன்பால் மெக்பெத் பெரிதும் இரங்கலுற்றான்; அவன் இறந்தான். பின்னர் அந்தத் துணிவுமிக்க பேங்கோ, மிகவும் காலந்தாழ்த்தி நடந்து வந்தான். உமக்குத் தோன்றிடின், நீயிர் ஃப்ளீன்ஸே அவனைக் கொன்றான் என்று கூறலாம். ஏனெனில், ஃப்ளீன்ஸ் தப்பிவிட்டான். உண்மையில் மனிதர்கள் இரவில் காலந்தாழ்த்தி நடந்து வருதல் கூடாது! மால்கமும் டோனல்பெய்னும் அவர்கள் தந்தையைக் கொன்ற செயல், எத்துணை அரக்கத்தனமிக்கதென்று எவரே கருதார்? அது பெரிதும் வெறுப்பூட்டுஞ் செயல்! அது மெக்பெத்தை எவ்வளவு துயருள் ஆழ்த்திற்று! உடனே அவன், தன் இறைப்பற்றின் சீற்றத்தால், குடிக்கு அடிமைகளாகி உறக்கத்தில் உணர்வற்றிருந்த அந்த முருடர்களை வாளால் வெட்டி வீழ்த்தவில்லையா? அது பெருந்தன்மைமிக்க செயலன்றோ? ஆம், கூர்த்த அறிவுடைச் செயல்! அவர்கள்

þÿAll rights reserved. ª¿. •¿°

ஏற்றமுடன் துளியதனை ஏந்தியேநான்
கொணர்ந்திடுவேன்,
தேற்றமுடன் கொப்பரையில் தெளித்துவிட
மறவாதீர்!
மறைபொருளும் மருவினிய மாயத்தூள் தானுமிட்டு
நிறைவுடைய மணித்துளியை நீருடனே
கலந்துவிடின்,
ஐயவுரு அமைவுறவே ஆவிபல தோன்றிவிடும்;
மயக்கமுறு மன்னன்றன் மனத்தையெலாம்
மறுகலாக்கும்!
ஊனமுறு உள்ளத்தால் ஊழினையே உதைத்திடுவான்;
ஈனமுறு எண்ணத்தால் இறப்பினையே
இகழ்ந்திடுவான்!
மெய்யறிவு பேரச்சம் மேலாய பண்பையெலாம்
சாய்த்திட்டே நம்புதலில் சாய்ந்திடுவான்
நொடியினிலே!
அளவிறந்த நம்பிக்கை ஆழ்குழியில் ஆழ்த்திவிடும்;
விளக்கிடலும் தேவையில்லை; விளக்கமுற நீரறிவீர்!

**(இசையுடன் 'விரைந்து வா விரைந்து வா' என்னும் பாடல் ஒலிக்கின்றது)**

மூடுபனி முகிலிடையே முன்னிற்கும் என்தோழி
தேடுகிறாள் கேட்டிடுவீர் தேர்ந்து!

**(பறந்து செல்கின்றாள்)**

**மாயக்காரி 1 :** விரைந்து வருவீர்; விரைந்து வருவீர்!
விரைவில் அவள்தான் விரைந்து வருவாள்!

**(மூவரும் மறைகின்றனர்)**

þÿAll rights reserved. ª¿. •¿°

உய்யுவினை நானுரைப்பேன் உணர்வுடனே
கேட்டிடுவீர்:
துரிதமுடன் புறப்படுவீர்; தூயவினை யாற்றிடுவீர்.
எரியேரி சென்றிடுவீர்; எனையங்குக் கண்டிடுவீர்!
நாளைவரும் வைகறையில் நமைக்காண
அவன்வருவான்;
வேளைவரும் போதினிலே விழிப்புடனே
இருந்திடுவீர்!
பெருங்காவல் ஏதுமின்றி பெருமையுடன்
வருகின்றான்;
வருங்காலம் அறிதலுக்கு வடுவுடனே வருகின்றான்.
கொதிக்கின்ற கொப்பரையில் கொட்டிடுவீர்
மறைமொழியை!
உதிக்கின்ற கதிர்காணின் உமைவிட்டு
நான்மறைவேன்.
அயர்வுற்ற உடலினுக்கே அமைதிதரும் இன்றிரவு
துயர்மிகுந்த இறப்பொன்றைத் துல்லியமாய்
அறிந்திடுவேன்.
ஊளையிடும் ஓநாய்கள் ஊனுண்ணப் போனபின்னர்
நாளைவரும் நண்பகலில் நாட்டமிகு செயல்நிகழும்!
விண்ணிடையே வீசுகின்ற விரிநிலவின் கோடியிலே
மண்ணிடையே வீழ்வதற்கு மல்கும்நீர்த்
துளியொன்று
முகிழ்த்திருத்தல் அறிந்திடுவேன். முத்தனைய
அத்துளிதான்
நெகிழ்வுற்று விரைந்தோடி நிலத்தினிலே
விழுமுன்னர்

þÿAll rights reserved. ª¿. •¿°

## காட்சி : 5

(புதர் படர்ந்த சமவெளி. இடியொலியி னிடையே மாயக்காரிகள் மூவரும் தம் அரசி ஹெக்கேட்'டைக் காண்கின்றனர்)

**மாயக்காரி 1 :** நாடிவரும் ஹெக்கேட்டே, நல்வரவு நவில்கின்றேன்!
கூடிவருந் திருநாளில் கொடியசினம் எற்றுக்கு?

**ஹெக்கேட் :** அடுக்காக வெறுக்கையினை அளிக்கின்ற இழிகிழவி
கடுஞ்சீற்றம் அடைவதற்குக் கரணியமும் உளதோசொல்!
வன்மையினன் மெக்பெத்தின் வருங்காலம் உரைப்பதற்கே
இன்புதிரும் இறப்பினது இழிவுந்தான் இயம்பலுற்றாய்!
உம்மினத்துத் தலைவியினள் உஞ்செயலில் உறவாடி
விம்மிதமாய் வெற்றியினில் விரவிடவுங் கூடாதோ?
வெறியுணர்வு முந்துற்று வெகுள்கின்ற மனமுடையோன்;
நெறியில்லாச் செயலாற்றி நேர்மையினை நெரித்திடுவோன்;
தன்னலத்தைப் பேணுமந்தத் தறுகண்மை யாளன்றான்
உன்னலத்தைப் பேணுதற்கும் உறுதிமொழி புகல்வானோ?
செய்தவினை திருத்துதற்கே செவ்வியது நிகழ்த்திடுக!

þÿAll rights reserved. ª¿. •¿°

மெ.பெருமாட்டி : இங்கு வருதல் வேண்டும் என்று அவனுக்குக் கட்டளை பிறப்பித்தீர்களா?

மெக்பெத் : செய்திகள் பல என் செவிகளுக்கெட்டுகின்றன. அவனுக்குக் கட்டளை பிறப்பிப்பேன். அவன் இல்லங்கள் அனைத்திற்கும் ஓர் ஒற்றனை அமர்த்தி யிருக்கின்றேன். நாளை, முன்னரே சென்று அம்மாய மிகு உடன் பிறப்பினரை மீண்டும் காண்கின்றேன். அவர்கள் எனக்கு இன்னுங் கூறுதல் வேண்டும். எவ்வகையிலேனும் எல்லாவற்றையும் நானறிதல் வேண்டும். என் விருப்பங்களுக்குத் தடையென எதுவும் இருத்தலாகாது. என் வழி குருதி படிந்த வழி. இப்பொழுது முன்னேறுதலை நிறுத்தித் திரும்பி னேனாயின், அது முன்னேறுதலினும் எளிதாயிராது! என் தலையினுக்குள் திட்டங்கள் சில உருப் பெற்றிருக்கின்றன. அவற்றை ஆராய்தற்கு முன்னரே முடித்தல் வேண்டும். எண்ணுதற்கு முன்னரே செயல் முடித்தல் வேண்டும்!

மெ.பெருமாட்டி : உயிரினம் அனைத்திற்கும் இன்றியமையாது வேண்டப்படுவது இப்பொழுது உங்களுக்குத் தேவை. அதுதான் உறக்கம்.

மெக்பெத் : வா, நாம் உறங்கச் செல்வோம். நான் காணும் மாயமெல்லாம் புதிதாய்த் தொடங்குவார்தம் அச்சம் போன்றது. எனக்குச் செயலறிவு தேவை. நாம் இப்பொழுதுதான் தொடங்கியிருக்கின்றோம்.

(இருவரும் செல்கின்றனர்)

þÿAll rights reserved. ª¿. •¿°

வண்ணம் மாறாமல் பேணுதற்கு உன்னால் இயல்கின்றது; என்னுடையன அச்சத்தால் வெளிறுகின்றன.

ரோஸ் : என்ன காட்சிகள், பெரும?

மெ.பெருமாட்டி : அன்பு கூர்ந்து எதுவும் பேசுதல் வேண்டாம். அது அவர் நிலையை இன்னுஞ் சீர் குலைக்கும். வினாக்கள் அவரை வெம்மையுறச் செய்யும். எல்லாரும் இனிதே சென்று வருக. மரபுப் பிரியாவிடை தேவையில்லை. விரைந்து செல்க!

(அவர்கள் செல்கின்றனர்)

லெனக்ஸ் : சென்று வருகின்றோம். மன்னர் உடல் நலம் பெறுவராக!

மெ.பெருமாட்டி : நலமே சென்று வருக.

மெக்பெத் : அது குருதியைப் பெறும். குருதி, குருதியையே பெறும் என்பர். கல்லறைகள் நகர்ந்திருக்கின்றன. மரங்கள் பேசியிருக்கின்றன. ஓயாது ஒலியெழுப்பும் பறவை வகை இனமும் காகங்களும் கொலைஞர் - தம் மறைசெயல்களைப் புலப்படுத்தியிருக்கின்றன. இரவு மணி என்ன?

மெ.பெருமாட்டி : பொழுது புலர்கின்ற வேளை. கூறுதல் கடினம்.

மெக்பெத் : மெக்டஃப் நம் அழைப்பினைப் புறக்கணித்தது குறித்து நீ என்ன கருதுகின்றாய்?

þÿAll rights reserved. ª¿. •¿°

மெ.பெருமாட்டி : நலஞ்சார்ந்த பெருமக்களே, இதனை முற்றிய நோயெனக் கருதுக. இது அத்தகையதுதான். ஆயின், இன்ப வேளையை இது குலைக்கின்றது.

மெக்பெத் : (ஆவியை நோக்கி) மனிதன் எதிர்ப்பதை நான் எதிர்ப்பேன்! முருட்டு ரஷ்யக் கரடியென - கவசமன்ன உடல் படைத்த காண்டா விலங்கென - ஹைர்கேனியா மாநிலத்துப் புலியென - உன் இயற்கைத் தோற்றத்தை விடுத்து நீ எவ்வுரு எடுப்பினும், என் மனவுறுதி குலையாது! அன்றி, மீண்டும் உயிர் பெற்றுப் பாலைவெளியில் என்னைப் பகைக்க வா! அக்காலை, நான் செயலிழந்து வீழ்வேனாயின், என்னை ஒரு பெண் குழந்தையெனக் கூறிடு! கொடுமைமிகு நிழலுருவே, சென்று விடு! உண்மையற்ற போலியே, அகன்று போ!

(ஆவி செல்கின்றது)

ஏனிந்த மாற்றம்? அது மறைந்ததும் நான் மீண்டும் மனிதனாகின்றேன். (விருந்தினரை நோக்கி) அன்பு கூர்ந்து உமது இருக்கைகளில் அமர்வீர்!

மெ.பெருமாட்டி : (கடிந்து) உங்கள் ஒவ்வாச் செய்கையால் மனமகிழ்வை மடித்தீர்கள்; உவகையூட்டும் ஒன்று கூடலை உருக்குலைத்தீர்கள்!

மெக்பெத் : முதுவேனிற் காலத்தில் மூட்டமிடும் முகில் போன்று, நாம் திகைப்புறா வண்ணம் நிகழ்கின்ற இந்நிகழ்ச்சிகள் யாவும் நடைபெறக் கூடியனவா? நீ என்னையே ஐயுறச் செய்கின்றாய். இத்தகு காட்சிகளைக் காணினும் உன் கன்னங்களின் இயற்கை



þÿAll rights reserved. ª¿. •¿°

ஷேக்ஸ்பியரின்

# மெக்பெத்



புதுமைதாசன்

R SIN

All rights reserved.